விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 08 ஞாயிற்றுக்கிழமை (24.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு கடும் சவால்

## காத்திருப்பதாக சுட்டிக்காட்டு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை கடும் சவால்களை எதிர்நோக்க நேரிடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர அணுகுமுறையின் வெளிப்பாடே கமரூனின் கருத்து

### இந்திய உயர்மட்டம் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்த கருத்துகள், தென்னாசியா தொடர்பிலான அந்நாட்டின் இராஜதந்திர அணுகுமுறையின் வெளிப்பாடு என இந்திய மத்திய அரசின் உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், இவ்விடயத்தில் பிரித்தானியா போன்று இந்தியா செயற்படவில்லை எனவும், அது தொடர்பிலான இந்தியாவின் அணுகுமுறை வேறுபட்டது எனவும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாதமை, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இருநாடுகளுக்கும் இடையிலான உறவில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என 23-ம் பக்கம் பார்க்க

## பிரதமரை தலையிட ஜெயலலிதா வலியுறுத்தல்



(சென்னை)

தமிழகமீனவர்கள்மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களை தடுக்க பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாகதலையிட வேண்டும் என்று தமிழ்நாடு 23-ம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்தனர்

### கரவெட்டியில் நேற்றுப் பதற்றம்

(கரவெட்டி)

பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் கரவெட்டி மேற்கு இராஜகிராமப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் ஒருவரை கைது செய்யும் பொருட்டு வீட்டுக்குள் திடீரென உள்நுழைந்த பொலிஸாருக்கும் வீட்டில் இருந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினாலேயே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் அதேயிடத்தினைச் சேர்ந்த கண்ணன் தனுசயா (வயது - 15), கண்ணன்சிவலட்சுமி (வயது 39), சுமன் புஸ்பராணி (வயது - 36) ஆகிய மூவருமே படு காயமடைந்த நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் அவரது உறவினர்கள் சிலர்சிறுசிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 23-ம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கில் உள்ள வீடுகள் மீண்டும் உடைக்கப்படுகிறது

### துணைத் தவிசாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலைக்கு மேற்கு பக்கமாக உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொது மக்களின் வீடுகளை இராணுவத்தினர் மீண்டும் இடித்து அழிக்க ஆரம்பித்து விட்டனர் என வலி வடக்கு பிரதேச சபை துணை தவிசாளரும் வலி வடக்கு மீள்குடியேற்ற தலைவருமான எஸ்.ரஜீவன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொது மக்களின் வீடுகள் இராணுவத்தினரால் இடிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையையடுத்து பொது மக்களின் வீடுகள் உடைக்கப்படுவது நிறுத்தப்பட்டது.

எனினும் நேற்றைய தினம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு மேற்கு பக்கமாக உள்ள பொது மக்களின் வீடுகளை படையினர் மீண்டும் உடைக்க ஆரம்பித்துவிட்டனர்.

பொதுநலவாயமாநாடு நடைபெறும் காலத்தில் 23-ம் பக்கம் பார்க்க

## புலனாய்வாளரின் செயற்பாட்டால் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### நிறுத்தக் கோருகிறார் மன்னார் ஆயர்

(மன்னார்)

வடக்கில் இடம்பெறும் புலனாய்வாளர்களின் அடாவடித்தனங்களை உடன் நிறுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் அடிகளார் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனிதாபிமானப் பணியாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களைக் கண்டித்து மன்னாரில் இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

காணாமல்போன உறவுகள் தொடர்பில் அவர்களின் குடும்பத்தினர் நடத்தும் போராட்டங்களில் முன்னின்று செயற்படும் மன்னார் 24-ம் பக்கம் பார்க்க

up to 25%
CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
(C-5549)
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

## கவனயீர்ப்பில் தாக்குதல் மனித உரிமை குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த போது அவரின் கவனத்தையீர்க்கும் நோக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்களினால் கடந்த 15-ம் திகதி யாழ்.பொதுநூலக பகுதியில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த மதகுருமார், பெண்கள், முதியவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் பொலிஸாரினாலும் இராணுவப் புலனாய் 24-ம் பக்கம் பார்க்க

நடுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸாரின் செயற்பாடுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகள் நூற்றுக்கு 100 வீதம் சரியாக இடம்பெறுவதாக கூற முடியாது என முன்னாள் பொலிஸ்மா அதிபரும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணையாளருமான ஆர். ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் யாழ். கிறீன்கிராஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 20 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இந்தப் பொலிஸ் நிலையங்களில் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

தடுத்து வைத்திருப்பவர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மீது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால் அது தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் எல்லா பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் தமிழ் மொழியில் எடுக்கப்படுவதில்லை. அத்தோடு முறைப்பாடுகளை பதிவு செய்யாது காலதாமதப்படுத்துவது தொடர்பாகவும் முறைப்பாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைப்பது உண்டு.

இவ்வாறான குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாது. இதனை நிவர்த்தி செய்ய இன்னும் ஒரு சில ஆண்டுகள் எடுக்கக்கூடும்.

மேலும் பொலிஸாரின் செயற்பாடுகள் நூறு வீதம் சரியாக இடம் பெறுவதாக கூற முடியாது எனவும் பல குறைபாடுகள் இன்னும் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் கடந்த சில வருடங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் மடத்தடிப் பகுதியில் இளம் பெண்ணொருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை காலை கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பெண் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் காணாமல் போயுள்ளார். இதனையடுத்து உறவினர்கள் தேடியவேளை, 8.30 மணியளவில் வீட்டிற்கு அண்மையிலிருந்த கிணற்றிலிருந்து அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து உறவினர்களால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் சடலத்தை நேற்று காலை கிணற்றிலிருந்து மீட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறிதரன் சிவாஜினி (வயது 34) என்ற இளம் பெண் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர திருமணம் செய்த நிலையில், அவரது கணவர் 3 மாதங்களிலேயே இறந்து விட்டார்.

இதன்காரணமாக மனநிலை பாதிக்கப்பட்ட குறித்த பெண் ஆறு மாத காலம் தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று கடந்த சில மாதங்களுக்கு முன்னரே வீடு திரும்பினார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இது கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-9-23)


## வேலைவாய்ப்பு-வட மாகாணம்
## Administrative & Management

மாதம் ரூ.60000.00 வருமானத்துடன் கௌரவமான உயர் பதவியில் நிரந்தரமாக இருக்க (Administrative & Management) விருப்பமா? சர்வதேச ரீதியில் இயங்கும் (Head Quarters USA-California) அதன் இலங்கையின் வட மாகாணத்திற்கான வெற்றிடங்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா)

சந்தைப்படுத்தல் துறையில் (Excutive) அனுபவமுள்ளவர்களும், ஆர்வமுள்ளவர்களும், வங்கிகளில் (Bank) பயிற்சி பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம். (ஆண்/பெண் இருபாலாரும்)

- 3-6 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அடிப்படைச் சம்பளத்துடன் (Basic Salary with ETF, EPF) தொழில் நிரந்தரமாக உறுதிப்படுத்தப்படும். (Appointment letter வழங்கப்படும்.)

(சி-5558)

73, St.Annes Church Road,
Chundikully, Jaffna.
0777274795/0215686466

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829

(சி-5541)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5528)

## தேவை

தலைநிமிர்ந்து வாழ நிரந்தர தொழில்வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/பிஸ்கட்/தேயிலை/தண்ணீர்ப் போத்தல்/கோழி இறைச்சி/ஆடை/பால்மா போன்ற தயாரிப்புகளுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் 18000/-, 38000/-(தொழில் அடிப்படையில் சம்பளம்) உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகை அன்றோ வேலை வாய்ப்பு (நண்பர்கள் + குழு + தம்பதியினர்)

தொடர்பு: 0775561883/0778430179

(சி-5547)

## இதுவும் திசைகாட்டியின் சமூக நோக்கோடு கூடிய கைங்கரியமாகும்

யாழ்ப்பாணத்தில் ஆபரண வடிவமைப்பு இலவச பயிற்சி நெறி-அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுடன் தொழில் தொடங்க கடன் வசதிக்கு ஆலோசனைகளும்

படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளே! முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம் உங்களுக்காக நடத்தும் மேற்படி பயிற்சி நெறியில் பங்குகொண்டு பயன் பெறுங்கள்.

- O/L சித்தி - ஆண், பெண் பங்கு பெறலாம்.
- உணவு, தேநீர் இலவசம் (வேறு எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது)
- 30 பேர் மட்டும்
- பயிற்சி 08.12.2013 யாழ்.நகரில் ஆரம்பமாகி 5 நாட்கள் இடம்பெறும்.
- பயிற்சி முடிவில் தொழில் தொடங்குவதற்கான உபகரணங்கள் நிதி நிறுவனங்களில் கடன் வசதிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும்.

தொடர்பு:
021790 4941
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



(சி-5560)

## சேவை முகவர்
## காணிகள், வீடு விற்பனைக்கு

கோயில் வீதி, மணல்தறை லேன், கென்னடி லேன், வைமன் வீதி, ஊரெழு, புன்னாலைக் கட்டுவன், கொக்குவில், புதிய தென்னம்தோட்டம் 21 பரப்பு சாவகச்சேரியில்
யாழ்.நகரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

V.சுந்தரம் - 0774819801

(4575)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1532

## விற்பனைக்கு

நம்பர் 1 நியூபேனார்ட் (New Bernards), கிறீன் வலி (Green Valli), ஊர்க்கோழிக் குஞ்சு ஆகிய கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (சி-5551)

தொடர்புகளுக்கு :- செல்வரெட்ணம்
0778448295, 0776176370

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை

1. எழுதுவினைஞர் (பெண்-முழுநேரம்)
   - க.பொ.த உயர்தரம் (கணித, விஞ்ஞான பிரிவிற்கு முன்னுரிமை)
   - கணணி அறிவு
2. வகுப்பறை மேற்பார்வையாளர் (ஆண்-முழுநேரம், பகுதி நேரம்)
   - வயதெல்லை 40-55

26.11.2013 செவ்வாய்க்கிழமை அன்று பி.ப 3.30-5.30 நேரில் வரவும்.

NEW SCIENCE WORLD, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் - 077 3364 055

(4572)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் மேசன்/செடலின் பாஸ்/ கம்பிபாஸ/ பெயின்டர் (1200/- மேல்) கையுதவியாளர் (900/- மேல்) (கொழும்பை அண்மித்த பிரதேசங்கள்/யாழ்./ உடையார்கட்டு/ திருகோணமலை/ கண்டி/ கிளிநொச்சி)
மாதசம்பளம், தினமும் கைசெலவுண்டு. வருகை அன்றே வேலைவாய்ப்பு.

தொடர்பு: 0775561883

(சி-5546)

## அகவை 69இல் அகமகிழ்ந்து வாழ்த்து



சைவசித்தாந்த ஞானபானு
சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P
(வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் பிரதம குரு)

அம்பிகை அருட்பொழிவுடன் மங்கலம் பொங்கும் இந்நாளில் அருள் நிறைவு பெற்று பொருள் செறிந்து தும்பளை ஸ்ரீ நெல்லண்டை பத்திரகாளியம்மன், நெல்லண்டை ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன், வல்வை.முத்துமாரியம்மன் அருள் பெற்று நீடூழி காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துக் கூறும்:

சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
(B.A.Dip.in Edu.M.A) பிரதியதிபர் யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை, நெல்லண்டை பத்திரகாளியம்மன் ஆதீன முதல்வர்

(சி-5554)

## வடக்கின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் இளைஞர்களை பங்குதாரர் ஆக்கும் செயற்திட்டம்

நீங்களும் எம்மோடு 2014 இணைந்து கொள்ளலாம்

தேசிய பிரபல பயண ஒழுங்கமைப்பு நிறுவனம்
Nation Popular Travels & Tours
නේෂන් පොපියුලර් ට්‍රැවල්ස් ඇන්ඩ් ටුවර්ස්

தமிழர்களின் தனித்துவ அடையாளத்தினை இளைய தலைமுறையூடாக உலக அரங்கிற்கு வெளிப்படுத்தும் செயற்திட்டம்

#128, Brown Road Jaffna. Sri Lanka
HotLine:0094(0)214920920
E-mail:online@nationtravels.com
nationtravels12
www.nationtravels.com
https://www.facebook.com/nationtravels
http://www.youtube.com/nationtravels

## NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER

Tel: 021 222 4459, 0772533390. Fax : 222 4460

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2GB Micro SD: 500 | 16GB Pendrive: 1850 | USB Keyboard From : 485 | 2.1 Woofer from : 2200 | Intel D.C Processor: 8550 | 19"AOC, Samsung, HP, LG, View sonic Led From: 12,350/= |
| 4GB Micro SD: 650 | 7.2Mul.Dongle: 2950 | Optical Mouse From : 270 | Laptop Woofer : 1400 | Intel I-7 M. Board: 7950 | |
| 4GB Pendrive : 950 | 20M.Pixel Webcam:900 | Wireless Key & Mouse: 1850 | Techfine UPS 650W : 4475 | 500GB Hard Disk: 7600 | |
| 8GB Pendrive : 1200 | Headphone From : 300 | Notebook Coolarpad : 875 | Matrix UPS Battery : 1650 | 1000GB Hard Disk:11250 | |
| | | | Laptop Charger from: 1575 | 2GB Kingstan Ram: 3350 | |
| | | | Lap Original Charger: 2250 | LG Dvd Writer: 2775 | |
| | | | Wireless 4port Router: 5450 | ATX Porch Casing: 2575 | |
| | | | Original Toners From: 4250 | 1 User Kaspersky: 1500 | |

(c-5556)

No:328, Stanly Road, Jaffna. (Near to DMI Institute) No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel)

# கடன் பொறியில் சிக்கியது இலங்கை; விரைவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும்

## எதிர்க்கட்சி தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு) —

**அரசாங்கம் அரசியலமைப்பை மீறும் வகையில் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் நாடு கடன் பொறியில் சிக்கியுள்ளது. இவற்றை ஈடுசெய்ய அரசாங்கம் வர்த்தக கடன்களை பெற்று விடுவதனால் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் எனவும் அவர் கூறினார். அத்தோடு 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு தட்ட உரையை பகிஷ்கரித்ததற்கான காரணத்தையும் விளக்கினார்.

வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முன்னர் நடு வருட இறை அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது அரசியலமைப்பிலுள்ள சட்ட ஏற்பாடாகும். அரசாங்கம் உரிய நேரத்தில் 2013 இன் நடு வருட இறை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

இப்போதுதான் இந்த அறிக்கையை அரசாங்கம் தந்துள்ளது. இதிலும் ஜூன்வரையான 6 மாத கால வபரங்கள் இல்லை எனவும் ஏப்ரல் மாதம் வரையுமே விபரங்கள் உள்ளன எனவும் இதன் மூலம் அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்த வரவு செலவு திட்டத்தில் மக்களுக்கு எந்தவிதமான நிவாரணத்தையும் அரசாங்கம் வழங்கவில்லை. அடுத்த வருடம் மக்கள் மீது இன்னும் பல சுமைகள் ஏற்றப்படும்.

பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டினால் உண்டான செலவுகளை மக்களே செலுத்த வேண்டி வரும். அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் நாடு கடன் பொறியில் சிக்கிவிட்டது.

அரசாங்கம் வர்த்தக கடன்களை பெற்று விடுவதனால் மிகமோசமான பொருளாதார வீழ்ச்சி ஏற்படும.

இதேவேளை, கந்தானை பகுதியில் ஐந்து பெரிய சூதாட்ட நிலையங்களை அமைக்க அரசாங்கம் இரகசியமாக திட்டமிட்டுள்ளது.

மேற்படி இரகசிய திட்டத்திற்கு முதலீட்டு சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

தனது உரையின்போது விக்ரமசிங்க இந்த சூதாட்ட திட்டம் தொடர்பான இரகசிய தகவல் ஆவணமொன்றையும் சபையில் காட்டினார்.

இந்த ஆவணத்தின்படி, இத்திட்டம் மூலோபாய அபிவிருத்தித் திட்டமென வகைப்படுத்தப்பட்டுள்ளது. 5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு வரிச்சலுகையும் வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் அரசாங்கம் தனக்கு விருப்பமான ஆட்களுக்கு சூதாட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருகின்றது.

சிங்கப்பூரில் அனுமதிப்பத்திரங்களை ஏலத்தில் விற்பதனால் அரசாங்கம் பெரும் வருமானத்தை பெறுகின்றது. அங்கு ஓர் அனுமதிப்பத்திரத்தின் குறைந்த பட்ச விலை 100 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

இதே முறையை அரசாங்கம் பின்பற்றினால் குறைந்தபட்சம் இலங்கைக்கு வருமானமாவது கிடைக்கும். ஆனால் கந்தானை சூதாட்ட திட்டத்தின் மூலம் வருமானம் கிடைக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நாட்டைத் துண்டாடும் பகல் கனவில் ஐக்கிய தேசியக் கட்சி மிதக்கிறது

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

வெளிநாட்டு அழுத்தங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றி நாட்டைத் துண்டாடும் பகற் கனவிலேயே ஐக்கிய தேசியக் கட்சியினர் மிதப்பதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

அடுத்த வருடம் தேர்தல் நடக்கப் போவதாகவும் அதில் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமெனவும் எண்ணிக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுவதாகத் தெரிவித்த அவர் மக்கள் ஆதரவு அரசாங் கத்துக்கே உள்ளதென்பதை அக் கட்சி மறந்துவிட்டதெனவும் தெரிவித்தார்.

புலிகளுக்கு நாட்டைத் தாரை வார்க்கத் துணிந்த ஐக்கிய தேசியக் கடசி வெளிநாட்டு அழுத்தங்களுடன மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி தனது எண்ணத்தை நிறைவேற்ற காத்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் அத்தகைய சிந்தனையில் செயற்படுபவர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பு ஒருபோதும் விளங்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் அபிவிருத்தியிலும் பொருளாதாரத்திலும் நாட்டைக் கட்டியெழுப்பும் பாரிய செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளது. 14 ஆயிரம் கிராமங்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'திவிநெகும' வாழ்வெழுச்சித் திட்டம் வறுமையை ஒழிப்பதிலும் தேசிய உற்பத்தியிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அபிவிருத்தி பற்றி பேசும்போது மேல் கொத்மலை, நுரைச்சோலை போன்ற மின்சார உற்பத்தித் திட்டங்கள் ஐ. தே. க. காலத்திலேயே மிகக் குறைந்த செலவில் மேற்கொண்டிருக்க வேண்டிய திட்டங்களாகும் ஆனால் அந்த அரசாங்கம் அதனைச் செய்யாததால் தற்போது எமது அரசாங்கம் பெரும் நிதிச்செலவில் இத் தட்டங்களை மேற்கொள்ள நேர்நதது.

இதன் மூலம் தற்போது தினமும் 300 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிவதுடன் மின்சார சபையின் நட்டத்தையும் ஈடுசெய்ய முடிந்துள்ளது. அரச ஊழியர்களின் சம்பளம் குறித்து குரலெழுப்பும் ஐ.தே.க. அதன் ஆட்சிக் காலத்தில் அரச ஊழியர்களின்எண்ணிக்கையை ஆறு இலட்சமாகக் குறைக்க நடவடிக்கை எடுத்தது.

எனினும் எமது அரசாங்கமே அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளத் தொகையை 11ஆயிரமாக அதிகரித்தது. மேலும் நகர்ப்புற வீடமைப் புத் திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் வீடுகளையும் தோட்ட வீடமைபபுத் திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் வீடுகளையும் அரசாங்கம நிரமாணித்து வருகிறது. ஐ. தே. க. ஆடசிக் காலத்தில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டனவா என நான் கேட்க விரும்புகிறேன் என்றார். (அ-2)


www.wisdombusiness.com

விஸ்டம் கொழும்பு | இலங்கையில் CIMA கற்கை நெறிக்கான மாபெரும் கல்வி நிறுவனம்

விஸ்டம் யாழ்ப்பாணம் | வடக்கின் CIMA கற்கை நெறிக்கான மாபெரும் கல்வி நிறுவனம்

CIMA
Chartered Institute of Management Accountants

உங்களுக்கு தெரியுமா..?

கடந்த மாணவ அமர்வில் சுமார் 150 இற்கும் அதிகமான மாணவர்களின் ஏகோபித்த நம்பிக்கையை வென்றது எமது யாழ் நகரின் விஸ்டம் நிறுவனமாகும்

அப்படியானால் உங்களது தெரிவு..?

இன்றே விண்ணப்பியுங்கள்

CIMA Operational Level @ Wisdom
ஆரம்பிக்கப்படும் திகதி 2013 டிசம்பர் 07

CIMA Management Level @ Wisdom
ஆரம்பிக்கப்படும் திகதி 2013 டிசம்பர் 07

CIMA Strategic Level @ Wisdom
ஆரம்பிக்கப்படும் திகதி 2014 ஜுன்

எமது நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினை தன்னகம் கொண்ட விரிவுரையாளர்கள்


திரு. எஸ். மயூரன்
B.Sc. Eng. (Hons), CIMA exam complete


திரு. பி. நிரஞ்சன்
B.Sc. (Finance) (spl), MAAT, ICASL finalist


திரு. ரீ. கணாதீபன்
[LLB, CIMA exam complete]

மற்றும் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பிரிவில் மிகவும் அநுபவம் வாய்ந்த விரிவுரையாளர்

விசேட சலுகை AAT கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு

கற்றலுக்கான கடன் வசதிகள்** ஒவ்வொரு நிலைக்கும் மாதம் ரூ.1,200/-
HNB FUTURA HSBC ASIA ASSET

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுன் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில்)
E : info@wisdombusiness.com
021 2 220 727
021 7 200 777
(ச/5538)

# 35 நாடுகள் பங்கேற்கும் கடல்சார் கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் ஆண்டு தோறும் நடத்தி வரும் அனைத்துலக கடல்சார் பாது காப்பு கருத்தரங்கான காலி கலந்துரை யாடல் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலி வெளிச்ச வீட்டு விடுதியில் நடை பெறும் இந்த இரண்டு நாட்கள் கருத்தரங்கின் ஆரம்ப நாளன்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச முக்கிய உரை நிகழ்த்த வுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் எழுச்சி பெறும் கடல்சார் திருப்பங்கள் என்ற தொனிப்பொருளில் இவ்வாண்டு கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரி வித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் 35 நாடுகள் பங் கேற்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (அ-2)

## செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் கழிப்பறை வசதி

(யாழ்ப்பாணம்)

உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வறுமைக் கோட்டிற்குட்பட்டு கழிப்பறை வசதி களற்றிருப்பவர்களுக்கு அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில், தெல்லிப்பழை பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் கழிப்பறை வசதிகளற்ற குடும்பம் ஒன்றுக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கமைய கழிப்பறை அமைத்துக் கொடுக்கப்படவுள் ளது. அளவெட்டி தெற்கை சேர்ந்த திருமதி சாந்தராசா சுபாசினி என்பவருக்கே இவ் உதவி கிட்டியுள்ளது.

வெகு விரைவில் இந்த நபருக்கான மலசல கூடம் அமைத்துக் கொடுக்க இலங்கை செஞ் சிலுவைச் சங்க நிர்வாகக் குழு தீர்மா னித்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## தொண்டராசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து தொண்டராசிரியர்க ளையும் உரிய ஆவணங்களுடன் அங்கு சமுகமளிக்குமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள் ளார். (அ-2)

## நாவலர் நினைவு வைபவம்

(யாழ்ப்பாணம்)

நல்லைநகர் நாவலர் பெருமான் நினைவு வைபவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தின் போது ஈழத்து சைவ சமய மறுமலர்ச்சியில் நாவலர் பெருமானின் பங்களிப்பு எனும் தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் பொ. சந்திர சேகரம் சிறப்புரையாற்றவுள்ளார். (அ-2)

## கூட்டுறவு தின விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக பனை அபி விருத்தி சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண ப.தெ.சமாசத் தலைவர் நா.கணே சன், யாழ். கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தர லிங்கம், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பொ.மோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் பல்வேறு கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன. (அ-9)

## பாதீட்டை பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையினரால் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக சபைத் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இவ் வரவு செலவுத் திட்ட அறிக்கையை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பார்வையிடலாம்.

பிரதேச சபையின் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இவ் அறிக்கை மக்களின் பார்வை க்கு இடப்பட்டுள்ளது. (அ-9)

## முதியோர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முதியோர் சங்கச் செய லாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## இராசி பலன்

24.11.2013
(கார்த்திகை 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி காலை 7.32 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 3.59 மணிவரை
இராகுகாலம் 4.41-6.11 மணிவரை
சுபநேரம் 9.11-10.41 மணிவரை
ஆறுமுகநாவலர் குருபூசை

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமை காண்பீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், குடும்பத் தினர் பாராட்டும் வகையில் காரியங் களைச் செய்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக் கும், உறவினர் வழி அனுகூலமு ண்டு, பேச்சில் கனிவு பிறக்கும்.

**கடகம்** தொழில் முன்னேற்றம் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர் கள், பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினை[illegible] நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**சிங்கம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்ற ங்களைச் செய்ய முன்வருவீர்கள், திடீரெனக் கேட்கும் செய்தி களால் திகைப்படையலாம், வெளி யூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பணவரவு மன திற்கு சந்தோசத்தைத் தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** நண்பர்கள் மூலம் உதவிகள் வந்து சேரலாம், எதிர்பாராத பண வரவுகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், விருந் துகளில் கலந்து மகிழும் நாள்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று நடைபெற லாம், ஆற்றோர் சந்திப்புண்டு, சிலருக்கு சுட்டுப்பட்டு நடக்க வேண்டி வரலாம், பயணங்களால் பலனுண்டு, ஆரோக் கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம்வருந்த நேரிடலாம், மனச் சஞ் சலங்கள் அதிகரிக்கும், போசன நன் மையுண்டு, முயற்சிகள் தாமதமாகும், செல வுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர்களும் நண்பர் களும் வலிய வந்து பேசுவார்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண் பீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியமான நாள், முயற்சிகள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** கனிந்த தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### அதிகாலை ஆலோசனை

"என்னம்மா இது ....அதிகாலை நேரத்தில் ஆஸ்பத்திரியைத் தேடி வந்திருக்கிறாய்?..."

"ஒரு முக்கியமான சந்தேகத்தை உங்களிடம் கேட்க வேண்டும் என்று வந்திருக்கிறேன் டாக்டர்"

"என்ன சந்தேகம்!"

"தூக்கத்தில் சில பேர் உளறுகிறார்களே அது ஏன் டாக்டர்?"

"இதற்காகவா இவ்வளவு அவசரமாக வந்தாய்?..."

"ஆமாம் டாக்டர்!"

"ஆழ் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆசைகள்... அனுபவங்கள் எண்ணங்கள்... ஆவேச உணர்ச்சிகள்... இவற்றின் வெளிப்பாடு தான் தூக்கத்தில் உளறுவது!"

"கனவு காண்பதற்கும் உளறுவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா டாக்டர்!"

"பெரும்பாலும் தூக்கத்தில் காணும் கனவுக்கும் அப்பொழுது அவர்கள் உளறுவதற்கும் தொடர்பு உண்டு! கனவில் தோன்றும் உணர்வு களுக்கு ஏற்றாற் போல் அசைவு கொடுப்பது... சில வார்த்தைகள் பேசுவது.... போன்றவை கூட அந்தச் சமயத்தில் கூட நடக்கலாம்!

உதாரணமாக ஒருவர் குதிரையில் சவாரி செய்வது போல் கனவு காண்கிறார் என்றால் தூக்கத்திலும் அவரின் உடம்பு அதற்கு தகுந்தாற் போல் அசையலாம். அது சம்பந்தமான வார்த்தைகள் வரலாம்!

அது சரி... நீ ஏன் இதையெல்லாம் விபரமாக கேட்கிறாய்?"

"என் வீட்டுக்காரர் தூக்கத்தில் உளறுகிறார். ஏதேதோ பெயர்கள் எல்லாம் சொல்கிறார்..."

"அவரை அழைத்துக் கொண்டு வாம்மா... அதையெல்லாம் நிறுத்தி விடலாம்."

"நிறுத்த வேண்டாம் டாக்டர்... நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்..."

"என்ன செய்ய வேண்டும் சொல்!"

"அவர் உளறுகிற பெயரெல்லாம் என்ன என்று எனக்குத் தெளி வாகக் கேட்கிறது மாதிரி செய்தால் போதும் மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 35 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 90 |
| தக்காளி | 30 | 30 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 25 | 20 | 50 |
| கரட் | 45 | 30 | 80 |
| பூசணி | 25 | 30 | 50 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 195 | 180 | 200 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 50 |
| கறிமிளகாய் | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 60 |
| போஞ்சி | - | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 10-20 | 15 | 25 |
| தேசிக்காய் | 150 | 90 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 35- 45 |

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லூர் பிரதேச செயலக ஊழியரும் கோப்பாய் மத்தி காளி அம்பாள் தேவஸ்தானப் பொருளாரும் மற்றும் கோப்பாய் மத்தி கிராமிய அபிவிருத்திச் சங்க முன்னாள் பொருளாளரும் காளி அம்பாள் சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனம் (2002/2003) யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனுமாகிய



**திரு. துரைசிங்கம் சத்தியசீலன் அவர்கள்**

நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு 19.11.2013 அன்று யாழ். மாவட்ட நீதவான் திரு A.A. ஆனந்தராசா அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரை நாம் மனமுவந்து பாராட்டுகின்றோம். அத்துடன் மேலும் பல உயர்வுகளைப் பெறவும் தான் சார்ந்த சமூகத்திற்குச் சிறந்த சேவைகளை ஆற்றவும் காளி அம்பாளை நினைந்து வேண்டுகின்றோம்.

**கோப்பாய் மத்தி**
**காளி அம்பாள் தேவஸ்தானமும்**
**காளி அம்பாள் சனசமூக நிலையமும்**

(5668)


# ஜனாதிபதியின் இணைப்பு செயலாளர் உடனடி பதவி நீக்கம்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளராக கடமையாற்றிய அப்துல் காதர் மசூர் மௌலானா உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு நேற்று முன்தினம் இந்த அறிவித்தலை விடுத் துள்ளது. மசூர் மௌலானா அவர்கள் தற்போது ஜனாதிபதியின் உத்தியோகத்தர்கள் பிரிவில் எவ்விதப் பதவியையும் வகிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சு/5541)

## கார் வாடகைக்கு தேவை

மிக நீண்ட நாள் வாடகைக்கு கார்கள் கொடுக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

மாத வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:-0774744204
வைத்தீஸ்வரன்

(4571)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல.75, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும்முகவரியினையுடைய இ.செல்வமகேசன் ஆகிய நான் இதுவரை காலமும் செ.சிறிராமன் எனும் பெயரையுடைய எனது மகனின் பெயரை செ.அபிரூபன் என பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் மேற்குறிப்பிட்ட பெயரையே பயன்படுத்துவார் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.செல்வமகேசன்
(தந்தை)

(4570)






குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

## நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

### சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை



இவ்வைத்தியசாலையில் சாதாரண மகப்பேற்றுக்கான சகல வசதிகள் கொண்ட பிரசவ அறை, பிரசவ விடுதி என்பன உள்ளன. மருத்துவ தாதி மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை 24 மணித்தியாலமும் உள்ளது.தேவைப்படுமிடத்து சத்திரசிகிச்சை மகப்பேறும் நடைபெறுகின்றது.

### குழந்தைகளுக்கான பிரிவு



நொதன் வைத்திசாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் குழந்தைகளுக்கான விஷேட வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

### தீவிர சிகிச்சைப் பிரிவு



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் வைத்தியசாலையில் மட்டுமே தீவிர சிகிச்சைப் பிரிவு நடைமுறையில் உள்ளது.

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா : 51 செவ் 7 ல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: BBA, Msc / அரச கணக்காளர்
தொ.இ: B/781

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா : 41 ¾ செவ் 2 ல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்: HNDA / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: B/782

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா : 13 ½ உயரம்: 5’4”
தகைமை/தொழில்: BSC / கணனி வேலை (UK) (Not PR)
தொ.இ: B/784

பிறப்பு: 1966 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா : 17 சூரி செவ் 2 ல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்: B.Com / கணக்காளர்
தொ.இ: B/786

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து (Ko)
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா : 14 ¾ உயரம்: 160cm
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: G/1204

பிறப்பு: 1985 இந்து (Kari)
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா : 33 ¾ செவ் 12 ல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1205

பிறப்பு: 1974 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா : 65 செவ் 8 ல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: A/L / கனடா (PR)
தொ.இ: G/1211

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா : 12 ¾ உயரம்: 5’2”
தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்
தொ.இ: G/1220

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி




# விஞ்ஞான பட்டமாணி நிகழ்ச்சி திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞான பட்டமாணி நிகழ்ச்சித் திட்டத்திற்கென விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளன.

இப்பட்டமாணி நெறிக்கான விண்ணப்பங்கள் முன்னதாகவே கோரப்பட்டிருந்தன. எனினும் அப்பொழுது விண்ணப்பிக்க தவறிய ஆர்வமுடையோருக்கு மீள் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கோடு எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


எனவே, 18 வயதினைப் பூர்த்தி செய்த க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் எத்தனை தடவையேனும் பரீட்சைக்குத் தோற்றி 3 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றவர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

எனவே, பதிவுகளையும் மேலதிக தகவல்களையும் பெற விரும்புபவர்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-9)




# சண்டிலிப்பாய் இந்து முதலாமிடம்



(மானிப்பாய்)

இலங்கை தேசிய நாடக சங்கத்தின்ரவல்கோல் அமைப்பினரால் வடமாகா ணத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட கல்பிளந்த கதிர் எனும் நாடகமே முதலிடத்தை சுவீகரித்துள்ளது.

வடமாகாண நாடகப் போட்டியில் வெற்றி பெற்றதனூடாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நாடகக் குழுவினர் எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி இலங்கை தேசிய நாடக சங்கத்தின் ரவல் கோல் அரங்கில் நடைபெறவுள்ள தேசிய போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# தொழில்சார் சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மானிப்பாய்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியினால் 2014 ஆம் ஆண்டின் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய பொருளியற்றுறை, தொழிற்றுறை, வர்த்தகத்துறை விசேட மற்றும் தொழில்சார் சான்றிதழ் தர கற்கை ஆகியவற்றிற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச அங்கீகாரம் பெற்ற இக் கற்கை நெறிகைகளைப் பயிலும் முழு நேர மாணவர்களுக்கு கொடுப்பனவாக நாளொன்றுக்கு 50 ரூபா வீதம் மாதம் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாமல் வழங்கப்படும். தொலை தூர மாணவர்களுக்கு பருவகால பயணச்சீட்டும் வழங்கப்படும்.

அத்தோடு இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தொடர்ந்து தேசிய தொழில் தகைமையிலான டிப்ளோமா தரக் கற்கை நெறிகள் 5,6 ஆம் மட்டங்களைப் பயில முடியும்.

இக் கற்கை நெறிகளைப் பயில விரும்புவர்கள் யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரியில் நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டுமென பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற தொழில் வழிகாட்டல் மையம், தொழில் நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது 021 222 0028 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

# யாழ்.மாவட்டத்தில் கடமையாற்ற மேலும் 70 வைத்தியர்கள் தேவை

## பணிப்பாளர் ஆ.கேதீஸ்வலரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு மேலும் 70 வைத்தியர்கள் தேவையாகவுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பாக ஆராயப்பட்ட போதே பிராந்திய சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

யாழ்.மாவட்டத்தில் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உள்ளது. கடந்த வருடாந்த இடமாற்றத்தின் போது யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து 36வைத்தியர்கள்வேறுபகுதிகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளமையால் இங்கு கடமையாற்ற இன்னும் 70 வைத்தியர்கள் தேவையாக உள்ளனர்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்தில் 44 வைத்தியசாலைகள் உள்ளன. இவற்றில் 9 பிரதேச வைத்தியசாலைகளுக்கும் 7 ஆரம்ப வைத்திய பிரிவுகளுக்கும் நிரந்தர வைத்தியர்கள் இல்லை. இவற்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரிகள் இடமாற்றம் மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். மாகாண சுகாதார அமைச்சுக்கு அதிகாரம் இல்லை. ஒரு வைத்தியசாலையில் இருந்து அருகிலுள்ள வைத்தியசாலைக்கு மாறுவதனால் மத்திய சுகாதார அமைச்சால் மட்டுமே மாற்ற முடியும். மாகாண சுகாதார அமைச்சருக்கு அந்த அதிகாரம் இல்லை. வைத்திய அதிகாரிகள் சம்மதம் தெரிவித்தால் மட்டுமே இடமாற்றம் செய்ய முடியும்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உள்ளக இடமாற்றத்தின் போது நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மருதங்கேணி மற்றும் அம்பன் ஆகிய வைத்தியசாலைகள் உட்பட 9 இடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் எவரும் அவ்விடங்களுக்கு விண்ணப்பிக்கவில்லை.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற வைத்தியர்களின் வருடாந்த இடமாற்றத்தின் போது யாழ்.மாவட்டத்தில் உள்ள 24 பிரதேச வைத்தியசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தோம். ஆனால் 14 வைத்தியசாலைகளுக்கே யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து வைத்தியர் நியமனங்கள் இடம்பெற்றுள்ளன. ஏனைய வைத்தியசாலைகளுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. வைத்தியர்கள் விரும்பி கடமை ஏற்றால் மட்டுமே நியமனம் செய்ய முடியும். எனினும் அடுத்த வருடம் இத்தகைய பிரச்சினைகளை ஓரளவு தீர்க்க முடியும் என் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையினால் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விநாடிவினாப் போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் உணவக விடுதியில் இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டிய யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள், வங்கி முகாமையாளர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். இப் போட்டிகளில் யா/ இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

# காப்புறுதி கூட்டுத்தாபனம் இழப்பீட்டுத் தொகை வழங்கியது

(சங்கானை)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சங்கானைக் கிளையானது தனது ஆயுள் காப்புறுதி இழப்பீட்டு கொடுப்பனவாக 38 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன சங்கானைக் கிளையின் வாடிக்கையாளரும் வர்த்தகருமாகிய சண்முகம் சபாநடேசன் என்பவரின் மரண இழப்பீடாக இத் தொகை வழங்கப்பட்டது.

காரைநகர் சிவன்கோயில் உற்சவத்தின் போது காவடி எடுத்துவரும் வேளை இவ் வாடிக்கையாளர் திடீர் மரணம் அடைந்தார் என்பதுடன் ஒரு தவணை கட்டுப்பணத்தையே செலுத்தியுள்ளார்.

அத்துடன் இவ் வாடிக்கையாளர் சென்ற வருடம் வாகன விபத்து இழப்பீட்டுக்காக 4 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவை சங்கானைக் கிளையில் பெற்றுக் கொண்டார் எனவும் சங்கானை கிளை முகாமையாளர் பி.சுபாஸ்கரன் அறிவித்துள்ளார். (அ)

# வருமான வரி கட்டடத் திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் கணனிமயப்படுத்தப்பட்ட வருமான வரி நிலைய திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நகராட்சி மன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நகர பிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிழ்வின் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, சி.சிறிதரன் ஈ.சரவணபவன் ஆகியோருடன் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் , சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-29)

# கலைமகள் படிப்பக திறப்பு விழா நாளை

(மானிப்பாய்)

இளவாலை இளைஞர்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்ட கலைமகள் படிப்பகம் திறப்பு விழா இன்று காலை 9.30 மணி யளவில் இடம்பெறவுள்ளது.

நா.சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் பேரானந்தராஜா, இலங்கை மின்சார சபையின் மின் அத்தியட்சகர் சி.குமாரலிங்கம் , வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் வே.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக அமையப் பெற்ற கலைமகள் படிப்பகத்தைத் திறந்து வைக்கவுள்ளனர்.

நிகழ்வின் ஆசிரியுரைகளை இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.இராம பாலச்சந்திர குருக்கள் மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண.பிதா யோ.யேசுதாஸ் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-9-23)

## கல்விக்கண்காட்சி

(பூநகரி)

கிளி/பூநகரி மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு கல்விக் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் கல்விக் கண்காட்சியில் தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான 200 இற்கு மேற்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-84)

## வடமாகாண முதலமைச்சரால் கூட்டுறவு வங்கி திறந்து வைப்பு



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கீழான வவுனியா நகரப் பகுதியில் கூட்டுறவு வங்கி ஒன்றை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் நேற்று மதியம் திறந்து வைத்தார்.

கூட்டுறவு வங்கியின் மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் எனும் அடிப்படையில் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக இக் கிராமிய வங்கி பஷார் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் இருந்து முதலமைச்சரையும் விருந்தினர்களையும் பிரதான வீதி வழியாக அழைத்து வந்து கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது வவுனியா வர்த்தகர் சங்கம், நகர பள்ளிவாசல் நிர்வாகம் ஆகியன முதலமைச்சரை கௌரவித்ததுடன் பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து கூட்டுறவு வங்கியினை முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கூட்டுறவு வங்கியை நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் சேமிப்பையும் ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோனோதராதலிங்கம், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராஜா, ம.தியாகராஜா, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ம-250)

## கடற்றொழிலாளர்களுக்கு உதவி வழங்கல் நாளை

(பூநகரி)

ஐ.எல்.ஒ நிறுவனத்தின் நிதியுதவியுடன் பூநகரி பிரதேசத்தில் உள்ள கடற்தொழில் சங்கங்களின் பயனாளிகளுக்கு நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ஜெயபுரத்தில் உள்ள பூநகரி கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்தில் வைத்து பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் வெளி இணைப்பு இயந்திரங்கள் ஜீ.பி.எஸ் வலைகள் உட்பட பல பொருட்கள் அன்றைய தினம் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக சமாசத்தின் பொது முகாமையாளர் சி.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (ம-84)

## விநாயகர் ஆலய விக்கிரகம் திருட்டு

பூநகரி பரந்தன் வீதி அருகே உள்ள தம்பிராய் கிராமத்திலுள்ள முற்றட்டு விநாயகர் ஆலயத்தில் நள்ளிரவு வேளையில் புகுந்த திருடர்கள் ஆலயத்தின் கதவுகளை உடைத்து 50 ஆண்டு பழைமை வாய்ந்த எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் உட்பட பல இலட்சம் பெறுமதியுடைய ஆலய பொருட்களை அபகரித்து சென்றுள்ளனர்.

இது விடயமாக ஆலய நிர்வாகத்தினர் பூநகரி பொலிஸ் நிலையத்திலும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து மோப்பநாய்கள் கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் தேடுதல் நடாத்தப்பட்டது.

பொலிசாரின் புலன் விசாரணை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. (ம-84)

## சின்மயா கிராமிய அபிவிருத்தி நிறுவனம் அங்குரார்ப்பணம்

சின்மயா மிஷனால் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உழவனூர் கிராமத்தில் சின்மயா கிராமிய அபிவிருத்தி நிறுவனம் ஒன்று கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக்கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தால் பாடசாலையில் கல்வி தற்கும் 50 மாணவர்களுக்கு விசேட கல்வியூட்டும் வசதியும் (மாலை நேரக் கற்றல் ) கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

25 மாணவர்களுக்கு ஆங்கிலமும் மேலும் 25 மாணவர்களுக்கு சகல பாடங்களும் போதிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

இம் மாணவர்களுக்கான சீருடைகளும் மாலை நேர வகுப்பின் போது தினமும் சிற்றுண்டிகளும் வழங்கப்படுமென சின்மயா நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார். (ம-84)

## வன்னி பிரதேசத்தில் சட்டவிரோத மரக்கடத்தல்

### கட்டுப்படுத்த கோரிக்கை

வன்னியில் இடம்பெறும் திட்டமிட்ட காடழிப்புகளாலும் சட்டவிரோத மரக்கடத்தலாலும் இயற்கை சூழல் பாதிப்படைவதன் காரணமாக காட்டு விலங்குகள் நாட்டுக்குள் படையெடுப்பதால் பயன்தரு பயிர்கள் அழிக்கப்படுவதுடன் மக்கள் அச்சத்துடன் விழித்திருந்து இரவுக்காவல் காக்கும் அவலநிலையும் தோன்றியுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவது, வன்னியில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாகவும் தற்போது மக்கள் குடியேறியுள்ள நிலையிலும் பயன்தரு பல காட்டு மரங்கள் அழிக்கப்படுவதால் இயற்கைச் சூழலில் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

இதனால் மழை வீழ்ச்சி இல்லாது போனதுடன் காட்டு விலங்குகளான யானை, சிறுத்தைப்புலி, நரி என்பன உட்பட விஷப் பாம்புகளும் படையெடுத்து கிராமங்களுக்குள் புகுந்து கொள்கின்றன்.

இவை பயன்தரு வாழை, தென்னை மரங்கள் உட்பட உணவுப்பயிர்களை நாசம் செய்வதுடன் மக்களின் தற்காலிக குடியிருப்புக்களையும் சேதமாக்குகின்றன.

பாம்பு, நரி என்பவற்றால் கடியுண்ட நிலையில் பலர் வன்னியில் உள்ள வைத்தியசாலைகளில் தினம் தினம் அனுமதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

எனவே மனிதனுக்கு பயன்தருகின்ற மரங்களை அழிப்பதை தடை செய்வதுடன் சட்டவிரோத மரக்கடத்தல்களை மேற்கொள்வோரை கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் துறை சார்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-15)




வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**கவிதை**

அசோகரத்தினம் யதுசனா (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க பா. இல.02), மனோகரன் மதுசாயினி (கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்),செல்வராசா பவித்திரன் (கிளி/ஜெயபுரம் ம.வி)

**கீழ்ப்பிரிவு- தரம் 06-08**

**கட்டுரை**

யோகராசா யாழரசி (கிளி/ஜெயபுரம் ம.வி),சரவணபவன் தர்மினி (கிளி/ஜெயபுரம் ம.வி),நடேசமூர்த்தி அனோஜா (கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்),

**இடைநிலைப்பிரிவு 09-10**

**நடனம் பாரதி பாடல்**

அன்னக்கொடி மகிழினி (கிளி/ஜெயபுரம் ம.வி)

**பாடல்- நாட்டார் பாடல்**

ஸ்ரீரங்கநாதன் சுகன்யா (கிளி/ஜெயபுரம் ம.வி),ஞானமனோகரன் மேரி ஜெனிற்றா (கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்), சசிக்குமார் சங்கீதா (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க பா. இல.02)

**சித்திரம்**

சுப்பிரமணியன் கேமவதனன் (கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்), தேவராசா பிரதீபன் (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை இல 02), திலககாந்தன் நக்கீரன் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு தரம் 11-12**

**சிறுகதை**

சுரேஸ் சுஜீபா (கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்), றுபேஸ்குமார் சுபிட்சா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), முருகையா வினிதா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

(முற்றும்)

## யுனிசெவ் நிறுவனத்தால் 10 பேருக்கு சுயதொழில் கடன்

மன்னார் நகரப் பிரதேச செயலகப் பிரிவில் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யுனிசெவ் நிறுவன நிதி மூலமாக 10 பயனாளிகளுக்கு 30 ஆயிரம் ரூபா முதல் 40ஆயிரம் ரூபா வரையான சுயதொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகள் தெரிவு வேலைகள் யாவும் முடிவடைந்து விண்ணப்பங்கள் யாவும் பிரதேச செயலரால் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை செல்லும் மாணவர்களை உடைய வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் யுனிசெவ் நிறுவனத்தினால் சுயதொழில்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

சமூக சேவைகள் அதிகார, சிறுவர் நன்னடத்தை அதிகாரி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், உளவள உதவியாளர் ஆகியோர் ஒன்றிணைந்து பயனாளிகளை குழு முறையிலான கலந்துரையாடல் மூலம் தெரிவு செய்து வருகின்றனர்.

கிராம அலுவலர்கள் மூலமாகவும் வெளிக்கள வேலைகளின் போதும் இந்தப் பயனாளிகள் தெரிவு இடம் பெறுகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகள் தோறும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யுனிசெவ் சுயதொழில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-254)

## சுயதொழில் ஓய்வூதிய திட்டம் 2014 இல் அறிமுகம்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் 2014 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கும் அறிமுகம் செயயப்பட உள்ளது.

இத் தகவலை சபையின் தலைவர் சட்டத்தரணி சுகுணா ஆரியதாச தெரிவித்தார், 1996 ஆம் ஆண்டில் வறுமையை தணிக்கும் நோக்கில் அப்போதைய அரசாங்கத்தினால் இலங்கை சமுர்த்தி அதிகார சபை, இலங்கை சமூக பாதுகாப்புச் சபை என்பன உருவாக்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டில்தான் சமுர்த்தி திட்டம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைக்கு விடப்பட்டது.

2013 ஆம் ஆண்டில்தான் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட னர்.

2013 ஆம் ஆண்டில்தான் கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. சபையின் சுரக்கும திட்டத்தில் இதுவரை 602 பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நாளாந்த தொழில் செய்வோர் 60 வயது முதல் ஓய்வூதிய நன்மைகளை பெறும் வகையில் இத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-254)

# உருத்திரபுரீஸ்வரர் ஆலய நிர்வாகம் இயங்கவில்லை

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க உருத்திரபுரீஸ்வரர் ஆலயத் தின் நிர்வாகம் இயங்காமையால் இக்கோவி லின் செயற்பாடுகளை நன்முறையில் செய ற்படுத்தமுடியாதுள்ளதாக இப்பகுதி மக்களும் சமயத் தொண்டர்களும் கவலை தெரிவிக்கின் றனர்.

ஆலயத்தின் பழைய யாப்பின்படி பொது ச்சபையைக்கூட்டுவதற்கான அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன.

மாவட்டத்தின் சகல பகுதிகளையும் உட் படுத்தும் வகையில் 13 பிரந்திங்களிலும் இருந்து 117 பேர் தெரிவு செய்யப்பட்டு அதில் இருந்து ஆலய நிர்வாக முகாமைத்துவக் குழு தெரிவு செய்வதெனவும் அதற்கு பிராந்திய உறுப்பினர்களை தெரிவு செய்து அனுப்புமா றும் கிராம அலுவலர்கள் கலாசார உத்தியோ கத்தரிடம் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால் இது சம்பந்தமாக எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை. எனவே தற்போதைய தலைவர் மேற்கொண்டு என்ன ஒழுங்குகளைச் செய்துள்ளார் என அறியமுடியவில்லை.

நீண்டகாலத்திற்கு முன்னரான பழைய யாப்பையும் ஆராய்ந்து புதிய கருத்துக்களை யும் புகுத்தி புதிய யாப்பு ஒன்றைத் தயாரித்தல் நல்லது என பொதுமக்களால் தெரிவிக்கப்ப டுகிறது.

எனவே உரியவர்கள் ஒருங்கிணைந்து இதனை ஒழுங்கு செய்யவேண்டுமென பொதுமக்களால் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. (ம-254)

# சமுர்த்தி வங்கியை பொருத்தமான இடத்தில் அமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேச செயலக பிரிவுக்கான சமுர்த்தி வங்கியை குறித்த பிரதேச செயலக த்திற்குட்பட்ட மக்கள் அனைவரும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடியதான இடத்தில் அமைக் கப்பட வேண்டுமென அப்பிரதேச மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சமுர்த்தி வங்கியை தற்போது ஜெயபுரம் பகுதியில் அமைக்க திட்டமிடப்பட் டுள்ளது.

இந்நிலையில் முழங்காவில், இரணைமாதா நகர், நாச்சிக்குடா, நாகபடுவான், குமுழமுனை, வேரவில், வலைப்பாடு, பள்ளிக்குடா போன்ற பிரதேச மக்கள் வங்கி அமைக்கப்படும் இடத்திற்கு செல்வதற்குப் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் அதிக தூரம் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி அனைத்து பிரதேச மக்களும் இலகுவாக சென்றடையக்கூடிய இடத்தில் மேற்படி சமுர் த்தி வங்கியை அமைக்க பூநகரி பிரதேச செய லர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (அ-5)

# 2 இலட்சம் ரூபா நிதியில் திருத்த வேலைகள் நிறைவு

கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட சமூக பராமரிப்பு நிலைய த்திற்கு 2 இலட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகள் செய்யப்பட்டன.

வட மாகாண சமூக சேவைகள் திணை க்களம் இதற்கான நிதியை யுனிசெவ் நிறுவ னத்திடமிருந்து பெற்று கரைச்சி பிரதேச செயலகத்துக்கு வழங்கியது.

சமூக பராமரிப்பு நிலையத்தின் மூலமாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

சமூக சேவைகள் அதிகாரி, சிறுவர் உரி மைகள் மேம்பாட்டு உதவியாளர், உளவள உதவியாளர், முதியோர் உரிமைகள் மேம் பாட்டு உதவியாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர் போன்றோர் பிரதேச செயல கங்களில் சமூக பராமரிப்பு நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர்.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் சமூக பராமரிப்பு நிலையங்கள் பிரதேச செயலக வளாகத்தில் அமையாமல் வேறு இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வட மாகாணத்தில் சமூக பராமரிப்பு நிலையங்கள் பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக வளாகத்தில் சமூக பரா மரிப்பு நிலையம் அமைக்கப்படும் போது பொது மக்கள் சேவைகளை ஒரேயிடத்தில் விரைவாக பெறக்கூடியதாக உள்ளமை சிறந்ததென சமூக ஆர்வலர்கள் தெரிவித்தா ர்கள். (ம-254)



வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு 3நாட்கள் உள சமூகச் செயற்திறன் விருத்திச் செயலமர்வு வவுனியா தவசிக்குளம் சேவா லங்கா நிறுவனத்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்ற போது...

(படம்:- சிவநகர் செய்தியாளர்)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532




# கொலை மிரட்டலுக்கு எதிராக கண்டன பேரணி

## மன்னாரில் நடைபெற்றது



(மன்னார்)

மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்து ழைப்பு பேரவையின் இணைப்பாளர் எஸ். சுனேஸ் சோசைக்கு இனம் தெரியாத நபரி னால் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட கொலை மிரட்டலுக்கு கண்டனம் தெரிவித்து கண்டன பேரணி ஒன்று நேற்று முன்தினம் காலை மன்னாரில் நடைபெற்றது.

குறித்த கண்டன பேரணியை மன்னார் பிரஜைகள் குழு, தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை மற்றும் காணமற் போன உறவு களைக் கண்டுபிடிக்கும் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நேற்று முன்தினம் காலை 10:30 மணி யளவில் மன்னார் புனித.செபஸ்தியார் பேரா லயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கண்டனப் பேரணி புனித.செபஸ்தியார் பேராலய வீதியூடாக சென்று மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தை அடைந்தது.

அங்கு பொலிஸ் அத்தியட்சகர் ஐ.பி.சுகத பாலவிடம் குறித்த விடயம் தொடர்பாக தெரி வித்ததோடு மன்னாரில் ஆயர் மற்றும் கலந்து கொண்ட பிரமுகர்கள் குறித்த கொலை மிரட் டல் விடுத்த நபரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டு கோள்விடுத்தனர்.

இதன் போது பொலிஸ் அத்தியட்சகர் மற் றும் மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி துஸார தலுவத்த சந்தேக நபரை சட்டத்தின் முன் நிறு த்த நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தனர்.

இதன் போது சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பான மகஜர் பொலிஸ் அத்தியட்சக ரிடம் கையளிக்கப்பட்டது.

அதன் பின் மன்னார் மாவட்ட செயலகம் சென்று குறித்த விடயம் தொடர்பான மகஜர் ஒன்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ஸ்டான்லி டி மெல்லிடம் அருட்தந்தை செபமாலையால் கையளிக்கப்பட் டது.

அதன் பின்னர் அங்கிருந்து சென்று மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத் தில் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

குறித்த கண்டன பேரணியில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வட மாகாண கடற்றொழில் அமைச்சர் டெனிஸ் வரன், வட மாகாண சபை உறுப்பினர் றிறிமுஸ் சிராய்வா, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை செபமாலை ,அருட்தந்தையர்கள், மன்னார் பிரதேச சபையின் உபதலைவர் சகாயம், மன்னார் நகர சபை உறுப்பினர் ரெட்ணசிங்கம் குமரேஸ் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (ம)

# பருவமழை இன்மையால் விவசாயிகள் கவலை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசா யிகள் அண்மைக்காலத்தில் பருவமழை பெய்யாதகாரணத்தால் மிகவும் தவிப்புக்குள் ளான நிலையில் உள்ளனர்.

இதேவேளை இரணைமடுக்குளத்தில் தற்போது குறைந்தளவில் உள்ள நீரைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முயற்சித்தும் வருகின்றனர்.

இதற்குத் தேவையான மானிய பசளை வகைகளை பெற்றுக்கொள்வதற்கு விவசாயி கள் மிகவும் சிரமப்படவேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்றையதினம் கிளிநொச்சியில் அமை ந்துள்ள கமநல சேவை நிலையத்தில் பசளை களை பெற்றுக் கொள்வதற்காக ஆண்கள், பெண்கள் என பலரும் வந்திருந்த போதும் கிளிநொச்சி கமநல சேவை நிலையம் திறக்க ப்படாதிருந்தமையால் பசளைகளை பெற்றுக் கொள்ள இயலாது தவிப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

எனவே இத்தகைய நிலைமைகள் தொட ர்ந்தும் ஏற்படாவண்ணம் இருக்க துறைசார் ந்தவர்கள் ஆவன செய்ய வேண்டுமென பாதி க்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர். (ம-254)

# நாவலரின் பன்முகப் பணிகள்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியில் அரசியல், சமூகம், சமயம், பொருளாதாரம் என்பவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. கிறிஸ்வதவ மிஷனரிமார் தமது சமயத்தை போதிக்க ஆங்கில பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்பையும் அரச தொழில் வாய்ப்பையும் பெற்றனர்.

கிறிஸ்தவ மதப் பிரசாரத்தால் மக்களிடம் சமய அறிவு, அனுஷ்டானம், நூல் அறிவு என்பன குறைந்த நிலையில் வேதாந்த சைவ சித்தாந்த கருத்து பரப்புதல், புராணபடலம், சொற்பொழிவு என்பனவற்றை நடைமுறைப்படுத்தும் கட்டாய தேவையில் நாவலர் பணி ஆரம்பமாகிறது.

நாவலர் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது பணியை ஆரம்பித்து மாணவர்களிடம் 3 வயதில் இருந்தே சைவப் பற்றை உண்டாக்க விரும்பி சைவ வினா விடைகளை எழுதிய குரு, கடவுள், ஆன்மா போன்ற விடயங்களை மாணவருக்கு ஊட்டினார். சைவசமய சாரம், சிவாலய தரிசன விதி, நித்திய கரும விதி, தர்ப்பண விதி, சிரார்த்த விதி போன்ற நூல்களை இயற்றி பதிப்பித்தார்.

"வெகுசன சமூக சம்மதம்" என்ற சொல்லை முதல் முதலில் கையாண்டது நாவலரே. இன்று பலர் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

இலங்காபிமாணி, இலங்கை நேசன், உதயதாரகை போன்ற பத்திரிகைகளில் பல விடயங்களை எழுதிவந்தார்.

அத்துடன் சிறந்த இலக்கண புலமை உடையவர். மாணவர் இலக்கணம் கற்பதற்கு இலக்கண வினாவிடை, இலக்கண சுருக்கம் முதலான நூல்களையும் எழுதினார்.



நாவலர் குருபூசை இன்று

ஆரம்பத்தில் தமிழ் நூல்கள் எல்லாம் ஏட்டு வடிவில் இருந்தன. அவற்றை கறையான், பூச்சிகளால் அழியவிடாது பாதுகாத்து அச்சுவாகனம் ஏற்றிய பெருமை நாவலரையே சாரும்.

சாதாரண மக்கள் அறிவு விருத்திக்கு ஏற்ற கருவியாக தமிழில் உரைநடை அமைதல் வேண்டும் என்று குறிப்பிட்ட நாவலர், சாதாரண உரை நடைகளை எழுதி "உரைநடையின் தந்தை" என புகழப்பட்டார்.

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து நாடு விடுதலை பெற்ற போது தமிழ் மக்களின் மொழி, பாண்பாடு, சமயம், வாழ்க்கைமுறை என்பனவற்றை சைவமும் தமிழும் என்ற இன குழும நிலையில் வைத்து நாவலர் செயற்பட்டார்.

நாவலர் கண்ணகி வழிபாட்டையும் நல்லூரின் வேல் வழிபாட்டையும் கடுமையாக கண்டித்தார். நாவலர் பரம்பரை பற்றி நோக்கும் போது இலக்கிய இலக்கண, பிரசங்க புராண படலமுறையில் வாழையடி வாழையாக வந்த சங்கரபண்டிதர் முதல் சி.கணபதிப் பிள்ளை வரை நோக்கலாம். கடவுள் ஒருவரே நம்மோடு என்றும் தொடர்புடையவர்.

நமக்கு நம்மினும் இனியவராயுள்ளார்.

அவருக்கும் எல்லாம் உடைமைப் பொருள் என்பதே நாவலரது கொள்கை ஆகும்.

இருப்பினும் நாவலர் சங்க நூல்களை பதிப்பித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தாமையால் அது அவரது வரலாற்று பிழை என்றும் கூறப்படுகிறது.

மேலும் நாவலரின் கண்ணை மறைத்தது மதம் என்றே குறிப்பிடலாம்.

புலமை இருவகைப்படும். இயற்கை புலமை, செயற்கைப் புலமை, இயற்கை புலமை-தானே முழுவதும் உணர்தல், செயற்கை புலமை - ஓதியுணர்தல், இயற்கை புலமை தெய்வ புலமை ஆகும். இயற்கை புலமையாளர் : வள்ளுவர், காளிதாசர், காளமேகம் போன்றோர். செயற்கை புலமையாளர்: சி.வி. ராமன், இளங்கோவடிகள், தாகூர் போன்றோர். ஆனால், இயற்கை புலமை, செயற்கை புலமை ஆகிய இரண்டையும்

கு.கோபிராஜ்
சண்டிலிப்பாய் வடக்கு

ஒருங்கே கொண்டிருந்தார் நாவலர். கிறிஸ்தவ பாதிரிமாரின் கீழ் சேவையாற்றிய போதிலும் அச்சமின்றி சைவ பிரசங்கம் செய்தமை, இராமநாதபுர பொன்னுசாமி தேவருடைய செல்வத்தையும் அதிகாரத்தையும் மதித்து தாழ்ந்து தோல்வியெய்தமை முதலியன இவரது பெருமைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

# உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்.முன்னேற்றமடைந்துள்ளது

## பிரிதியமைச்சர் அமுனுகம புகழாரம்

(கொழும்பு)

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றமடைந்துள்ளதாக பிரதிநிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

சீனாவைத் தவிர உலக நாடுகளின் அபிவிருத்தி வேகத்தில் இலங்கையே முன்னிலையில் உள்ளது. 2014இல் 7.5 வீத பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது

தம்து காலத்தில் நாட்டில் வியக்கத் தகுந்த முன்னேற்றம் காணப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவிக்கின்றனர். அது உண்மையானால் அக்கட்சி 25 தடவைகள் தேர்தலில் தோல்வியடைந்தது ஏன்? அக்கட்சியை மக்கள் நிராகரித்தது ஏன்? என்பதற்கு அவர்கள் பதில் கூறுவார்களா?

அரசாங்கம் இம்முறை முக்கியமான விடயங்கள் எதுவோ அதற்கு மட்டும் முக்கியமளித்து வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது.

அபிவிருத்தி, பங்களிப்பு, நியாயத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

நாட்டின் சகல துறையினரதும் கருத்துக்களைக் கேட்டறிந்தே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. அரசாங்கம் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கருத்துக்களும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

கடன்கள், வேலைவாய்ப்பு, வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கியுள்ள நிதி, அபிவிருத்தி முன்னேற்றங்கள் ஆகியவற்றை வைத்தே வரவு செலவுத் திட்டத்தை நோக்க வேண்டும். அதனைவிடுத்து ஐக்கிய தேசியக் கட்சி எதனையும் பார்க்காது விமர்சனத்துக்கு மட்டுமே அதை உட்படுத்துவது எந்த விதத்திலும் ஏற்க முடியாது.

உலகின் பொருளாதார முன்னேற்றத்தோடு ஒப்பிடும் போது இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது.

எமது அபிவிருத்தி முன்னேற்றத்தை நோக்கினால் 2011 இல் அது 8.3 வீதமாகவும் 2012இல் 6.4 வீதமாகவும் 2013 இல் 7.3 வீதமாகவும் உள்ளது.

எமது அயல்நாடான இந்தியாவின் அபிவிருத்தி வேக எதிர்பார்ப்பு 2014 இல் 5.6 வீதமே. எனினும் இலங்கை 2014 இல்7.5 வீத அபிவிருத்தி முன்னேற்றத்தை எதிர் பார்க்கிறது.

உலக நாடுகளின் விவசாயத் துறையை நோக்கும்போது எமது நாடு முன்னிலையில் உள்ளது. உலக உணவு அமைப்புக்கு நெல்லை நன்கொடையாக வழங்கும் அளவுக்கு எமது நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது.

சுற்றுலாத்துறையில் நாம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம். 2016இல் இத்துறை மூலம் இரண்டரை பில்லியன் ரூபா வருமானத்தை நாம் எதிர்பார்க்கின்றோம்.

வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையைப் பற்றிக் குறிப்பிடும் போது ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் அது நூற்றுக்கு 9 வீதமாக இருந்தது. எமது அரசாங்கத்தில் கடந்த வருடத்தில் அது 6.4 வீதமாக இருந்ததுடன் இம்முறை அது 5.8 வீதமாகக் குறைந்துள்ளது.

கிராமிய பொருளாதார அபிவிருத்தியை இலக்காக கொண்டே இந்த வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இறுதிக்குள் கிராமிய பொருளாதாரத் துறைபாரிய அபிவிருத்தியை அடையும்.

கிராமிய பொருளாதாரம் பற்றி சிந்திக்க தேவையில்லை என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாக இருந்ததுடன் வெளிநாட்டு இறக்குமதியை மாத்திரமே நம்பி இருந்தனர் என்றார். (அ-2)

## நாவலர் குருபூசை தினமும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் ஆறுமுக நாவலர் குருபூசைநிதியத்தை ஆரம்பித்து வைத்த திரு திருமதி சிவப்பிரகாசம் குடும்பத்தினர் கௌரவிக்கப்படவுள்ளதுடன், இத்தினத்தையொட்டி, நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பும் புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும் இடம்பெறும். (அ-5)

## ரஷ்ய ஜனாதிபதி மஹிந்தவுக்கு வாழ்த்து

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி மூலம் ஜனாதிபதியிடம் தொடர்பு கொண்ட இவர் தனது வாழ்த்தை தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அத்துடன் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த தான் எதிர்ப்பார்த்துள்ளதாகவும் புடின் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற 50பேர் உயிரிழக்க காரணமான விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்ய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் நியமனம்

(கொழும்பு)

ஆயுர்வேத வைத்திய பட்டப் படிப்பை முடித்து வேலையில்லாமல் இருக்கும் அனைவருக்கும் இவ் வருட இறுதியில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதென்று சுதேச மருத்துவத்துறை அமைச்சர் சாலிய திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான நேர்முக பரீட்சை தற்போது நடைபெறுகிறது. ஆயுர்வேத பட்டப்படிப்பை முடித்த 393 பேரும் யுனானி வைத்திய பட்டப்படிப்பை முடித்த 80 பேரும் தொழில் வாய்ப்பின்றி உள்ளமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மேற்கத்தேய மருத்துவ பட்டதாரிகள் எவ்வாறு பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களோ அதே போன்று இவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## 8ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேல்ட்டின் 8ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/இந்துக் கல்லூரியின் பிரதான மண்படத்தில் நிறுவன இயக்குநர் சி.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் என்.செல்வநாயகம், சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.விமலநாதன் , யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எம் .விமலநாதன் அலியான்ஸ் காப்புறுதி நிறுவன பிராந்திய முகாமையாளர், கே.சிறீராம், கௌரவவிருந்தினராக முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எம். விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)



# சிறுவர் அரங்கம்

646

# நல்ல உள்ளம்

ஒருநாள், முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவரது சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஒரு பணக்கார பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது. குழந்தைகள் மேல் மிகுந்த அன்புடையவர் ஞானி. அவர் குழந்தையை அன்புடன் நோக்கினார்.

குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்தது. சித்தானந்தர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருட்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும். ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக்கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.


மலர்களை அர்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்றது. சீடர்கள் புடைசூழ சித்தானந்தரின் உலா தொடங்கியது.

ஒரு வயதான மூதாட்டி ஞானியை தன் வீட்டுக்குள் வரவேற்றாள். சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் ஆப்பிள் பழத்தட்டை அவர் முன் வைத்தார்.

ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவைகளை எடுத்து தன் சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களை சுவைத்து உண்டனர். ஞானியைத் தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருட்களும் கிடைத்து வந்தன. எனவே, இந்த சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்கள் இடம் நகரின் ஒதுக்குப் புறமான பகுதி.



ஏழை விதவைப் பெண்ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

"ஐயனே, நீங்கள் இதைச சாப்பிட வேண்டும்," என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.

தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்ததை பார்த்தார்.

ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லா பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல் தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்தார். சீடர்களும் அவரின் பின்னால் சென்றனர்.

சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. "இதுவரை எல்லா பொருட்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு. திராட்சைப் பழங்களை மட்டும் தன்னந்தனியாய்த் தானே உண்டது ஏன்?" என எல்லாருடைய உள்ளத்திலும் இக்கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக்கேள்வியைக் கேட்டே விட்டார். "நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங்கூட தரவில்லையே... ஏன்?"

"அந்த திராட்சைப்பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன்," என்றார் குரு.

"உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும். சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?"என்றார் சீடரில் ஒருவர்.

"என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண்மையாக இருக்கலாம். ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், "இந்தப் பழம் புளிக்கிறது" என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி முகத்தைச் சுழித்திருப்பீர்கள். அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்தி விடுவீர்கள். அவளது மனது நொந்து போய் விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை."" என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

## 24 11.2013 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639-ஜெரிமையா ஹொரொக்ஸ், முதன்முதலாக வெள்ளிக் கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.
- 1642-ஏபல் டாஸ்மான் வான் டீமனின்; நிலம் என்ற தீவைக் கண்டுபிடித்தார். இது பின்னர் தாஸ்மானியா எனப் பெயர் பெற்றது.
- 1859-சாள்ஸ் டார்வின் உயிரங்கிகளின் தோற்றம் என்ற நூலை வெளியிட்டார். இதன் பிரதிகள் அனைத்தும் முதல் நாளிலேயே முழுவதுமாக விற்பனையாகின.
- 1914-முசோலினி இத்தாலிய சோசலிசக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.
- 1922-துப்பாக்கி ஒன்றை சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஐரியக் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ரொபேர்ட் ஏர்ஸ்கின் சைல்டேர்ஸ் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1940-இரண்டாம் உலகப்போர்: சிலோவாக்கியா அச்சு அணிநாடுகள் அமைப்பில் இணைந்தது.
- 1943-இரண்டாம் உலகப்போர்:ஐக்கிய அமெரிக்கக் கடற்படைக் கப்பல் டராவா என்ற இடத்தில் மூழ்கடிக்கப்பட்டதில் 650 பேர் உயிரிழந்தனர்.
- 1944- இரண்டாம் உலகப்போர்: டோக்கியோ நகர் மீது முதற்தடவையாக அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசின.
- 1965-ஜோசப் மொபுட்டு கொங்கோவின் குடியரசுத் தலைவர் பதவியை இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் கைப்பற்றினார். இவர் 1971 இல் கொங்கோவின் பெயரை சாயீர் என மாற்றினார். 30 ஆண்டுகளின் பின் 1997 இல் இவர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1969-சந்திரனுக்குச் சென்ற அப்பலோ 12 விண்கலம் 3 விண்வெளி வீரர்களுடன் பசுபிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
- 1970-வொஷிங்டனில் பெரும் சூறாவளி நாளன்று கடத்தப்பட்ட விமானம் ஒன்றிலிருந்து டான் கூப்பர் என்பவன் 2 இலட்சம் அமெரிக்க டொலர்களுடன் பாரசூட்டுடன் கீழே குதித்தான். இவனோ பணமோ இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.
- 2002-ரவி வர்மாவின் யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் டில்லியில் 56 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
- 2006-சிங்கள நாளிதழான மௌபிம பத்திரிகையின் தமிழ்ப் பத்திரிகையாளரான முனுசாமி பரமேஸ்வரி ஆயுதக் குழு ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

பிறப்புக்கள்

- 1938-ஆஸ்கர்ரொபர்ட்சன்-அமெரிக்க கூடைப் பந்தாட்ட விரர்
- 1961-அருந்ததிராய்- இந்திய பெண் எழுத்தாளர்

### அருந்ததி ராய்



அருந்ததி ராய் 1961 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி மேகாலயாவின் தலைநகர் சில்லாங்கில் கேரளத்தைச் சேர்ந்த மேரி ரோஷுக்கும் வங்காளத்தைச் சேர்ந்த தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த தந்தைக் கும் மகளாகப் பிறந்தார்.

அருந்ததி ராய் தனது பள்ளி பருவத்திலிருந்தே தானாகச் சிந்திப்பவர். இவர் தனது பல படைப்புக்களில் சமுதாயத்திலுள்ள பெண் அடிமைத்தனம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை, அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கைகள் முதலியவற்றை விமர்சனத்துக்குட்படுத்தினார்.

தன் எழுத்தும் மக்களைச் சென்றடைவதை உணர்ந்த அருந்ததி ராய், நாவல்கள், அரசியல் கட்டுரைகள், விமர்சனங்கள் என பல விதமான படைப்புக்களைப் படைத்து வருகிறார். இவரது படைப்புக்களின் தன்மை பல நேரம் எதனையும் கருப்பு வெள்ளையென்று பிரித்து அடையாளம் காட்டாது. மனிதர்கள், நாடுகள், கொள்கைகள் என்று அனைத்திலும் உள்ள தீமை மற்றும் நன்மையை உணர்ச்சி நிலையிலிருந்து விலகி படைப்பதால் இவரது படைப்புக்கள் உலகில் பல பத்திரிகைகளில் இடம்பெற்றுவருகின்றது.

# வாழ்வின் அழகிய தருணங்கள்!



ஆன்மீகம் 47

## உள்ளம் சார்ந்த விடயம்

அமைதி என்பது நம் உள்ளம் சார்ந்த விடயமே. எந்த இடத்தில் இருந்தாலும் மனம் கூடவேதான் இருக்கும். அமைதியைத் தேடி மலைகளுக்குச் செல்கிறீர்கள் என்றால், மலை அமைதியாக இருப்பதாகத்தான் அர்த்தமே தவிர, நீங்கள் அமைதியாக இருப்பதாக அர்த்தம் அல்ல. இரைச்சல் மிக்க சந்தைக்கு நடுவிலும் அமைதியாக இருக்க முடிந்தால்தான் நீங்கள் அமைதியானவராக இருப்பதாக அர்த்தம்.

மகிழ்ச்சியாக இருக்கும்போது, உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு நீங்கள் அற்புதமான மனிதர்தான். ஆனால், மகிழ்ச்சியின்றி இருக்கும்போது இந்த உலகுக்கு நீங்கள் ஒரு ஆபத்தான மனிதர். நமது மனநிலை நாம் இருக்கும் சூழ்நிலையை வெகுவாகப் பாதிக்கிறது.

உங்கள் வாழ்வின் மிக அழகான தருணங்கள் நீங்கள் மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டு இருந்த கணங்கள் அல்ல. நீங்கள் மன மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நல்ல தருணங்களே. அமைதியும் ஆனந்தமும் வாழ்வின் உச்சக்கட்டநிலை அல்ல. அவை வாழ்வின் தொடக்கமே.

அன்பு என்பது வெறும் பேச்சளவில் இருக்கக் கூடாது. அது செயல் வடிவம் பெற வேண்டும். மற்றவர்களுக்காக பொறுப்பேற்றுக்கொள்வதுதான் உண்மையான அன்பின் அடையாளம் ஆகும். முழுமையான பொறுப்புணர்வில்தான் மனிதன் அற்புதமான அனுபவங்களைப் பெறுகிறான்.

**உடலும் மனமும் இணையட்டும்!**

ஆனந்தமாக இருப்பதுதான் உங்கள் அடிப்படை இயல்பு என்பதை மறவாதீர்கள். நீங்கள் எந்தச் செயலைத் தேர்ந்தெடுத்தாலும் அதைச் செயற்படுத்தும்போது தீவிரமாயிருங்கள். முழு ஈடுபாடு கொண்டு செயலாற்றுங்கள்.

உங்களுக்குள் இருக்கும் ஆக்க சக்தியை தட்டி எழுப்புங்கள். முழு ஈடுபாடு கொண்டு செயலாற்றும்போது மட்டுமே நமக்குள் இருக்கும் ஆக்க சக்தி வெளிப்படத் தொடங்கும்.

### கரையைவிட்டு விலகத் தைரியமில்லாமல் கரையோரமாகவே கப்பலை செலுத்திக் கொண்டிருந்தால் இலக்கை அடைய முடியாது



கரையைவிட்டு விலகத் தைரியமில்லாது. கரையோரமாகவே கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தால் இலக்கை அடைய முடியாது. எனவே, திருப்பங்கள் வேண்டுமானால் வாழ்க்கையில் புதிய முயற்சிகளை எடுத்துத்தான் ஆக வேண்டும்.

இளைஞர்களுக்கான தகுதி வலுவான உடல் அமைப்பு மட்டும் என்று தவறாக எண்ணுகிறோம். திடமான மனம் கொண்டவனே உண்மையில் இளமை உடையவன். எதிர்பாராததையும் எதிர்கொள்ளும் துணிச்சல் நமக்கு வேண்டும்.

பொறாமையும் அச்சமும் நம்முள் உண்டாகும்போது அடுத்தவரை எதிரியாக நினைக்கத் தொடங்குகிறோம். பொறாமை இருக்கும் இடத்திலோ, அச்சம் இருக்கும் இடத்திலோ திறமை மழுங்கிப்போகும். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் (முயற்சியும்) உங்களுக்காகவே என்று எண்ணுங்கள்.


உங்கள் உடல், மனம் இரண்டின் ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்துவதில்தான் உண்மையான வெற்றி அடங்கி இருக்கிறது. அப்போது நம் திறமை முழுவதுமாக வெளிப்படும். வெற்றி எளிதில் நம்வசமாகும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# விடுதலைப் புலிகளின் மீறல்களைக் காரணம் காட்டி, இலங்கை அரசு தனது குற்றங்களை மறைக்க முடியாது!

-கலும் மக்ரே-



...**கேள்வி:** இந்தக் காணொலிப் பதிவுகளின் நம்பகத்தன்மையை ஆராய்ந்தவர்கள் யார்?

**பதில்:** ஒரு பிரித்தானிய தடயவியல் நிறுவனம். இதன் பெயரைக் குறிப்பிட அந்த நிறுவனத்தினர் விரும்பவில்லை. அவர்களது விசாரணைக்காக நாம் பணம் செலுத்தனோம். இந்தக் காணொலிப் பதிவுகள் 'டிஜிறல்' தொழில்நுட்பத்தில் எடுக்கப்பட்டவை. இந்தப் பதிவுகள் செயற்கையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை தடயவியல் வல்லுநர்கள மீண்டும் மீண்டும் ஆராய்ந்தனர். எந்த வகையான தொலைபேசிகளிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதையும் அந்தப் பதிவுகள் எடுக்கப்பட்ட ஒளியின் திசைமூலம் அறியப்பட்டது. இறந்த உடலங்கள் கீழே விழுந்த முறை தொடர்பாகவும் தடயவியல் வல்லுநர்கள் ஆராய்ந்தனர்.

இந்தப் பதிவுகள் போலியானவையா என்பதைப் பரிசோதிப்பதற்கு இறந்த உடலங்களில் இரத்தம் எவ்வாறு பரவியிருந்தது என்பதையும் வல்லுநர்கள் ஆராய்ந்தனர். ஆனால், இதில் தடயவியல் வல்லுநர்கள் மிகவும் நேர்மையாகச் செயற்பட்டனர். இந்தக காட்சிகள் நடிகர்கள்மூலம் எடுக்கப்பட்டவை அல்ல என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தினர். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும் பல்வேறு வல்லுநர்கள் மூலம் இந்தப் பதிவுகளை ஆராய்ந்து உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தினர். இந்தப் பதிவுகள் உண்மையானவை என்பதிலும் தயாரித்தவற்றிலும் நான் நம்பிக்கையாகவும் உறுதியாகவும் உள்ளேன்.

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், இலங்கை அரசாங்கம் போரை வெற்றி கொண்டதைப் பாராட்டி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இலங்கை அரசாங்கம் மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சாட்சியங்கள் கிடைக்கப் பெற்ற பின்னர், ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்திடம் கேள்வி கேட்டது. பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவானது எம்மால் தயாரிக்கப்பட்ட காணொலியைப் பார்வையிட்டதுடன், இது நம்பகமான சாட்சியம் என்பதை ஐ.நாவிடம் அறிக்கையாக சமர்ப்பித்தது. இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவ்வாறான மாற்றங்கள் மேலும் அதிகரித்தன.

எம்மால் தயாரிக்கப்பட்ட காணொலி ஆதாரங்கள் மிகவும் முக்கியமானது என்பதால் இவற்றை உறுப்பு நாடுகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என வல்லுநர் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயததை ஐ.நா மீளாய்வு செய்தது. இது தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றைத் தருமாறு நவி பிள்ளை கோரினார். இந்நிலையில் சனல்-4 ஆல் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் உலகம் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. இலங்கைக்கு எதிராக ஆறுமாதங்களுக்கு ஒருமுறை மிகவும் பலமான தீர்மானம் முன்வைக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

**கேள்வி:** அப்படியாயின் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா மற்றும் ஏனைய அனைத்துலக அமைப்புக்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை? நீங்கள் தயாரித்த திரைப்படத்தை திரையிடுவதற்கு உங்களுக்கு பலர் அனுமதி வழங்காதது ஏன்? இந்தியாவிற்குள் நுழைவதற்கு உங்களுக்கு நுழைவு விசா மறுக்கப்பட்டது ஏன்?.

**பதில்:** நாங்கள் தயாரித்த திரைப்படத்தை வெளியிடுவதைத் தடைசெய்த எவரும் வெற்றி பெறவில்லை. எங்களை எவராலும் தடை செய்ய முடியவில்லை. இலங்கை அரசாங்கம் நாங்கள் திரைப்படத்தை வெளியிடுவதைத் தடுக்க முயற்சித்தனர். இலங்கை அரசாங்கத்தைத் தவிர இத்திரைப்படத்தை எவரும் எதிர்க்கவில்லை. இந்தியாவின் அரசியல் சூழ்நிலை காரணமாகவே என்னால் அங்கு செல்ல முடியவில்லை. நான் தமிழ்நாட்டுக்கு ஒருபோதும் செல்லவில்லை. எனது நிகழ்ச்சிநிரல் அந்தச் சூழலைக் கட்டுப்படுத்தாது. தமிழ்நாட்டுக்கு நான் சென்றுவிடுவேன் என இந்தியா அச்சம் கொள்வதை நான் உணர்ந்து கொள்கிறேன்.

**கேள்வி:** இலங்கையில் நீங்கள் பெற்ற அனுபவம் தொடர்பாக பிறிதொரு ஆவணத்தைத் தயாரிக்கவுள்ளீர்களா?

**பதில்:** இலங்கையில் நான் தங்கியிருக்கின்ற இக்காலப்பகுதி மிகவும் இறுக்கமானது. நான் எவரையும் பழி சுமத்தவில்லை. இலங்கையானது மிகவும் நல்ல நாடாகும். நான் இலங்கையில் வாழும் மக்களை போர்க குற்றச்சாட்டுக்களை அடிப்படையாக வைத்து பிழையாக எடைபோட விரும்பவில்லை. இலங்கையர்களை அவர்களது அதிபரைக்கொண்டு மதிப்பிட விரும்பவில்லை.

**கேள்வி:** நீங்கள் மிகவும் வெறுக்கத்தக்கவர் என இலங்கையர்கள் கருதுகின்றனர். இது தொடர்பில் நீங்கள் எவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளீர்கள்?

**பதில்:** அவ்வாறு இலங்கையர்கள் என்னை வெறுத்திருந்தால் நான் இங்கிருக்க முடியாது. என்னைப் பற்றி மிகவும் தவறான கருத்துக்கள் மக்களிடம் கூறப்படுவதாலேயே மக்கள் என்னை வெறுக்கிறார்கள். நான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என இலங்கை அரச ஊடகத்தின் ஊடாக மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டது. இது மிகவும் அப்பட்டமான பொய். நான் இதனைக் கண்டிக்கிறேன். நான் ஒரு புலி என இலங்கை அரச ஊடகங்கள் கூறுகின்றன. நான் இது தொடர்பில் என்ன செய்ய முடியும் என உண்மையில் எனக்குத் தெரியாது.

நான் இலங்கைத் தொலைக்காட்சிக்கு கருத்துக்களைக் கூறினேன். ஆனால் அவர்கள் எனது குரலைப் பயன்படுத்தவில்லை. ஆனால், பத்திரிகை விமர்சகர் ஒருவர் நான் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர் எனக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான ஒரு சூழலை நான் எனது வாழ்வில் ஒருபோதும் சந்திக்கவில்லை. ஏன் இவ்வாறு நான் குற்றம் சுமததப்படுகிறேன்? நான் ஒரு கூடாத ஊடகவியலாளர் என இந்த மக்கள் கருதுகிறார்களா? இந்த மக்கள் என்னால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை முற்றுமுழுதாக தட்டிக்கழித்து, நான் ஒரு பொய்யன் எனக் கூறுகின்றார்கள். எனது வாழ்வை ஆபத்தில் இட்டுள்ளார்கள். இவ்வாறு செய்தவர்கள் நல்லவர்களா? மன்னிக்கவும், எனக்குப் பித்துப பிடித்து விட்டது.

**கேள்வி:** கிளிநொச்சிக்கான உங்களது பயணத்திற்கு அனுசரணை வழங்கியது யார்? இது தொடர்பாக நீங்கள் ஊடக அமைச்சிடம் தெரியப்படுத்தினீர்களா?

**பதில்:** நாங்கள் விரும்புகின்ற எந்த இடத்திற்கும் நாங்கள் பயணிக்க முடியும் என இலங்கை அதிபர் கூறியிருந்தார். இதனால் நாங்கள் கிளிநொச்சிக்கான எமது பயணத்தை மேற்கொள்ளத் தீர்மானித்தோம்.

**கேள்வி:** குறிப்பாக கிளிநொச்சிக்குச் சென்றதன் காரணம் என்ன?

**பதில்:** வடக்கு தொடர்பாக எனக்கு இரு வேறுவிதமான விபரிப்புக்கள் கிடைக்கப் பெற்றன. 'வடக்கில் எல்லாம் சரியாகவுள்ளது' என இலங்கை அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் தெரிவித்தனர். அவர்கள் வடககில் அமைக்கப்பட்டுள்ள புதிய வீதிகள், பாடசாலைகள் போன்றன தொடர்பாகவும் இங்கு பொருளாதாரம் முன்னேறுவதாகவும் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதாகவும், முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அனைவரும் மீள்புனரமைக்கப்பட்டதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால், தாங்கள் தொடர்ந்தும் இலங்கை இராணுவத்தின் அடக்குமுறைக்குள் வாழ்வதாகவும், சுதந்திரமின்றி வாழ்வதாகவும், பாலியல் வன்முறைகளுக்கு உட்படுவதாகவும், தமக்குச் சொந்தமான பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளதாகவும் தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

(தொடரும்)

# அமெ.வில் இலங்கையின் உற்பத்திகளுக்கு 23 வீதத்திற்கு மேற்பட்ட சந்தை வாய்ப்புகள்

## பிரதியமைச்சர் லக்ஸ்மன் பெருமிதம்

(கொழும்பு)

**இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் மிகவும் முன்னேற்றகரமானதாக உள்ளன. கடந்த ஆண்டில் 269.8 பில்லியன் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருட்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் லக்ஸ்மன் வசந்த பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களை இலங்கை புறக்கணிக்கவில்லை எனக் குறிப்பிட்ட பிரதியமைச்சர் கடந்த வருடத்தில் 29.8 பில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை இலங்கை இறக்குமதி செய்துள்ளது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐ.தே.க. எம்.பி. சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

சஜித் பிரேமதாச எம்.பி. தமது கேள்வியின் போது இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தக உறவு தற்போது காத்திரமாக உள்ளதா எனவும், அமெரிக்க உற்பத்திப் பொருட்களை இலங்கை புறக்கணிக்க முயற்சிக்கின்றதா எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் மிகவும் காத்திரமானதாகவும் முனனேற்றகரமானதாகவும் உள்ளன.

2012ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதுடன் பிரதி வருடமும் இதன் முன்னேற்றம் தொடர்பில் இரு நாடுகளுக்கிடையிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

எமது அமைச்சு, தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து இலங்கையின் ஜீ. எஸ். பி. வரி தொடர்பில் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இதனால் உற்பத்திப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வையை தொடர்ச்சியாகப் பேண முடிகிறது.

ஐக்கிய அமெரிக்காவானது இலங்கையின் ஏற்றுமதியில் 23 வீதத்திற்கு மேற்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு நாடாக தொடர்ந்து இருந்து வருகிறது. இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு அமெரிக்காவில் பெரும் கேள்வி நிலவுவதுடன் 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் 13.76 என்ற கணிசமான வளர்ச்சியை இது எட்டியுள்ளது. இதற்கிணங்க 2012 ஆம் ஆண்டில் 269.8 பில்லியன் பெறுமதியான இலங்கை உற்பத்திப பொருட்கள் அமெரிக்கா வுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அதேவேளை 29 பில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன என்றார். (அ-2)

## ஆஸியிலிருந்து 79 பேர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற நிலையில் அங்குள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 79 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி படகு மூலம் சென்றிருந்த 79 பேரே இரு பிரிவுகளாக நாடு கடத்தப்பட்டுளளனர். இவர்களில் 6 பேர் இவ்வாரத்திலும் 73 பேர் கடந்த மாதத்திலும் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

2012 ஒக்டோபர் மாதம் முதல் ஆயிரத்து 100 பேர் அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரி வந்ததாகவும் இவர்கள் அனைவரும் மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பபட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஐ.தே.க.தலைமைத்துவ பேரவையில் சஜித் எம்.பி. பெயர் உள்ளடக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையில் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவின் பெயரை உள்ளடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவ பேரவை அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என சஜித் பிரேமதாச மற்றும் தலதா அத்துகொரல ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்திருந்தனர்.

எனினும், இந்தப் பேரவையில் குறித்த இருவரினதும் பெயர்களையும் தொடர்ந்தும் உள்ளடக்குவது என தலைமைத்துவ பேரவை தீர்மானித்துள்ளது.

கட்சியை வெற்றிப் பாதைக்கு நகர்த்தும் நோக்கில் தலைமைத்துவ பேரவை உருவாக்கப்பட்டது. கட்சியின் தீர்மானங்களை எடுக்கும் பிரதான நிறுவனமாக தலைமைத்துவ பேரவை செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதத்தில் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இதன் போது கட்சி தலைமைத்துவப் பேரவையின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், தலைமைத்துவ பேரவையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் இதனால் இதில் அங்கம் வகிப்பதில் எவ்வித பயனும் கிடையாது எனவும் சஜித் பிரேமதாச மற்றும் தலதா அத்துகொரல ஆகியோர் தெரிவித்துள்ளனர். (அ-2)



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நடத்தும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான தொடர் இலவசக் கல்விக் கருத்தரங்கின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் உரையாற்றுவதனையும் பங்கு பற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# கசினோ பற்றுள்ள தேசத்துரோக வரவு செலவுத்திட்டமே சமர்ப்பிப்பு

## ஹர்ச டி சில்வா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டம் கசினோ பற்றுள்ள தேசத் துரோக வரவு செலவுத் திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத் திட்டம் ஆடம்பர மான கசினோ வகுப்பினருக்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

லம்போகினி வாகனத்தைப் பயன்படுத்தும் திருடர்களான கசினோ வியாபாரிகளுக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களை விட கசினோ வியாபாரிகள் இந்த அரசாங்கத்தின் மேன்மையானவர்க ளாக மாறி விட்டனர். அத்துடன் வெட்கமின்றி விவசாயிகளுக்கான ஓய்வூதியம் பற்றி இந்த அரசாங்கம் பேசி வருகிறது.

ஆனால், விவசாயிகளுக்கு ஓய்வூதியங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. எதிர்வரும் காலங்களில் தொலைபேசிக்கு 100 ரூபா ரீலோட் செய்யும் நபர்கள் அதில் 25 ரூபாவை ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும்.

அதேபோன்று இந்த நாடு போல் உணவுக்கு வரி விதிக்கும் நாடுகள் உலகில் வேறுளங்கும் இல்லை. உணவுப் பொருட்களில் சிலவற்றுக்கு கிலோ ஒன்றுக்கு 800 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் தொடர்பில் ஜனாதிபதி புதுமையான கதை ஒன்றை கூறினார். அதன்படி 20 ஆயிரம் பால் கொடுக்கும் பசுக்களை இறக்குமதி செய்யவுள்ளதாகவும் பால் கொடுக்கும் ஒரு பசுவின் விலை 8 இலட்சம் ரூபா எனவும் கூறினார்.

எனினும் இதற்காக நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. அத்துடன் அரசாங்கம் மக்க ளுக்கு வழங்கும் நிவாரணங்களை தொடர்ந்தும் குறைத்து வருகிறது.

வெளிநாட்டவர்களுக்கு நாட்டில் உள்ள காணிகள் விற்பனை செய்யப்படாது என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட போதிலும் கொள்ளுப்பிட்டியில் 250 பேர்ச் காணி அண்மையில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார்.(அ-2)

## சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசையும்வினாவிடை போட்டிப்பரீட்சை பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

நயினை.சி.சோமேஸ்வர பிள்ளை தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவிற்கு கொக்குவில் தலையழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை அதிபர் சைவப் புலவர் பா.காசிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வினா விடை போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும்வழங்கிவைப்பார்.

நடைபெற்றவினாவிடைப் போட்டிப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

தரம்-1

ப.மயூசிகா (யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ந.கிருஜன் (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), மோ.துஷாளன் (யா/யாழ்.மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை)

தரம்-2

கு.வைஷ்ணவி (காரைநகர்கிழவன் காடு கலா மன்றம்), கி. ஆர்த்திகா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), க.கீர்த்திகா (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

தரம்-3

சி.யஸ்வந்திகா (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), அ.அனுஸ்ரிகா (யா/திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்), ஜெ.ஜெசிந்தா (யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

தரம்-4

ம.கிருஷ்ணவி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), த.கயூரி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ர.கஜானி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

தரம்-5

சு.ஆரணி (யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கி.சரண்யா (யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), இ.கார்த்தியாயினி (யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).(அ-2)

# இலங்.நல்லிணக்கத்திற்கு அமெரிக்கா உதவும்

## புதிய தெற்காசிய உதவிச் செயலாளர்

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அமெரிக்கா உதவியளிக்கும் என்று அமெரிக்காவின் புதிய தெற்கு ஆசியாவுக்கான உதவி செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி முன்னிலையில் தமது பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் நிஷா வோசிங்டனில் வைத்து இந்தத் தகவலை வெளியிட்டார்.

கஸகஸ்தான்,பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் அரசியல் மேம்பாட்டுக்காகவும் இலங்கையின் நல்லிண்க்கத்துக்காகவும் அமெரிக்காவின் ஒத்துழைப்பு இருக்கும் என்று நிஷா குறிப்பிட்டார்.

நிஷாவின் பெற்றோர் இந்தியாவில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்களாவர்.

தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலராகப் பதவி வகித்து வந்த, ரொபேட் ஓ பிளேக்கிற்குப் பதிலாகவே, நிஷா தேசாய் பிஸ்வால் பதவியேற்றுள்ளார்.(அ-2)

# கடத்தப்பட்ட நபரை விடுவித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்துக

## ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

***மீண்டும் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் கடத்தல், சித்திரவதை என்பவற்றுக்குட்பட்டுள்ளார். இதை ஜனாதிபதி அறிவாரா? இல்லையெனில் இது விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கொண்டு வருகின்றோம். ஜனாதிபதி அவரை விடுவித்து இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுவாரா? அரசாங்கத்தின் மீது நல்லெண்ணம் பற்றிய அக்கறை கொண்டவர்கள் இதுவிடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டாமா? என ஜனநாயக மக்கள் முன்னணி பிரதித்தலைவர் முனைவர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.***

கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சி நகரப்பகுதிக்குள் வைத்துப் பொதுமக்கள் பலர் பார்த்திருக்க பட்டப் பகலில் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தான் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக அழுகை மத்தியில் தெரிவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என மின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன .

இந்த குடும்பஸ்த்தர் இராணுவத்தினரின் தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் தான் விடுதலையாகிய நிலையில் மீண்டும் கடத்தப்பட்டிருப்பதானது பல முன்னாள் போராளிகளின் மனதில் அச்சத்தை விளைவித்துள்ளது.

இவர் கடந்த வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் தீவிர பரப்புரையை மேற்கொண்டு வந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தவருக்கு இந்த நிலைமை வந்துள்ளதெனில் இவரை விடுதலை செய்வது தொடர்பில் வடமாகாண முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் பாரிய பங்களிப்பு இருக்க வேண்டியது அவசியம்.

அவர்கள் இதற்கு குரல்கொடுக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் போட்டா போட்டிக்கு ஆட்கடத்தல் ஒருபொழுதும் ஜனநாயக நடவடிக்கையாக அமையாது என்பதை ஜனநாயக சக்திகள் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தின் ஆதரவாளர்கள், பங்காளி கட்சிகளின் பிரமுகர்கள், இராணுவம், இராணுவப் புலனாயவுப்படையினர், பொலிஸார், அரசாங்கத்தின் மனிதஉரிமை மேம்பாட்டில் அக்கறை கொண்டவர்கள் இத்தகை மனித உரிமை மீறல்களை செய்து சர்வதேச அரங்கங்களில் அரசாங்கத்தற்கு சேறு பூசுகின்ற நிலையை உருவாக்குவதற்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிகை எடுத்து நல்லெண்ணத்தை நிலை நாட்ட வேண்டும் .

உடனடியாக அந்நபரை விடுவிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளாவீடின் இந்த மனிதகடத்தலுக்கும் மனித உரிமை மீறலுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பத்து கோடி பெறுமதியான சந்தன மரக் கட்டைகள் மீட்பு

(கொழும்பு)

டுபாய்க்கு கடத்தப்படவிருந்த 10 கோடி ரூபா பெறுமதியான சந்தனக் கட்டைகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு இலங்கையூடாக டுபாய் நாட்டுக்கு கடத்திச் செல்லப்படவிருந்த 10 கோடி ரூபா பெறுமதியான சிவப்பு சந்தன மரக் கட்டைகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடந்த 9 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் பெட்டி ஒன்றைச் சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் அதனைத் தமது பொறுப்பில் தடுத்து வைத்து, கொள்கலன் பெட்டியை சோதனையிட்ட பொழுது அதில் நான்கு தொன் எடை கொண்ட செஞ்சந்தனக் கட்டைகள் இருந்தமை தெரிய வந்துள்ளது.

கொள்கலன் பெட்டியை இலங்கைக்கு அனுப்பி வைத்த கப்பல் சேவை நிறுவனத்திடம் இது பற்றி விசாரித்து வருவதாக சுங்க திணைக்களத்தின் கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார். (அ-2)



சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொதுநூலக தேசிய வாசிப்பு மாத நிறைவுநாள் நிகழ்வு அண்மையில் நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகர சபை தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# ஜனாதிபதியின் தொலைபேசியை ஒட்டுக்கேட்கிறதா அமெரிக்கா ?

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகின்றதா என்பது குறித்து இலங்கை பாதுகாப்பு தரப்பினர் கவனம் செலுத்தியுள்ளனர்.

அமெரிக்க பாதுகாப்பு முகவர் நிறுவனம், இலங்கை ஜனாதிபதியின் தொலைபேசியை ஒட்டுக் கேட்கின்றார்களா என்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வரும் இலங்கை தொடர்பில் அமெரிக்கா உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

35 நாடுகளின் அரச தலைவர்களது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாக தகவல்கள் வெளியான போதிலும், எந்த நாட்டுத் தலைவர்கள் என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த பட்டியலில் இலங்கை ஜனாதிபதியின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# ஆஸி.பிரதமர் இலங்கை மீது அதிக பாசம் காட்டுவது ஏன்?

## ஹரீன் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் டொனி ஹார்பேட் ஏன் இலங்கைமீது அதிக பாசம் காட்டுகிறாரெனில் ஜேம்ஸ் பாக்கருக்கு அதிக சலுகைகளை இலங்கை அரசாங்கம் வழங்குவதாலேயே டொனி ஹார்பேட் இலங்கை மீது அதிக பாசத்தை பொழிகின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே ஹரீன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தார்மீக சமுதாயமொன்றை உருவாக்குவோம் என சொன்னவர்கள் இன்று கசினோவை இலங்கையில் அனுமதிக்கப் போகின்றனர். மேலும் வரவு செலவுத் திட்டத்தில் நூற்றுக்கு 52 வீதம் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களுக்கு வெறுமனே 47 வீதம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை வந்த போது ஏன் தும்முல்லை சந்தியில் ஆர்ப்பாட்டம் நடத்தவி ல்லை. கமரூன் நாட்டை விட்டு சென்ற பின்னர் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றன. மேலும் தங்காலை கொலை குற்றவாளி விடுதலை செய்யப்பட்டுளளார் என்றார். (அ-2)

# நீராவியடியில் நாவலர் குருபூசை

(மானிப்பாய்)

யாழ்.சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 134 ஆவது குருபூசைத்தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்படத்தில் இடம்பெறவுள்ளன.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதியும் , சைவபரிபாலன சபைத் தலைவருமான இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 134 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு இம்பெற்ற பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் நாவலர் சோலை முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(அ-9-23)

# தனியார் பேருந்துகளுக்கு முற்கொடுப்பனவு அட்டைகள்

(கொழும்பு)

மொபிடெல் நிறுவனத்தின் உதவியுடன் தனியார் பஸ்களுக்காக முற்கொடுப்பனவு அட்டை முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு விரைவில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்க இருப்பதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி. பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அமைச்சரவை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் பேருந்துகளில் டிக்கெட்டுக்குப் பதிலாக முற்கொடுப்பனவு அட்டை முறையொன்றை அறிமுகம் செய்ய தனியார் போக்குவரத்து அமைச்சு முன்னதாகவே நடவடிக்கை எடுத்திருந்தது.

இது தொடர்பில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை என அமைச்சு கூறியது.

இந்த நிலையிலே மொபிடெல் நிறுவனத்தினதும் மக்கள் வங்கியினதும் ஒத்துழைப்புடன் முற்கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# எங்கள் பணமே எங்கள் புதைகுழிகளாய்..!



தமிழ்நாடு அரசு இலங்கை அரசின் இராணுவப் பயிற்சிகளை எதிர்த்து ஒரு இலங்கை எதிர்ப்பு நிலையை உருவாக்கியது. கடந்த மார்ச் மாதம் இந்தியப் பிரிமியர் லீக் எனப்படும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளிற்கு இலங்கையின் சிங்கள விளையாட்டு வீரர்கள் வருவதை தமிழ்நாட்டு மக்கள் எதிர்த்துப் போராட்டங்களை நடாத்தினார்கள்.

அந்தவேளை ஈழத்தமிழர்கள் மீதான படுகொலைகளையும் இன்றும் அவர்கள் கடுமையான சிங்கள இனவெறி அரசின் அடக்குமுறைக்குள் வாழ்வதை எதிர்த்துப் போராடிய தமிழகத் தமிழர்களைக் கடுமையாக விமர்சித்து "நான் தமிழனாக இருக்கலாம். ஆனாலும், முதலில் நான் இலங்கையன். சிங்கள வீரர்களை எதிர்த்தால் அது எனக்குமான எதிர்ப்புத்தான். போர் முடிந்த பின்னர் இலங்கையின் முழுப்பகுதியுமே மிகவும் அமைதியாக உள்ளது. இங்கு தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். அவர்கள் மிகவும் நன்றாக சமவுரிமையுடனே நடாத்தப்படுகிறார்கள்" என்று சிங்கள இனவாத அரசின் ஊதுகுழலாகத் தமிழன் என்ற போர்வையில் உலவும் சிங்களத் தமிழன், சிங்களத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரரான முத்தையா முரளிதரன் தன் இனத்தைப் பணத்திற்காக வித்திருந்தார்.

இப்படியான துரோகத் தமிழனுக்கு இன்று தமிழர்களின் பணத்தில் தம்மை உலகக் கோடீஸ்வரனாக மாற்றியிருக்கும் தொலைபேசி நிறுவனமான லைக்கா மொபைல் பிரித்தானியாவின் ஆசியாவிற்கான நன்கொடை நிறுவனம் ஊடாக இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பவுன்ஸ்களை வழங்கியுள்ளது. இது கிட்டத்தட்ட 52 மில்லியன் இலங்கை ரூபாய்கள். இது நன்கொடைகளிற்காகக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் இவரது சிங்கள விசுவாசத்திறக்காக கொடுக்கப்பட்ட பணமாகவே இப்பணம் சென்றடைந்துள்ளது.

இதற்கு மேலும் விசுவாசமாக, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு வந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கொமரூன் அவருடன் நட்புரீதியாக துடுப்பாட்டம் விளையாடிய போது தமிழ்மக்கள் தொடர்ந்தும் இன்னல்படுவதாகவும் அரசாங்கத்தின் நிவாரண மற்றும் நீதி வழங்கும் முறைமைகள் சீர் பெறவில்லை என்றும் முரளிதரனிடம் தமிழ்ன் என்ற ரீதியில் கொமரூன் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், அந்தக் கருத்தைக் கூட தாங்க முடியாத இந்த சிங்கள விசுவாசத்தமிழன் முத்தையா முரளிதரன் "கெமரூன் மிகவும் பிழையாக வழி நடத்தப்பட்டுள்ளார். அவர் பிரித்தானியாவில் இருந்து வந்தவர். அவருக்கு இங்கு நடப்பது எதுவும் தெரியாது. எனக்கு இங்கு நடப்பது தெரியும். இங்கு முன்னேற்றங்கள் நடந்தே உள்ளது" என்று குமுறியுள்ளார். தமிழர்களிற்கு சர்வதேசம் நீதி வழங்க முற்பட்டாலே கூட அதைத் தடுக்கத் துடிக்கும் இந்த தமிழனுக்கு (?) லைக்கா குழுமம் நிதி வழங்கிக் கொண்டிருக்கிறது.

இதற்கு முன்னதாகவே லைக்கா மொபைல் நிறுவனம் தனது போத்துக்கல் கிளையுனூடாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மருமகனான ஹமால் லலிந்த ஹெட்டியாராச்சியின் பெயரிலுள்ள இலங்கையின் வயர்லெஸஜ் சேவை வழங்கும் நிறுவனத்தின் 95 சதவீதப் பங்குகளைக் கொள்வனவு செய்து அதன் மூலம மாபெ ரும் தொகைப் பணத்தை அவர்களிற்குக் கைமாற்றியுள்ளது.

இதன்மூலம் சிங்கள இனவெறி அரசுடன் தனது கைகளை இறுக்கக் கோர்த்துக்கொண்ட இவர்கள், அடுத்த கட்டமாக சிங்கள அரசின் வருவாயைப் பெருக்கும் நோக்குடன் சிறீலங்கன் விமான சேவையுடன் கைகோர்த்துத் தமது லைக்காஃவ்ளை நிறுவனத்தை ஆரம்பித்துள்ளனர். தமது பயண சேவையின் விருப்பம் மிக்க முக்கிய பங்காளியாக இலங்கை விமான சேவையினைக் குறிப்பிட்டுள்ளதுடன் அதனை உபயோகிக்கும்படி அதீத விளம்பரமும் செய்து வருகின்றனர். தமிழர் நிறுவனமான லைக்கா குழுமம் தமிழன அழிப்பாளர்களுடன் கைகோர்த்து நிற்பது பெரும் அதிர்ச்சிக்குரிய விடயமாகும்.

போர்க்குற்றவாளியான இலங்கை அரசு பிரித்தானியாவுக்குச் சென்றபோது கொதித்தெழுந்த பிரித்தானிய தமிழர்கள் ஜனாதிபதியை துரத்தியடித்தனர். இந்த மக்களின் உணர்வுகளை எல்லாம் தூக்கி எறிந்து அவமதித்துவிட்டு அங்கேயே தளம் அமைத்துக் கொண்டிருக்கும் லைக்காக் குழுமம் அதே இலங்கை அரசுடன் முதலீடு செய்கிறது. லைக்காஃவ்ளை நிறுவனம் மூலம் பல உல்லாசச் சுற்றுலாக்களை உருவாக்கிவெளிநாட்டவர்களிற்கு இலங்கை ஒரு சொர்க்கபுரிபோல் இவர்கள் காட்ட முயல்கின்றார்கள். தமது சுற்றுலாப் பயணங்களைச் சிங்களப் பகுதிகளிற்குள் மட்டுமே உருவாக்கி அது சிங்களவர்கள் மட்டுமே வாழும் பூமிபோலவே காட்டிக் கொண்டு தமிழினப் படுகொலைகளையும் தமிழ் மக்களின் அவல நிலையையும் தமது வியாபாரப் போர்வையால் மறைக்கின்றார்கள். இதன் மூலம் மில்லியன் கணக்கான அந்நியச் செலாவணிகளை இலங்கை அரசாங்கம் பெற வழிவகுக்கின்றார்கள்.

இலங்கை ஒரு அமைதியான நாடாகக் காட்டிக் கொள்ளும் இலங்கை அரசு உலகத்தின் முதலீடுகளைப்பெற்று தன்னை வளர்த்துக் கொண்டு தமிழினத்தை ஒட்டுமொத்தமாக அழித்தொழிக்கும் நோக்கில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பமாகப் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டையும் அதன் முக்கிய அங்கமான முதலீடு தொடர்பான வர்த்தக மாநாட்டினையும் நாடாத்தி வருகின்றது. இம்மாநாட்டின் மூலம் பாரிய வர்த்தக முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சர்வதேசங்களின் அழுத்தங்களையும் சர்வதேச நீதி விசாரணைகளையும் தூக்கி எறிந்துவிட முடியும் என இலங்கை அரசு கணக்குப்போட்டுள்ளது.

இந்த மாநாடு இனப்படுகொலை செய்த போர்க்குற்றவாளி- மனித உரிமைகளை குழி தோண்டிப் புதைத்த நாடான இலங்கையில் நடப்பதை எதிர்த்து சர்வதேசமெங்கும் தமிழ் மக்கள் கொதிநிலையில் இருக்க, தமிழகத் தமிழர்கள் பெரும் போராட்டங்களையும் நடாத்தியும் உயிர்களைச் துச்சமென மதித்துத் தீக்குளித்துப் போராடியும் வந்தனர். சர்வதேச ஊடகங்கள், இலங்கையின் படுகொலைகளை ஆதாரங்களுடன் வெளியிட்டு, இலங்கைக்கு வேறு சில நாடுகளின் அரச தலைவர்கள் செல்லக்கூடாது என்று வற்புறுத்தி வந்தது. கனடா, மொரிசியஸ் போன்ற நாட்டின் அரசாங்கங்கள், இனப்படுகொலை செய்யப்பட்ட நாட்டில் நிகழும் மாநாட்டைப் முற்றாக புறக்கணிக்க, தமிழக மக்களின் போராட்டங்களிற்குப் பயந்து அடுத்த தேர்தலை கருத்திற் கொண்டு இந்தியப் பிரதமர்தான் போகாது அமைச்சர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

அண்மையில் உலக நெஞ்சங்களை உருக்கிய- இசைப்பிரியாவின் படுகொலை தமிழ் நெஞ்சங்களை எல்லாம் எரிமலையாகக் கொதிக்க வைத்துக் கொண்டிக்க இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடாத்தினார் இலங்கை ஜனாதிபதி. ஊடகச்சுதந்திரத்தை துப்பாக்கி முனையில் வைத்துவிட்டு நடாத்திய மாநாட்டிற்குச் சில நிறுவனங்கள் பெரும் தொகையான பணத்தை அரசிற்கு வழங்கி அவரை ஊக்கிவித்துள்ளன. மாநாட்டு நன்கொடையில் பிரதான நன்கொடையாளருக்கு அடுத்ததாகத் தங்க நன்கொடையாளர் என்ற நிலையில் பாரிய பணத்தை வாரி இறைத்திருப்பது இந்த லைக்கா குழுமமே. இதை விடக் கொடுமையாக யாராலும் தமிழனின் முதுகில் குத்திவிட முடியாது.

இன்று தமிழ் மக்கள் பெரிதும் வாங்கி உபயோகிக்கும் லைக்கா அட்டைகளின் பணம் தமிழர்களின் இனப்படுகொலையை மூடிமறைக்கும் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு இலங்கை அரசின் கைகளுக்கு செல்கின்றது. இதன்மூலம் நாம் எல்லோரும்கூட எமக்கான புதைகுழிகளைத் தோண்டுவதற்குப் பங்களித்திருக்கிறோம் என்பதை உணர முடிகின்றதா?

இது போலவே இந்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஊடாக இந்தியாவின் சேரிவாழ் இளைஞர்களின் மேம்பாட்டுக்கான நிதி என்று உதவி வழங்கி இருக்கும் இந்த குழுமம் அவர்கள் வழியில் புலம்பெயர் வாழ் மக்களின் போராட்டங்களை நசுக்க எடுக்கும் தங்கள் முயற்சிகளில் இறங்கியும் உள்ளனர்.

பிரித்தானியாவில் நாட்டிற்குரிய வருமான வரிகள் செலுத்தாது, அரசியற் கட்சிகளிற்கு கையூட்டாக நன்கொடைகள் கொடுத்து முறைகேடான நிறுவனத்தை நடாத்திவரும் இந்தக் குழுமம் பற்றி பிரித்தானியப் பத்திரிகைகள் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுள்ளன. இதேபோல் வரிமோசடி செய்த லைக்கா மொபைலின் நோர்வேக்கிளை சில நாட்களில் அரசாங்கத்தால் மூடப்படுகின்றது.

இந்தியாவின் பிரதான செல்பேசி மற்றும் இணையச் சேவைகளான எயார்டெல், எயார்செல், ரிலையன்ஸ் மற்றும் அரச சேவைகளான பி.என்.எஸ்.எல்.மற்றும் பல சேவைகளின் முக்கிய இணையத்தள மற்றும் செல்பேசிச்சேவைகளின் சேவை வழங்குநராக ஹவாய் நிறுவனம் இருக்கின்றது. இந்தச் சேவை வழங்குநர் நிறுவனம் சீனாவின் மாபெரும் நிறு வனமாகும். இது தனது சேவை வழங்கலினூடாக சுலபமாக இந்தியாவின் தொடர்புகளை உளவு பார்க்க முடிகின்றது. இந்தியாவின் அனைத்துத் தகவல்களையும் தொலைபேசித் தகவல்கள் மூலம் இலகுவாகப் பெறுகின்றது. இந்த உளவின் அடிப்படையிலேயே இலங்கையின் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் 95 வீதப் பங்குகளை வாங்கிய லைக்காக் குழுமத்தின் இலங்கை அரசின் தொடர்புகள் மூலம் மிக இலகுவாகப் புலம்பெயர் தமிழர்கள் உளவு பார்க்கப்படக் கூடும்.


இங்கு இருக்கும்உறவுகள் அங்கு இருக்கும் தமது உறவுகளுடன் பேசும் விடயங்கள் அங்கு இராணுவப் புலனாய்வாளர்களின் தகவல் மையத்திற்குச் செல்வதுடன் அங்கிருக்கும் உறவுகளிடம் பணம் பறிக்கவும் அவர்கள் மீதான அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் இந்தத் தொடர்பாடல்கள் பயன்படும். அதோடு இங்கு இருக்கும் மக்கள் தமது உறவுகளிற்குப் பணம் அனுப்பிவிட்டு அதனை இக்குழுமத் தொலைபேசி மூலம் அங்கு அறிவிக்கும் போது அந்தத் தகவலும் இலங்கை அரசிற்குச் செல்லக் கூடிய அபாயமே உள்ளது.

இதனால் புலம்பெயர் தேசத்திலுள்ள உங்கள் தகவல்கள் சேகரிக்கப்படுவதுடன் உங்கள் உறவுகளின் தகவல்களும் சேகரிக்கப்படும். நீங்கள் அழைக்கும் தொலைபேசிகளில் உங்கள் உறவுகள் பேசும் சில அரசியல் செய்திகள் கூட அவர்களிற்கு ஆபத்தாக முடியும். உங்கள் சில அட்டைகள் கூடப் புலனாய்வுத் துறையினரால் கண்காணிக்கப்படும் அபாயமும் உள்ளது.

எனவே, இது குறித்து அவதானங்கள் மக்களிற்குத் தேவை. உல்லாசப் பயணம், பொதுநலவாய நாடுகளின் முதலீடுகள், தொலைபேசி நிறுவனங்களின் பங்கீடுகள் ஊடான உளவுகள், இலங்கை விமானசேவைகளின் பங்குதாரர்கள் ஆகிய செயல்களைத் தமிழினத்திற்கு செய்து தமிழினத்தின் பணத்திலேயே தமிழனுக்கு குழி பறிக்கும் இப்படியான நிறுவனங்கள் குறித்துத் தமிழர்கள் விழிக்க வேண்டிய தருணம் இது.

சோழ.கரிகாலன்

# கவிதைக் கலசம்





## தம்பியுடையான்...

தம்பி எழுந்தான்
தரங்கெட்ட பொருட்களை
வாங்கத் தயங்குமவன்
தரங்கெட்ட மனிதருடன்
சகவாசம் கொண்டு
தன்னை பெற்றவர்க்கு
தாளாத் துயர் தருகிறான்
தரணியிலவர் தலை குனிய
அவனே அவனாகிறான்

மாவை. நா.கஜேந்திரன்

## சுகம் தரும் கவிதை

காலைத்தென்றல் தொடுவது சுகம்
மாலைத்திங்கள் சுடுவது சுகம்...
அலைகளில் பாதம் நனைவது சுகம்
அருவியில் நாளும் குளிப்பது சுகம்...
பச்சை மரங்களின் நிழல்கள் சுகம்
கொத்து மலர்களின் நிறங்களும் சுகம்...
குழந்தையின் முத்தம் பெறுவது சுகம்
குருவியின் சத்தம் தருவது சுகம்...
ஊரில் சேவைகள் செய்வது சுகம்...
நூறில் ஒருவனாய் வாழ்வது சுகமே...

இ.துவாரகன்
அல்வாய்

## வட்டமிடும் நுளம்பு

காதோரம் ஒன்று ரீங்காரமிடும்
அரிய இராகமென இரசித்திருக்க
கன்னத்தில் குத்தி குருதி உறிஞ்சும்
கணத்தில் காணாமல்போகும் நுளம்பு
தோளில் வந்தமரும் தட்டித் துரத்தாமல்
கையுயர்த்தி ஓங்கி அடி
ஒன்று வைக்குமுன் மாயமாய்
ஓடி மறையும் நுளம்பு
கட்டிலை சுற்றி வலை தொங்கும்
காலில் சிக்கி சற்றே வலை அசைய
சட்டென்று உள்நுழையும்
கண்ணெதிரே வட்டமிடும் நுளம்பு
டெங்கு பரவக் காரணமாய் குப்பை
கிடங்கு வைத்திருந்தான் குற்றம்
கோட்டில் தண்டனை ஐயாயிரம் கட்ட
காசில்லாதவன் சென்றான் சிறை ஏழை
டெங்கு ஒழிப்பாம் கூடி வருகிறார்
கூடவே பின்னால் படப்பிடிப்பாளர்
கூட்டிக் கொளுத்துகிறார் தெருக்குப்பை
கடமை முடிந்ததும் வருகிறார் நுளம்பார்

வேரற்கேணியன்
தென்மட்டுவில்

## நீயும் ஏதோ இறை சிருஷ்டி

நீ கால் பதித்த பாதைகளில்
நடந்து பார்த்தேன்
என் மனதையும்
எம் வனத்தையும்
குடைந்து பார்த்தேன்
நீ அடி வைத்த பாதையில்
புற்கள் துளித்திருக்கின்றன
புல் மணிகள் நிறைந்திருக்கின்றன
உன் நளினாசனமும்
உன் அமுதமொழியும்
துரதிருஷ்டி இல்க்கும்
விளக்கமாகி விளங்குகிறது
அது கலைஞனுக்கு
கலைத்துவமாகிறது
கதையனுக்கு கதையாகிறது
காவியனுக்கு காவியமாகிறது

கவிஞர் ஆ.முல்லைதிவ்யன்


## காதல் கரைந்த கனவுகளை வரும் இரவினில் தேடுவேன்

வானம் தெரிகிற வயல்களில்
பூத்திருக்கிறது செவ்வந்தி
செங்கால் நாரைகள் தவமிருக்கும்
செம்மஞ்சள் மாலையில்
வானம்பாடியின் பாடலை
கண்களால் மொழிபெயர்க்கிறாய்...
அழகிய கவிதையொன்று
உன் விழிகளில் இருந்து புறப்பட்டு
பிரபஞ்சமெங்கும் மகிழ்வினை போர்த்துகிறது
உன் காதல் கரைந்த கனவுகளை
வரும் இரவினில் தேடுவேன் நான்

வேலணையூர் தாஸ்



# மௌனத்தின் தேடல் - 179



## தனிவளை கேட்டதால்

கண்ணிவெடி கண்டும்
கதிகலங்கவில்லை
எலி வளையானாலும்
தனிவளை கேட்டதால்
எகிறிய மனிதரின் இந்தப் படையல்...
உண்ணவா? உறங்கவா? உயிரை எடுக்கவா?
பலி கொடுத்த உறவுகளைப்
பரம்பரையாய் நினைத்து
எலிகளும் எழுமே இனி
பொறிகளுக்கெதிராய்

இரா.பிரம்மா
நெடுந்தீவு

## போட்டி

ஆறறிவு படைத்த மனிதனோ
ஏழாம் அறிவை நோக்கிச்
செல்கையில்
ஐந்தறிவு ஜீவராசியும்
ஆறாம் அறிவைப்
பெற்றுக்கொண்டதோ

செ.நீலாம்பரி
கோம்பு

## விபரீதம்

விந்தைமிகு விஞ்ஞானத்திற்கு
நீதான் வெள்ளோட்டம்
வெற்றி பெறுவதற்காய்
கவசத்துடன் கலங்காது
சோதனைக்கான களத்தில்- நீ
புறப்படுகின்றாய்
விபரீதம் தெரியாமல்

கி.ராகுலன்
பாலிநகர்

## கவனம்

இறால் போட்டு சுறா பிடிக்கும்
ஈனர்கள் என்றறிந்தோ
இசை மீட்க கவசத்துடன்
களமிறங்குகிறாய்
கவனம் பொறுத்திருப்பார்
பொறிவைத்தோர்...

சி.கமலம்
சாவகச்சேரி

## அறிவுள்ள எலி

பொறிக்குள் அகப்பட்டது
அந்தக் காலத்து எலி
இது அறிவியல் யுகத்தில்
பிறந்த அறிவுள்ள
எலி...

ஞா.வதனி
குருநகர்

## மானிட வாழ்வு

மானிடா!
உன் வாழ்வு
எலிப்பொறி போல
சிக்கக்கூடியது
இரையும் வேணும்
உயிரும் வேணும்
கல்வி என்ற கவசம்
அணி கரையேறிடுவாய்

ரூபி, மானிப்பாய்

## இலட்சியம்

பகுத்தறிவுள்ள மனிதர்களே
மாறியது நீங்கள் மட்டுமல்ல
நாங்களும்தான்
மாறுகிறோம் புது உலகிற்காய்
தேடுகிறோம் ஆறாவது அறிவை

நி.சோபனா
விசுவமடு

## இப்படியும் மனிதர்கள்

ஏய் கவசக்காரனே
உன் மூளையை
கழற்றிவிட்டு
உன் வெற்றுத் தலையில்
கவிழ்த்து வைத்திருப்பதெனின்
முன்னே இருப்பதே
என்னவெனத் தெரியாத உனக்கு
உன் தலைமேல்
இருப்பது எதுவென
எப்படித் தெரியும்
இப்படியும் இன்று
இவ்வுலக மனிதர்கள் பலர்

யு.சோபியா
விசுவமடு

## ஆதிக்கப்பொறி

ஆணாதிக்கப் பொறிக்குள்
திருமணம் எனும்
கவசத்துடன்
சுட்டிப் பெண்ணின் கனவு
குட்டித் தடை போட
காலடி வைக்கிறது நினைவில்

தமிழ்த்தோழி
இரா.ஜெயறா

## பாதகம் செய்யாதீர்

மனிதன் என்ற போர்வையில்
பாதகம் செய்யும் அரக்கர்கள்
சுதந்திரமாக நடமாட
முடியுமானால்
நாங்கள் மட்டும் என்ன
விதிவிலக்கா

ஜெ.துஷ்யந்த்
அளவாவோடை

## ஏழாம் அறிவு ஆராய்ச்சி

பொறி வைத்து பிடிக்கவென
பொந்துள் ஒழிந்துள்ளாயா?
பொறியில் விழப்போவதனை
பொறுத்திருந்து பார்
ஆறு அறிவு படைத்ததனால்
அட்டகாசம் புரியாதே- ஏழாம்
அறிவுடன் எதிர்ப்பேன்- என
ஆராய்ச்சி நடக்கின்றதா??

பொ.புனிதன்
வரியப்புலம்

## பொறி

காலங்கள் மாறிக்கொண்டிருக்கின்றது
காட்சிகள் அழிக்கப்படுகிறது- ஆனால்
தமிழனுக்கு பொறிவைத்தவர்களே
விரைவில் அப்பொறியில் வீழ்வார்கள்- இதை
காலம் விரைவில் உணர்த்தும்- ஏனெனில்
உலகம் சுற்றிக்கொண்டிருக்கின்றது-அதுவரை
காத்திருப்போம்...!

உதயம்ரூபன், நயினை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -180



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 28.11.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பாண்டிய நாடு திரை விமர்சனம்




மதுரையில் இருக்கும் தாதாக்களே மிரண்டு போகும் அளவுக்கு மதுரையையும், அங்கு உள்ள தாதாக்கள் பற்றியும் தமிழ் சினிமா இயக்குநர்கள் பல முறை சொல்லிவிட்ட நிலையில், மீண்டும் மதுரைப் பக்கம் அதுவும், அதே ரவுடிசத்தையே மையமாக வைத்து படம் எடுக்க நினைத்த சுசீந்திரனின் தைரியம, ரவுடிகளுடன் மோதும் விஷாலின் தைரியத் தைக் காட்டிலும் பெரிது.

அரசு வேலை பார்க்கும் அண்ணனை கொடூரமாக கொலை செய்து விடுகிறார்மதுரையை கலங்கடிக்கும் தாதா. காதலியை யாராவது பாலோ பண்ணாலே, தன்னுடைய நண்பரின் உதவியுடன், தட்டிக்கேட்கும் அப்பாவி ஹீரோ வான விஷால், தனது அண்ணனை கொலை செய்த தாதாவை கொலை செய்ய முடிவு செய்கிறார்.

இதற்கிடையில், விஷாலின் அப்பாவான பாரதிராஜாவும், தனது மூத்த மகனை கொலை செய்த ரவுடியை ஏதாவது செய்ய வேண்டும் என்று கூலிப்படையின் உதவியை நாடுகிறார். இறுதியில் இந்த இருவரில் யார் தாதாவை தீர்த்துக்கட்டினார்கள்? எப்படி தீர்த்துக்கட்டினா ர்கள்? என்பதுதான் க்ளைமாக்ஸ்.

பழைய ஆட்டோ என்றாலும், புதிய மீற்றர் என்பது போல, பழைய கரு தான் என்றாலும் அதற்கு இயக்குநர் சுசீந்திரன், திரைக்கதை அமைத்திருக்கும் விதம் புதிது.


பீலிங்கையும் ஏற்படுத்தாத லட்சுமி, "ஃபை ஃ பை..." என்ற பாடலில் மட்டும் அமர்க்களமான ஆட்டதைப் போட்டிருக்கிறார்.

சந்தானம் ரொம்ப பணம் கேட்கிறாரா! அப்போ அவர போடுங்கப்பா.., என்ற ரீதியில் சோலோ காமெடியனாக முன்னேறி வரும் சூரி, தான் இதிலும் காமெடி ஏரியாவுக்கு இன்சார்ஜ். ரவுடிசத்திற்கு ஏற்ற மதுரையில் உள்ள நய்யாண்டி காமெடியைக் கூட தவிர்த்திருக்கும் சூரி அவ்வப்போது சில வசனங்களை பேசி ரசிகர்களை சிரிக்க வைக்கிறார்.

விஷாலுக்கு அப்பாவாக இயக்குநர் பாரதி ராஜா நடித்துள்ளார். சராசரி தமிழ் சினிமா அப்பாவைக் கடந்து மனதில் நிற்கும் ஒரு அப்பா கதாபாத்திரம். அதற்கு ஏற்றவாறும் பாரதிராஜா நடித்துள்ளார்.

படத்தில் முக்கிய வில்லனாக வரும் சரத் லோகித்தஸ்வா, உண்மையிலே தாதா கெட்டப் பில் மிரள வைக்கிறார். வித்தியாசமான முக தோற்றம், வில்லத்தனத்திற்கு ஏற்ற கண்கள் என்று பயமுறுத்துகிறார்.

விஷாலின் நண்பராக வரும் விக்ராந்தை அறிமுகப்படுத்தும் இடம் பலே போட வைக்கி றது. படத்திற்கும் விக்ராந்தின் கதாபாத்திரத்தி ற்கும் இடையே ஏதோ பெரிதாக இயக்குநர் சொல்லப் போகிறார் என்ற எதிர்ப்பார்ப்பு இருக்கும் நேரத்தில், திடீரென்று அந்த கதாபாத்திரத்தை காணாமல் போக செய்தது சப்பென்று ஆகிறது.



ஏற்கனவே சண்டைக்கோழி உள்ளிட்ட படங்களில் விஷால, வில்லன்களை அடித்து துவைப்பதைப் பார்த்த ரசிகர்கள், இதில் அப்படி பார்த்து சோர்ந்துவிடக்கூடாது என்று இயக்குநர் நினைத்திருப்பார் போலிருக்கிறது. அதனால், விஷாலை ரொம்பவே அடக்கி ஆண்டிருக் கிறார்.

அதற்கு ஏற்றவாறு அவருடைய கதாபாத்திர த்தையும் பயந்த, அதே சமயம் பிரச்சினையை விரும்பாத கதாபாத்திரமாக அமைத்திருக்கி றார். திமிரிக்கொண்டு வசனம் பேசுவது, சவால் விடுவது என்று எதையும் சொதப்பாமல் திரைக்கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து விஷால் நடித்துள்ளார்.

ராஜா என்றால் ராணி வேண்டும் என்பது போல, ஹீரோவுக்காக ஒரு ஹீரோயினாகவே் வருகிறார் லட்சுமி மேனன். பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியிருக்கும் அம்மணிக்கு இப்படத் தில் டீச்சர் ரோல். காக்க காக்க ஜோதிகாவை மனதில் வைத்து, லட்சுமி மேனனுக்கு மேக்கப் போட்டிருப்பார்கள் போலிருக்கிறது. அதே போல கொட்டன் புடவை, கொண்டை போடப்பட்ட முடி என்று ரொம்பவே பீல் பண் ணியிருக்காங்க. ஆனால், ரசிகர்களிடம் எந்த

டி.இமானி இசையில்இ "ஒத்தக்கட ஒத்தக் கட....", "ஃபை....ஃபை..." ஆகிய பாடல்கள் தாளம் போட வைக்கிறது.

மதுரையில் கட்ட பஞ்சாயத்து உள்ளிட்டவை களில் ஈடுபட்டு சமீபத்தில் கொலை செய்யப்பட்ட பொட்டு சுரேஷை மையமாக வைத்து இப் படத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன்.


சம்பவம் நடந்த இடம் மதுரை என்பதால், மதுரையை தவிர்க்க முடியாமல் போனாலும், பொதுவாக மதுரையை மையமாக வைத்து எடுக்கப்படும் படங்களில் உள்ள ரெகுலர் அம்சங்களை தவிர்த்து, புதிய கோணத்தில் மதுரையை காண்பித்திருக்கிறார்.

பழைய மாவாக இருந்தாலும், அதில் தோசை, ஒனியன் ,ரவா என்று இல்லாமல், விதவிதமான காய்கறிகளை சேர்த்து, புது வகையான உணவாக கொடுத்தால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று "பாண்டிய நாடு" படத்தின் மூலம் சுசீந்திரன் நிரூபித்துள்ளார்.

ஆக, பாண்டிய நாடு படத்திற்கு மக்கள் கொடுக்கும் வரவேற்பால், தற்போது நம்ம இயக்குநர்களில் சிலர் கத்தி, அருவாவோட மீண்டும் பாண்டிய நாட்டுக்கு படையெடுக்க ஆரம்பித்துவார்கள் என்பது உறுதி !

# சிம்புவுடன் மீண்டும் நயன்தாரா; ஆட்சேபனை இல்லையாம் ஹன்சிகா





சிம்புவை காதலிக்கிறேன் ஆனால் 5 வருடம் கழித்துதான் திருமணம் என்று ஒரு ஸ்டேட்மென்டை கொடுத்து விட்டு புதிய படங்களில கமிட்டாகி ராத்திரி பகலாக நடித் துக் கொண்டிருக்கிறார் ஹன்சிகா.

இந்த நிலையில், அவர்களுக்கிடையே கோடு கிழித்து விடும் வேலைகளும் நடக்கத்தான் செய்கிறது. ஆனால், எங்க காதல் டபுள் ஸ்ட்ராங்க். யாரும் எங்களை துண்டாட முடி யாது என்று அவர்கள் கூறி வருகின்றனர்.

இந்த நேரத்தில் 7 வருடங்களுக்குப் பிறகு தனது முன்னால் காதலிநயன்தாராவுடன்மீண்டும சிம்பு ஜோடி சேரப்போகிறார் என்ற செய்திதான் ஹன்சிகா வட்டாரத்தை தூக்கிவாரிப் போட்டி ருப்பதாக செய்திகள் பரவிக் கிடக்கிறது.

அதோடு, நயன்தாராவுடன் சிம்பு மறுபடியும ஜோடிசேரப்போவதை காரணம் காட்டி காதலை ஹன்சிகா பிரேக் அப் செய்து விட்டதாகவும் பரபரப்பு செய்திகள் உலவுகின்றன. ஆனால்இது பற்றி ஹன்சிகாதரப்பை விசாரிக்க தொடர்பு கொண்டால், அவரது தாய குலம், நோ கமெ ண்ட்ஸ் சொல்லி போனை கட் பண்ணி விட்டார்.

ஆனால் விடாமல் துரத்தியபோது கடைசி யாக லைனில் வந்த ஹன்சிகா, சிம்பு, நயன் தாரா இருவரும் முன்னால் காதலர்கள் என்பது எனக்கும் தெரியும். ஆனபோதும், இப்போது அந்த படத்தின் கதைக்கு அவர்கள்தான் பொருத்தமாக இருப்பார்கள் என்கிறபோது சேர்ந்து நடிப்பதில் எந்த தவறும் இல்லை.

மேலும், யாராக இருந்தாலும் சினிமா வில் நடிக்க வந்தபிறகு சொந்த விருப்பு வெறுப் புகளை தள்ளி வைத்து விட வேண்டும். பிடிக் காதவர்களாக இருந்தாலும் அந்த கதாபாத் தி ரத்திற்கேற்ப பிடித்தது போல் நடிக்க வேண்டும்.

தொழிலை மதிப்பவர்கள் யாராக இருந் தாலும் இதைத்தான் செய்வார்கள். அதனால் நயன்தாராவுடன் சிம்பு இணைந்து நடிப்பதை ஒரு நடிகையாய் நான் வரவேற்கிறேன். எனக்கு எந்தவித ஆட்சேபனையும இல்லை என்கிறார் ஹன்சிகா.

# ஸ்ருதிஹாசன் மீது மர்மநபர் தாக்குதல்

## பொலிவுட்டில் பரபரப்பு



மும்பையில்பிரபல நடிகை ஸ்ருதிஹாசனை மர்ம நபர் தாக்கி விட்டு ஓடியதால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நடிகர் கமல் ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி ஹாசன் தமிழ் தெலுங்கு, இந்தி, மொழி திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

தற்போது, தெலுங்கு, இந்தி மொழி படங் களில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். "வெல்கம் பேக் என்ற இந்தி படத்திலும், "குர்ராம் என்ற தெலுங்கு படத்திலும், தற் போது நடித்து வருகிறார். இதனால் அவர் மும்பையில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் தங்கியுள்ளார்.

நேற்று அவர் படப்பிடிப்பில் பங்கேற்று விட்டு தன் வீட்டுக்கு திரும்பினார். அப்போது அவரை பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் திடீரென ஸ்ருதியை தாக்கினார்.

அவரின் கழுத்தை பிடித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஸ்ருதி சுதாகரித்து பதி லுக்கு வீட்டின் கதவை அந்த மர்ம நபர் மீது மோதச்செய்தார். பீதியடைந்த மர்ம நபர் அங் கிருந்து தப்பி ஓட்டம் பிடித்தான்.

இந்த சம்பவம் பொலிவுட் வட்டாரத்தில் நேற்று முன்தினம பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து ஸ்ருதியின் செய்தி தொடர்பா ளரை தொடர்பு கொண்டபோது, "பொலிசில் புகார் எதுவும் அளிக்கப்படவில்லை. ஸ்ருதி பாதுகாப்பாக உள்ளார். இந்த சம்பவத்தால் அதிர்ச்சி அடைந்துள்ளார் என அவர் கூறிய தாக தெலுங்கு இணையத்தளம் ஒன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ந.மோகனரூபன், சுழிபுரம்

அன்பின் வியாசரே!

பள்ளி வாழ்க்கையை பற்றிய உமது கருத்து என்ன?

**எந்தக் காலத்திலும் அழியாமல் மனதிலே பசுமையாய் பூத்துக் கிடக்கும் நினைவுகள் மீண்டும் வருமா என்று ஏங்கத் தோன்றும். கனவு காண்பதை விட வேறு எதுவுமே செய்ய முடியா.**

வி.துஷ்யந்தி, சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

2009 இறுதிப் போரை நிறுத்தச் சொல்லி திரையுலகம் ஏற்பாடு செய்த உண்ணாவிரத நிகழ்வுக்கு வராத அஜித்தை இங்கு சிலர் தலையில் வைத்துக் கொண்டாடுகிறார்களே?

**முதுகெலும்பில்லாதவர்களுக்கு தலைக்குள் ஏதும் இருக்கும் என்று நினைக்கிறார்களா. வித்தை காட்டியவனின் முன் நின்று கையை தட்டும் கும்பலை பற்றி கதைக்காமல் இருப்பது நல்லது.**

விஜிதபாமா,கோண்டாவில்

அன்பின் வியாசர் அண்ணா!

ரீ.வி. மெகா தொடர் பார்த்து இப்போதைய பெண்கள் கணவரை கவனிப்பதில்லை, உணவு கொடுப்பதில்லை, பிள்ளைகளை கவனிப்பதில்லை. ரீ.விக்கு முன் உட்கார்ந்தால் எல்லாவற்றையும் மறந்து இருக்கிறார்களே?

**ரீ.வி.மெகா தொடரில் காட்டப்படுவது போல நடந்து கொள்வது தான் கௌரவம் என்று நினைக்கும் பெண்களின் எண்ணத்தை மாற்றக் கூடிய தொடர் எதுவும் இல்லாமல் போய் விட்டதே!**

இளவரசி, பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

எங்கள் யாழ். மண்ணில் அழகு ராஜா போட்டி நடத்தப்பட்டால் நீர் பங்குபற்றுவீரா?

**முதலில் அழகுராணி போட்டி நடக்கட்டும். அதில் நீர் அழகு ராணியாக வர வாய்ப்புக்கள் உள்ளது. (உமது பெயரை பார்க்க தெரிகிறது) அதன் பின் அழகுராஜா போட்டி பற்றி சிந்திக்கலாம்.**

நீங்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் ?




சாமினி, அல்வாய்.

அன்பின் வியாசரே!

கடவுள் ஏன் கண்ணுக்குத் தெரிவதில்லை.

**கண்ணுக்கு தெரியாமல் இருப்பதனால்தான் கடவுள் என்கின்றோம். தெரிந்தால் மதிகெட்ட மனிதன் காசைக் காட்டி உடையவன் ஆக்கி விடுவானே.**

கபில்ஸ்ரன்

அன்பின் வியாசரே!

நீங்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் ?

**தமிழக கொந்தளிப்பால் தமிழருக்கு தலையையும் இலங்கை அரசுக்கு வாலையும் காட்டும் மன்மோகன் போல் இருக்கமாட்டேன். தலை நிமிர்ந்து, தமிழருக்கு நீதி வழங்கு என்று கேட்ட பிரித்தானிய பிரதமர் கமரூன் போல இருந்திருப்பேன்!**

## பெண்.பொன்.மண் ஆசைகளில் நீங்கள் எதை விரும்புகின்றீர்கள்?

வி.பிரான்சிஸ் , கொழும்புத்துறை

அன்பின் வியாசரே!

பெண்.பொன்.மண் ஆசைகளில் நீங்கள் எதை விரும்புகின்றீர்கள்?

**இவை மூன்றும் என்னிடம் இருக்கிறது. அதில் என்னைப் புரிந்து கொண்ட பெண் (மனைவி) அவளைத் தான் நான் அதிகமாக விரும்புகின்றேன்.**

தர்ஷிகா, யாழ்ப்பாணம்

அன்பின் வியாசர் அண்ணாவுக்கு!

தூக்க மாத்திரை போடாது அயர்ந்து தூங்கும் கணவனை மாத்திரை போடாது தூங்கி விட்டீர்களே என எழுப்பும் மனைவி இதில் யாரைப் ,பார்த்து யார் பரிதாபப்படலாம்?

**அன்றைக்கு மனைவி போட வேண்டிய மாத்திரையை போடவில்லை என்பதை கணவன் உணர்ந்து கொணடால் சரி.**

கொஞ்சம் சிரிங்கப்பா...




வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

அன்பின் வியாசரே!

சீதை இல்லாத இடத்தில் இராமன் இன்னொரு பெண்ணை வைத்துப்பார்க்க வில்லை. இன்றைய உலக இராமர்கள் எப்படி?

**சீதை இல்லாத நேரத்தில் இன்னொரு பெண்ணை வைத்து அழகு பார்ப்பார்கள்.**

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

மனிதர்களிடையே மிக ஆழமாய்ப் பரவியுள்ள சாதிப் பிரிவுகளை அழிக்கவே முடியாதா?

**உலக நாடுகளிடம் இருக்கும் அணு குண்டுகளை விட வீரியமானது இந்த சாதி வெறி. அது அழிவதென்றால் இந்த உலகம் அழிய வேண்டும்.**

ஜெ.துஷ்யந்தன், மயிலங்காடு

அன்பின் வியாசரே!

மிளகாய், மல்லி திரிக்கும் போது சிலவேளைகளில் குறையும். அப்போது வாடிக்கையாளர்களின் கேள்விக்கு என்ன பதில் வழங்கலாம்.

**செய்கூலி சேதாரம் என்பது யுவல் கடைக்கு மட்டுமல்ல மில் கடைக்கும் பொருந்தும் என சொல்லிப் பாரும் உங்கள் கடைக்கு கூட்டம் கொட்டோ கொட்டென்று கொட்டும்.**

**அன்பு வாசகர்களே....!**

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# உரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட போவதில்லை

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

உரோமப் பிரகடனத்தில் கைச்சாத்திடப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. போர்க் குற்றச் செயல் தொடர்பான சர்வ தேச நீதிமன்றம் தொடர்பில் உரோ மப் பிரகடனம் கைச்சாத்திடப் பட்டுள்ளது. இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திடுமாறு அரசாங்கத்தை வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நபர் ஒருவர் வலியுறுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த பிரகடனத்தில் கைச்சாத் திட்டால் புலிச் செயற்பாட்டாளர்களான நெடியவன் மற்றும் உரு த்ரகுமாரன் ஆகியோரை இலங்கைக்கு நாடு கடத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனை ஓர் சதிவலை எனவும், உண்மையில் பிரகடனத்தில் கைச்சாத்திட்டால், இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த வெளிநாட்டவர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

1998ஆம் ஆண்டில் ரோமப் பிரகடனத்தில் கைச்சாத்திட அப் போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மறுத்திருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# அமைச்சர்களை எச்சரித்தார் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஐந்து அமைச்சர்களுக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமான நிலையில் குறித்த அமைச்சர்கள் கூடி பேசிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவை அமர்வுகளுக்கு இடையூறு ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பேச வேண்டுமானால் வெளியே சென்று பேசவும், அவை நடவடிக்கைகளை குழப்ப வேண்டாம் என சபாநாயகர் அமைச்சர்களுக்கு தெரிவித்துள்ளார்.

காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் ஆசனத்திற்கு அருகாமையில் சில அமைச்சர்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, டியூ.குணசேகர, திஸ்ஸ கரலியத்த, பிரதி அமைச்சர் எஸ். எம். சந்திரசேன ஆகியோரே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சபாநாயகரின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து சிலர் தமது ஆசனங்களுக்கு சென்றதுடன் சிலர் வெளியேறிச் சென்றதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)


விண்ணக வாழ்வில்
10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 10 1948
விண்ணில் 24 11 2003



அமரர் திருமதி எட்வேட் றீற்றா

பாரினில் நாம் நிமிர்ந்து நிற்க
பாதை காட்டிய அன்னையே
பத்தாண்டு மறைந்தாலும் -எம்
பாசம் ஒரு போதும் மறையாது
ஞானத் திருவுருவாய் ஞாலத்தில் உதிர்த்தவளே
ஞாயிறின் ஒ ளியாய் நல்லொளி கொடுத்தவளே
வாழ்க்கைத் தேரினிலே வடம் பிடித்து தந்தவளே
வானளவு வளர்வதற்கு ஒளியாக நின்றவளே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அன்னையே உனைப் போல் வருமா
ஆயிரம் ஆண்டுகள் அகன்றாலும்
அன்னையே உன்னை நாம் மறவோம்!

உன் ஆன்மா இறைவனில் இளைப்பாற எந் நாளும் நாம் உனக்கா வேண்டுவோம்

அன்புடன் நினைவு கூரும்
ஞா. எட்வேட்
குடும்பத்தினர்.

"அன்னம்ஸ்"
சங்கானை
021 2250109

# சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

(சென்னை)

**இலங்கைச் சிறைகளிலுள்ள 80 தமிழக மீன்வர்களை உடனடியாக மீட்க வேண்டும். இந்திய அரசு மௌனமாக இருப்பதால்தான் இலங்கைக் கடற்படையினர் துணிச்சலுடன் மீண்டும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை சட்டவிரோதமாக கைதுசெய்து வருகின்றனர் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.**

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றையதினம் கடிதம் ஒன்றை அனுபபியுள்ளார்.

அதில் அவர் கூறி இருப்பதாவது.

இலங்கை கடற்படையினரால் கடந்த 21ஆம் திகதி அப்பாவி தமிழக மீனவர்கள் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டிருப்பதை மிகுந்த மனவேதனையுடன் மீண்டும் ஒரு தடவை உங்கள் கவனத்துக்கு கொண்டு வரும் பொருட்டு இக் கடிதத்தை எழுதுகிறேன்.

"உலக மீனவர் தினம்" அன்று இந்த சட்டவிரோத சம்பவம் நடந்திருப்பது கவலை அளிக்கிறது.



இந்திய அரசு இந்த விடயத்தில் மௌனமாக, உணர்ச்சியற்ற நிலையில் இருப்பதால்தான் மீண்டும், மீண்டும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுகின்றன.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியில் அமைதியாக வாழ்வாதாரத் தொழிலில் ஈடுபடும் போது இலங்கை கடற்படையினரால் கொடூரமாக தாக்கப்படுவது அதிகரித்தப்படியுள்ளது.

இந்திய அரசு இவற்றையெல்லாம் பார்த்து மௌனமாக இருப்பதால்தான் இலங்கை கடற்படையினர் தைரியம் பெற்று மீண்டும், மீண்டும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை சட்டவிரோதமான முறையில் பிடித்துச் செல்கின்றனர்.

பாக். ஜலசந்தியில் சமீபத்தில் 5 படகுகளில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த 20 அப்பாவி தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்கி பிடித்து சென்று விட்டதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

உலகம் முழுவதும் உள்ள மீனவ சமுதாயத்தினர், உலக மீனவர் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில் அப்பாவி தமிழக மீனவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் வேதனை அடையும் வகையில் இத்தகைய செயலை இலங்கை கடற்படை செய்துள்ளது.

தற்பொழுது இலங்கைக்கு கடத்திச் செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி விட்டது. ஆயினும் இந்திய அரசு இதுவரை தனது கடும் எதிர்ப்பை தெரிவிக்கவேயில்லை. நடுக்கடலில் நடக்கும் தாக்குதல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்திய அரசு தூதரக அளவிலேனும் பேச்சு நடத்தவில்லை.

பல்லாயிரக்கணக்கான நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்து வரும் இத்தகைய சம்பவங்களுக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் இந்திய அரசு தொடர்ந்து கண்டு கொள்ளாதியிருப்பதால், தமிழக மீனவர்கள், தங்கள் சொந்த அரசே தங்களை கைவிட்டு விட்டு வேடிக்கை பார்ப்பதாக கடும் மனவேதனையில் உள்ளனர்.

மீனவர்களின் 42 மீன்பிடி படகுகளை இலங்கை அரசு மீளளிக்காது தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இதனால் நமது ஏழை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு கணிசமான அளவுக்கு பொருளாதார இழப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்திய அரசும் பிரதமரும் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு, தூதரக அளவில் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை சிறைகளிலுள்ள 80 தமிழக மீனவர்களையும் உடனே மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு நமது மீனவர்களின் 47 மீன்பிடி படகுகளையும் விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன் என அக் கடிதத்தில் ஜெயலலிதா கூறியுள்ளார்.(2)

# பெல்ஜியம் இளவரசி புதுடில்லி விஜயம்

(புதுடில்லி)

பெல்ஜியம் இளவரசி அஸ்ட்ரிட் நேற்றைய தினம் புதுடில்லிக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்தியா- பெல்ஜியம் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு தொடர்புகளை பலப்படுத்தும் நோக்கிலேயே இவரது விஜயம் அமைந்துள்ளது.

இளவரசியுடன் பெல்ஜியத்திலுள்ள 10 பல்கலைக்கழக நிர்வாகிகள் மற்றும் சுமார் 300 தொழிலதிபர்களும் வருகைதந்துள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங், மத்தியஅமைச்சர்கள் மற்றும் பல் வேறு அரசியல் கட்சி தலைவர்களைச் சந்தித்து பேசுவார்த்தை நடத்தும் இளவரசி தலைமையிலான பெல்ஜியம் குழுவினர் மும்பை மற்றும் சென்னை நகரங்களுக்கும் சென்று பிரபல தொழிலதிபர்களை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நிதியாண்டியில் இந்தியா - பெல்ஜியம் நாடுகளுக்கிடையிலான வர்த்தக பரிமாற்றம் 12.15 பில்லியன் யூரோவை கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(2)




சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்றுவரும் ஈரான் அணுவாயுத விவாதக் கூட்டத்தில் பங்கேற்க வருகைதந்த ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவேத் ஜெரீப்பை படத்தில் காணலாம்.


# அணுசக்தி பேச்சுவார்த்தைக்கு ஜோன் கெர்ரி ஜெனீவா பயணம்

ஈரானின் அணுசக்தி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்றைய தினம் ஜெனனீவா பயணித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த தெளிவான அறிக்கைகளைப் பெறவும், அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்குவது குறித்தும் கடந்த மூன்று நாட்களாக ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

உலக வல்லரசு நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் வெளியுறவுத் தலைவர்களுடன் ஈரான் தரப்பு அதிகாரிகளும், வெளியுறவுத்துறை அமைச்சர்களும் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்ற 7 ஆம்திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின் இறுதிக்



கட்டத்தில் உலகநாடுகள் ஈரானின் அணுசக்தி பயன்பாடு குறித்து கடுமையான விதிமுறைகளைக் குறிப்பிட்டதால் எந்தவித முடிவுமின்றி அந்தக் கூட்டம் முடிவடைந்தது.

தற்போது இந்தப்பேச்சுவார்த்தை திருப்புமுனையுடன் கூடிய நெருக்கத்திற்கு வந்துள்ளதாக நேற்று முன்தினம் வெளியான தகவல் தெரிவிக்கின்றது.

அணுசக்தி பயன்பாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள தடைகளைக் கடந்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படக்கூடும் என்ற தகவலின் பேரில் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சரான ஜோன் கெர்ரி நேற்று ஜெனனீவா பயணித்தார்.

பேச்சுவார்த்தையில் உள்ள வேறுபாடுகளைக் குறைத்து நெருக்கமான ஒரு உடன்பாட்டுக்கு இந்த ஒப்பந்தத்தை நகர்த்தும் விதமாக கெர்ரியின் பயணம் அமையும் என்று அமெரிக்க உள்துறை அலுவலகத்தின் தகவல் செயலாளரான ஜென் சகி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு கொள்கைத் தலைவரான காத்தரின் ஆஷ்டன் ஈரானுடனான இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார். அவருடன் கலந்து ஆலோசித்தபின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

யுரேனியம் வளப்படுத்தும் திட்டத்தில் தங்களின் உரிமைகளும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று முன்னைய கூட்டத்தில் ஈரான் வலியுறுத்தியிருந்தது. இதற்கான சாத்தியமான ஒப்புதல்கள் முன்மொழியப்பட்ட நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் கடந்த புதன்கிழமை தொடங்கியதாக தெரிகின்றது.

ஈரானின் இஸ்லாமியக் குடியரசும் இராணுவத்தை முன்வைத்த அணுசக்தித் திட்டங்களைத் தவிர்ப்பதன் மூலம் மேற்கத்தேய நாடுகளின் சந்தேகங்களைத் தீர்த்து மக்களின் நலனுக்கான பொருளாதாரத் தடைகள் விலக்கப்படவேண்டும் என்ற அக்கறையை முன்வைத்துள்ளது. (2)

# மீனவர்களுக்கு தனித் தொகுதிகள்; பாராளுமன்றத்தில் ஒதுக்க வேண்டும்

(மதுரை)

பாராளுமன்றில் மீனவர்களுக்கெனறு தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும். மீனவர்கள் ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என விடுதலை சிறுத்தை கட்சித் தலைவர் தொல். திருமாளவன் தெரிவித்துள்ளார்.

மீனவர் வாழ்வுரிமை மாநாடு நேற்று முன்தினம் மதுரையில் நடைபெற்றது.

இதில் விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கலந்து கொண்டு உரையாற்றினாரர. அப்போது அவர் கூறியதாவது,

உழைக்கிற மக்களில் எவராக இருப்பினும் அவர்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே இயக்கம் விடுதலை சிறுத்தை கட்சிதான். மலையில் வசிக்கும் மக்களை, மலைவாழ் பழங்குடியினர என்று அழைப்பதைப் போல மீனவ மக்களை கடல்சார் பழங்குடியினர் என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை நூறு சதவீதம் நியாயமானதாகும்.

இந்தியாவில் 3 கோடி மீன



வர்கள் இருக்கிறார்கள. இவர்களுக்கென்று இந்திய அரசியலில் தனித் துறை கூட இல்லாத நிலை உள்ளது. இதுமாற வேண்டும், பஞ்சாயத்துக்கள், சட்டமன்றம், பாராளுமன்றம் என்பவற்றில் மீனவர்களுக்கென்று தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும். மீனவர்கள் ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது. இதை தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள அக்கறை காட்டுவதில்லை. எனவே அவர்களுக்கு பாடம்புகட்டும்வகையில் நாம் பயிற்சி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார். (2)

# ஹெலன் புயலில் சிக்கி 7 பேர் பலி!

ஆந்திரா மாநிலம் மசூலிப் பட்டினத்தை ஹெலன் புயல் தாக்கியதில் 7 பேர் பலியாகியுள்ளனர்.

வங்கக் கடலில் உருவான ஹெலன் புயல் தீவிரமடைந்து ஆந்திர மாநிலம் மசூலிபட்டினம் பகுதியில் மையம் கொண்டிருந்தது. இப்புயல் நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் மணிக்கு 90 கி.மீ. வேகத்துடன் சூறாவளி காற்று கரையைக் கடந்தது.

இந்த ஹெலன் புயலுக்கு ஆந்திராவில் 7 பேர் பலியாகியுள்ளனர்.

15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹெலன் புயலின் தாக்கத்தால் தமிழகத்தின் சில பகுதிகளிலும் புதுவையிலும் மழை கொட்டியது.

இதன் காரணத்தால் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க செல்லவில்லை. (2)

# வீரர்களை நினைவுகூரும் உரிமை சிங்கள மக்களுக்கு உள்ளது போன்று தமிழ் மக்களுக்கும் உண்டு–சஞ்சீவ

(கொழும்பு)

தமிழ்ப் போராளிகள், மரணித்த வீரர்களை நினைவுகூரும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் சஞ்சீவ தெரிவித்துளார்.

கடந்த 11 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு பாதுகாப்புப் பிரிவுகளின் வற்புறுத்தலின் பேரில் பல்கலைக்கழக உயரதிகாரிகள் முடிவெடுத்துள்ள ன[illegible]

யுத்தத்தில் இறந்த உறவுகளை நினைவு கூர்தலை தவிர்ப்பது தான் இதன் நோக்கமாக இருக்கின்றது. கடந்த வருடத்திலும் கூட இவ்வாறான சம்பவமொன்று நடந்தது.

மாவீரர் தினத்திற்குச் சமமாக யாழ். பல்கலை. மாணவர்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றிற்குள் திடீரென நுழைந்த பாதுகாப்புப் படையினர் மாணவர்களை தாக்கி, மாணவர் தலைவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகத் தான் இம் முறையும் பல்கலைக கழகம் மூடப்பட்டிருக்கின்றது.

இந்த முடிவு நாட்டின் ஜனநாயகம் மற்றும் மனித சுதந்திரம் சம்பந்தமாக வரலாற்றில் வைக்கப்படும் கரும்புள்ளியாக இருப்பதோடு, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் நாம இந்த முட்டாள்தனமான முடிவை வெறுப்போடு கண்டிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் கொள்கைகளையும் நாங்கள் அனுமதிக்கா விடினும், தமிழ் மக்கள் இறந்த தமது மக்களை, தமது உறவுகளை நினைவு கூரும் உரிமைக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அவர்களது உரிமைக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். அவர்களது உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதனால் அவர்களது இனவாத மற்றும் வன்முறை அடையாளங்களை தோற்கடிக்கவோ, ஜனநாயக நீரோட்டத்திற்குள் அவர்களை அழைத்து வரவோ முடியாது.

ஆயுதங்களைக் கையிலெடுத்து ஒருவரையொருவர் கொலை செய்து கொண்ட தமிழீழ விடுதலைப் புயினரையோ அல்லது இராணுவ சிப்பாய்களையோ குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது நீதியாகமாட்டாது என்பதோடு, இந்த கொடுமைகளுக்கான பொறுப்பை பதவிப் பேராசைக்காக இனவாதத்தை விதைத்த மற்றும் இப்போதும் அப்படியே செயற்படும் மூன்று இனங்களையும் சேர்ந்த ஆட்சியாளர்களையே குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேணடும்.

இந்த நாசமாய்ப்போன யுத்தத்தின் விளைவாக விலைமதிக்க முடியாத ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லிம் உயிர்களை நாடு இழந்தது. இழக்கப்பட்ட அந்த ஒவ்வொரு உயிருக்கும் மதிப்பொன்று இருப்பதோடு, அவர்களுக்காக கண்ணீர் சிந்தும், வேதனைப்படும் ஏதோவொரு மனித இதயம் இன்றும் கூட இந்த மண்ணில் இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதே போன்று இறந்த அந்த உறவுகளுக்காக ஒரு துளி கண்ணீர் சிந்த, நினைவுகூர இருக்கும் உரிமையை நாங்கள்ஏற்கவும்வேண்டும்.

மரணித்த படை வீரர்களை நினைவுகூர்வதற்கு சிங்கள மக்களுக்கு உள்ள உரிமையைப் போன்றே தமது வீரர்களை நினைவு கூரும் உரிமை தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது. யுத்தம் என்பது இருசாரார்களுக்கிடையில் நடப்பதாகும். எந்தச் சாராரும் மற்றச்சாராரை அங்கீரிப்பது கிடையாது. மதிப்பது கிடையாது. அந்த முரண்களின் காரணமாகவே யுத்தம் நிர்ணயிக்கப்படுகின்றது.

இறந்த எதிர் பக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் துரோகியாகவும் தனது உறுப்பினர் வீரனாகவும்தான் தெரியும்.


இதன்படி பார்த்தால் யுத்தத்தினால் உயிரிழந்த தமிழ்ப் போராளிகள் வீரர்களாவர். இரு சாராரினதும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பிரிவதற்குக் காரணமான நிபந்தனைகளை ஒழித்துக்கட்டி, இருசாராரும் இருசாராரை மதிப்பதாயிருந்தால் மாத்திரமே அந்த நிலையை மாற்றமுடியும்.

எனவே நமது வீரர்களை நினைவுகூருவதற்காக தமிழ் மக்களுக்குரிய உரிமையை ஏற்றுக கொள்வது பயங்கரவாதம் அல்ல.

ஒடுக்கப்பட்ட மனிதர்கள் ஒன்று கூடாதவரை, சிங்களவர்களின் எதிரிகளாக தமிழர்களையும், தமிழர்களின் எதிரிகளாக சிங்களவர்களையும் பார்க்கும்வரை, அவர்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளும் வரை தமது இருப்பு குறித்து ஆளும் வர்க்கத்திற்கு எந்தச் சவாலும் கிடையாது. இந்த எதார்த்தத்தை புரிந்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று பட்டால் அது ஆளும் வர்க்கத்திற்கு மரண வேதனையாக இருக்கும்.

யாழ்.பல்கலைக்கழகத்தை மூடியமை, அவர்களது நினைவு கூர்தலை தடுத்தமை போன்றவற்றன் பின்னணியில் அந்த நோக்கம் இருப்பதை புரிந்துக் கொள்ள வேண்டியதோடு, அதனால் ஏற்படக் கூடிய அழிவை தடுப்பதாயிருந்தால், நாங்கள் அனைவரும் இனவாதத்தை தூக்கி எறிந்துவிட்டு இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வேண்டும். அது ஜனநாயகத்தை கௌரவிக்கும், மனதநேயத்தை மதிக்கும், மீண்டுமொரு கொடூர யுத்தத்தை விரும்பாத அனைவரினதும் பொறுப்பாகும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சிறைக் கைதி உருவாக்கிய 75 அடி உயர பட்டம்




(கொழும்பு)

சிறையிலுள்ள இளம் கைதிகள் இணைந்து உருவாக்கிய 75 அடி உயர பட்டத்தை அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ காலி கடற்கரையில் வைத்து அண்மையில் வானில் பறக்கவிட்டார்.

பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் கொடிகளைக் கொண்டு இந்த பட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறிகஜதீரவின் ஆலோசனைக் கமைய பல்லன் சேன மத்திய நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளம் கைதிகளினால் இந்த பட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டம் விடும் நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சக செயலாளர் ஜீ.எஸ். விதானகே உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளைக்குட்பட்ட நெடுந்தீவுப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு அண்மையில் யழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இடம்பெற்றபோது...

## அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் விலை அதிகரிப்பு

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

புதிய வரி திருத்தங்களுக்கு அமைய சீனி, பருப்பு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், வெங்காயம் உள்ளிட்ட இறக்குமதி உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் சீனி ஒரு கிலோ கிராமுக்கான வரி 30 ரூபாவரையும், ஒரு கிலோ கிராம் தகரத்தில் அடைக்கப்பட்ட மீனுக்கான வரி 102 ரூபா வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பட்டர் ஒரு கிலோ கிராமுக்கான வரி 880 வரையிலும், யோகட் ஒரு கிலோகிராமுக்கான வரி 625 ரூபா வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் வெள்ளைப் பூண்டுக்கான வரி 40 ரூபா வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளை ஒரு கிலோ கிராம் பருப்புக்கான வரி 18 ரூபாவிலிருந்து 22 ரூபா வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காடியுள்ளனர்.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் பழவகைகளுக்கான வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.ஒரு லீற்றர் பெற்றோலுக்கான வரி 27 ரூபாவாலும் ஒரு லீற்றர் டீசலுக்கான வரி 3 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனினும் பெற்றோல் மற்றும் டீசலுக்கான விலை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ-2)

## நாட்டின் பொருளாதார பயணம் குறித்து வரவு செலவுத் திட்டத்தில் எதுவுமில்லை

### ஹந்துன்நெத்தி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் எதிர்கால பொருளாதாரத் திட்டம் என்ன? பொருளாதார பயணம் என்ன? என்பவற்றை விபரிக்காத வெறும் சம்பிரதாய பூர்வமானவரவுசெலவுத்திட்டத்தையே அசராங்கம் முன்வைத்துள் ளது என ஜனாநாயக தேசிய முன்னணியின் எம்.பி.சுனில் ஹந்துன் [illegible]தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், கைவினைப் பொருட்கள், சிறுகைத்தொழில் தொடர்பாகவும் வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அமைச்சர், அதிகாரிகள் மேற்கொள்ளும் விடயமாகும்.

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் என்பது புதிதல்ல. முன்னதாகவே விவசாயிகளிடம் ஓய்வூதியத்திற்கான பணம் பெறப்பட்டது. ஆனால் அது வழங்கப்படவில்லை. இன்று இது புதிய யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

நாம் இதற்காக வெட்கப்பட வேண்டும். பொது நலவாய மாநாட்டுக்கு செலவிட்ட தொகை எவ்வளவு? இதனை எப்படி நிவர்த்தி செய்வது தொடர்பில் பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

நீதிபதிகளுக்கு, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 650 மில்லியன் ரூபாவாகும்.

கடன் வாங்குவதை எதிர்க்க வில்லை. ஆனால் பிழையான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு அதிக வட்டிக்கு கடன் வாங்குவதையே எதிர்க்கின்றோம்.

ஜேம்ஸ் பாக்கருடன் திருமணம் செய்து கொண்ட பொருளாதார பயணமே எமக்கு உள்ளது என்ற உண்மையை அரசாங்கம் வெளியிட்டிருக்க வேண்டும். எதிர்கால திட்டம் எதுவுமே இதில் இல்லை என அவர் தெரிவித்தார். (அ-2)

## அரசாங்கத்திடம் நீண்டகால பொருளாதார தீர்வு இல்லை

### அநுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வெறும் ஆவணமாகும். எந்தவொரு பயனுமற்ற அறிவிப்பாகும். இந்த திட்டத்தால் பொது மக்களுக்கு எந்தவொரு நன்மையும் இல்லை.

இந்த அரசாங்கத்திற்கு குறுகிய காலம் அல்லது நீண்ட காலத்திற்கான பொருளாதார தீர்வு எதுவும் இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்காக அதிகரிக்கப்பட்டுள்ள படியானது ஒரு நாளைக்கு இரண்டு வெற்றிலைக் கூறுகளை வாங்குவதற்கே போதுமானதாகவுள்ளது.

இதேவேளை விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தைக் குறைத்து கசினோவுக்கான வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

தொலைபேசிக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றுஅவர் மேலும் கூறினார். (அ-2)

# கிளிநொச்சியில் இடம்பெற்றது கட்டாயக் கருத்தடையே! மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும்

## யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆணையாளரிடம் வேண்டுகோள்

போசாக்கின்மையைக் காரணம் காட்டி தமிழினத்தைத் திட்டமிட்டு அழிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப் பட்டு வரும் கட்டாயக் கருத்தடை தொடர்பில் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்.சிவில் சமூகப்பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான மனித உரிமைகள் தொடர்பான சந்திப்பின்போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளையடுத்து இலங்கைமனிதவுரிமைகள்ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமான ஆர்.ஆனந்தராஜாவினால் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு வழங்கப்படுமிடத்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, வடக்கு மாகாணத்திற்குட்பட்ட கிளிநொச்சியில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த 50 தமிழ்க் குடும்பப் பெண்களுக்கு போசாக்கின்மையைக் காரணம்காட்டி கட்டாயக் கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கு மூன்று பிள் ளைகள் பிறந்தால் ஒரு இலட்சம் ரூபா வழங்கும் இந்த அரசாங்கம் ஏன் தமிழ்க்குடும்பப் பெண்களுக்கு மட்டும் கட்டாய கருத்தடை செய்ய இவ்வளவு ஆர்வம் காட்டுகின்றது என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

வடக்கில் திட்டமிட்ட சமூகப் பிறழ்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தக் கட்டாய கருத்தடை மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வி எழுவதோடு தமிழினத்தின் விகிதாசாரத்தை குறைக்க சுகாதார அமைச்சு தடைசெய்யப்பட்ட கருத்தடை மருந்தை பயன்படுத்தியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது.

அத்தோடு பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இந்த கட்டாய கருத்தடையை தடுக்க எடுத்த நடவடிக்கைகள் போதுமானதாகவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

குடும்பப் பெண்ணொருவருக்கு கருத்தடை செய்யப்படும் போது அவரது சுயவிருப்பத்தின்பேரில் அவரது கணவனின் அனுமதி பெற்றுச் செய்வதே வழமை. அது சட்டமாகவும் உள்ளது.

ஆனால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட கருத்தடை கட்டாயக் கருத்தடையாகும். அந்தப் பெண்கள் கணவர்மாரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள போதிய கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. இதனைவிட இந்தக் கட்டாயக் கருத்தடைக்கு உரியவர்கள் உடன்படவில்லையெனில் எதிர்காலத்தில் மருத்துவ உதவிகள் எவையும் வழங்கப் படமாட்டாது என எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளனர். எனவே இது திட்டமிட்ட கட்டாயக் கருத்தடையே என வாதிடப்பட்டது.





மேலும் இந்தக் கட்டாயக் கருத்தடை தொடர்பாக உண்மை நிலைமைகளை நேரில் அறியச் சென்ற போது தாங்கள் நல்லிணக்கத்திற்காக இங்கு வந்துள்ளதாக வைத்திய அதிகாரிகள் குறிப்பிட்டதன் ஊடாக அவர்கள் விபசாரத்திற்கு அடித்தளமிட வந்தார்களோ என எண்ணத் தோன்றுகின்றது எனவும் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டதோடு இலங்கை மனித உரிமைகள் ஆணையம் இந்தக் கட்டாயக் கருத்தடைக்கு எதிராக காத்திரமான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென சிவில் சமூகப் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் இணைந்து கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த ஆணையாளர் ஆனந்த ராஜா மேற்படி சம்பவம் தொடர்பாக முன்னதாகவே பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருந்தோம். ஆனால் இதுவரை எழுத்துமூலமாக எந்த விதமான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை. முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

அத்தோடு அமைப்புக்களின் ஊடாகவும் முறைப்பாடுகள் செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப் பின் போது யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக யாழ். மாவட்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.புத்தூர் பகுதியில் பாலியல் வன்புணர்வின்பின் படுகொலை செய்யப்பட்டு கிணற்றினுள் வீசப்பட்ட மைதிலியின் மரணம் தொடர்பிலும் நாச்சிமார்கோவில் தேர்முட்டியடியில் உடல் சிதைந்த நிலையில் மீட்கப்பட்ட லோகராணியின் மரணம் தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவரும் வன்முறை களையும் அநீதிகளையும் தடுக்க பெண்கள் அமைப்புக்களும் மனித வுரிமை செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் முன்வரவேண்டுமெனவும்கோரிக்கை விடுத்தனர். பெண்கள் கடத்தப்படுவதும் பாலி யல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்படுவதும் கொலை செய்யப் படுவதும் ஏற்கமுடியாதவை என வும் தெரிவித்தனர்.

இதேவேளை சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் வயோதிபர் ஒருவரின் வெங்காயச்செய்கை இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டது. ஆனால்அதுதொடர்பாகபொலிஸ் நிலையத்தில் குறித்த வயோதிபர் முறையிட்டிருந்த போதிலும் அது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனைவிட குறித்தவயோதிபரின்முறைப்பாடு பொலிஸாரால் பதியப்பட வுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடக்கு , கிழக்கு மாகாண, அரசாங்க உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் இடம்பெறும்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர் அதில் பங்குகொள்ள வேண்டும். அவ்வாறு பங்கு கொள்வராயின் அவர் இடமாற்றத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாக உடனடியாக தீர்த்து வைக்க முடியும் என்று கோரிக்கை விடப்பட்டபோது அவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதியை அனுப்புவதற்கு அதிகாரம் இல்லை. மேலும் முறைப்பாடுகள் மற்றும் மகஜர்களின் பிரதிகள் மனித உரிமை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப் பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இதனையடுத்து சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இதன்போதுஆணையாளர்ஆனந்தராஜாவினால் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு விசாரணைகளை மேற்கொள்ள மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்த அதிகாரங்களும் போதுமானதாகவில்லை என்றும் கூறினார்.

இதன்போது மனித உரிமைகள் அதிகம் மீறப்படும் மாவட்டம் என்ற வகையில்மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் ஆளணி அதிகரிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை, வலி.வடக்கு மீள்குடியேற்றம், நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் அவலநிலைகள், உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்ப டுகின்றமை, காணாமற் போனவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்களும் சுட்டிக் காட்டப்பட்டன.




மேலும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு கடந்த 15 ஆம் திகதி வருகை தந்திருந்த போது யாழ்.பொதுநூலகத்துக்கு முன்பாக காணாமற் போனவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீது கலகம் அடக்கும் பொலிஸார் மூர்க்கத் தனமாக தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பாகவும் பேசப்பட்டது.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றமனிதஉரிமைகள்தொடர்பான கலந்துரையாடலின் போது ஆணையாளரிடம் பல விடயங்கள் நேரடியாக எடுத்துக் கூறப்பட்டன.

எஸ்.ஆர்.கரன்

# பிறப்பு, இறப்பு பதிவுகளை கணனிமயப்படுத்தும் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் எப்பிரதேசத்தில் பிறந்திருப்பினும் அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கணனி மயப்படுத்தப்படும் நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஜயர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் கணனி மூலமான பிறப்புச் சான்றிதழுக்கான பதிவுகளும் வடமாகாணத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் இது தொடர்பில் மேலும் விபரிக்கையில்,

இலங்கையில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவு நடவடிக்கைகளும் பிரதி வழங்கும் நடவடிக்கைகளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு அமைவாக படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய ஏற்கனவே பதியப்பட்ட விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணனிமயப்படுத்தப்பட்டு கணனிமூலம் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகள் நாட்டின் பல பாகங்களிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதன்மூலம் ஒரு பிரதேச செயலகமூலம் அம்மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்களது சான்றிதழ்களைப் பெற முடியும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கணனிமூலம் சான்றிதழ் வழங்கல் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை அரச வலையமைப்பு மூலம் சகல அலுவலகங்களையும் இணைக்கும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்கிலும் இவ்வேலைத்திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் நிறைவேறியதும் இலங்கையில் எங்கு பிறந்திருந்திருப்பினும் அருகில் உள்ள பிரதேச செயலகம் மூலம் சான்றிதழ் பிரதி பெறக் கூடிய வசதி மக்களுக்கு கிட்டும். இது ஒரு சில மாதங்களில் சாத்தியமாகக் கூடும்.

இதேவேளை தற்போதைய பதிவு முறைக்குப் பதிலாக இலத்திரனியல் பதிவுமுறையை அறிமுகப்படுத்த இலங்கை தகவல் தொடர்பாடல் நிறுவனத்தின் உதவியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய தற்போதைய பதிவுமுறை செயற்படுத்தப்படும் அதேநேரத்தில் இலத்திரனியல் பதிவு முறையும் பல மாவட்டங்களில் அலுவலகமட்டத்தில் படிப்படியாக பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னோடியாக பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்வதற்கு தகவல் வழங்கும் படிவங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டு பலதரப்பட்ட படிவங்களுக்கு பதிலாக ஒரேயொரு புதிய படிவம் வடிவமைக்கப்பட்டு மாவட்டங்கள் தோறும் அறிமுகப் படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

இப்படிவங்களில் பிறப்புச் சான்றில் பதிவு செய்வதற்காக இதுவரை காலமும் பெறப்பட்ட விபரங்களே கணனிமயப்படுத்தலுக்கு தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட்டுள் ளன. இப்படிவ மாற்ற நடைமுறை யானது வடக்கு மாகாண மாவட்டங்களிலும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்வுள்ளது. இதன்படி ஒவ்வொரு பிறப்பு இறப்பு தொடர்பிலும் அவை பதிவதற்கு தேவையான விபரங்களை பெற்றோர் எழுதி சரிபார்த்து ஒப்பமிட்டு கொடுத்தல் வேண்டும். அத்துடன் பெயர்களை தாங்கள் பாவிப்பது போன்று ஆங்கிலத்திலும் எழுதிக் கொடுத்தல் வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் பதிவுகளில் பிழைகள் ஏற்படாது தவிர்க்கப்படுவதுடன் இப்பதிவு முறையானது எதிர்காலத்தில் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது ஆங்கில மொழிபெயர்ப்பு பெறவேண்டிய தேவையுமிருக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது. மணி கட்டின மாடு சொன்னால் கேட்கும்.

– *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச சமூகத்தின் எச்சரிக்கையை உதாசீனப்படுத்தினால் பேராபத்து விளையும்

போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசு உள்ளக விசாரணையை நடத்த வேண்டும் என சர்வதேச சமூகம் வலுவான அழுத்தத்தை கொடுத்து வருகின்றது.

எனினும் சர்வதேச அழுத்தத்தை நளினப்படுத்தும் வகையில் இலங்கை அரசு நடந்து கொள்கின்றது.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுப்பதற்கு கால அவகாசம் கொடுத்துள்ள அதேநேரம் பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது விசாரணை செய் இல்லையேல் விசாரிப்போம் என கடும்தொனியில் கூறியிருந்தார்.

பிரதமர் கமரூன் கருத்தை கனகச்சிதமாகக் கையாள வேண்டிய நிலையில் அமைச்சர்களும் ஆளுந்தரப்பைச் சார்ந்தவர்களும் கமரூன் எங்களுக்கு யார்? என்று கேட்கின்றனர்.

பிரிட்டன் பிரதமர் கமரூன் தனது கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அரசின் முக்கிய புள்ளிகள் கீறிக் காட்டினர்.

இனப்பிரச்சினை மற்றும் வன்னியில் நடந்த போர் என்பன உள்நாட்டுப் பிரச்சினை. இது தொடர்பில் சர்வதேச சமூகம் பேசாதிருக்க வேண்டுமென்பது இலங்கை அரசின் நிலைப்பாடு.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்திக் கொண்டு சர்வதேச சமூகம் எங்களுக்கு அறிவுரை கூற யார் என்று கேட்பதில் இருந்துதான் இலங்கை அரசின் அதிகாரத் திமிர்த்தனம் தெரிகிறது.

உலகில் அழிவுகளும் இழப்புகளுமாக முடிந்த வரலாறுகள் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் இலங்கை அரசு இப்போது காட்டுகின்ற செருக்குத்தனங்களும் ஆணவ மேல்நிலைகளும் இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை. இதனையே இதிகாச புராணங்களும் சுட்டி நிற்கின்றன. ஆக, சர்வதேச சமூகம் விடுக்கின்ற எச்சரிக்கையை உதாசீனம் செய்வது இலங்கைக்கு ஆரோக்கியமானது இல்லை.

பிரிட்டன் பிரதமர் கமரூனை பார்த்து எங்களை எச்சரிக்க இவர் யார்? என்று கேட்பது "பறட்டைக் காட்டுக்கு கரட்டி ஓணான் பஞ்சவர்ணக்கிளி'' என்ற பழமொழிக்கு ஒப்பானதாகும்.

பறட்டைக் காட்டுக்கு கரட்டி ஓணான் பஞ்ச வர்ணக் கிளியாக இருக்கலாம். அதற்காக நான்தான் பஞ்ச வர்ணக்கிளி என்று கரட்டி ஓணான் முடிவெடுத்து அதனை பஞ்சவர்ணக் கிளிக்கு கூறிவிடக் கூடாது என்பது இங்கு முக்கியமான விடயம்.

விரும்பியோ விரும்பாமலோ பிரித்தானியாவின் காலனித்துவத்துக்குள் இலங்கை நீண்டகாலம் அகப்பட்டிருந்தது என்பதற்கு அப்பால்,

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் பிரித்தானிய அரசின் உதவியும் ஒத்துழைப்பும் கணிசமாக இருந்துள்ளது. அதேநேரம் சர்வதேச சமூகத்தின் கருத்துருவாக்கத்தில் பிரித்தானியாவும் அமெரிக்காவுமே அதிக வகிபாகத்தை கொண்டுள்ளன என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

ஆனால், இலங்கை அரசின் பார்வையில் தங்கள் இனம் தவிர்ந்த உலகில் வாழ்கின்ற அத்தனை மனித சமூகமும் இலங்கைத் தமிழர்கள் போன்றோர் என்பதே நினைப்பு.

தமிழ் மக்களாகிய எங்களை வெருட்டி–அதட்டி தேவை ஏற்படும்போது அலுவலை முடித்துச் சண்டித்தனம் நடத்திய பழக்கதோசத்தில் பிரிட்டனையும் வெருட்டும் அளவில் நிலைமை முற்றி விட்டது.

இதன் விளைவு என்ன? என்பதை அனுபவத்தில் கண்டு கொள்வது அர்த்தமற்றது.

ஆகவே, தமிழர்கள் என்ற இனப்பிரிப்பால் எங்களை ஒதுக்கி வைத்தாலும் சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசு நடந்து கொள்கின்ற அணுகுமுறை ஒட்டுமொத்த இலங்கைக்கும் அழிவைத் தரக்கூடியவை.

எனவே இலங்கை அரசு தனது சண்டித்தனக் கலாசாரத்தைக் கைவிட்டு சர்வதேச சமூகத்தின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

கௌரவ சேனைகளின் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கு கௌரவர் பக்கத்தில் எவரும் இருந்ததில்லை.

ஆனாலும் பாண்டவர்கள் தரப்பில் இருந்த பெரியவர்கள், துரியோதனா! நீ செய்வது மகா துரோகம் என்று உரைத்தனர். எனினும் அதனைத் துரியோதனன் செவிமடுத்திலன்.

ஆம்! துரியோதனைக் காப்பாற்றுவதாக இருந்தாலும் அதற்கான அறிவுரை பாண்டவர் பக்கத்தில் இருந்தே வரவேண்டும். அந்த அடிப்படையில் இலங்கை அரசுக்கு தமிழ் மக்கள் கூறக்கூடியது எங்களை இழிவுபடுத்தியது போல சர்வதேசத் தலைவர்களையும் இழிவுபடுத்த முற்படாதீர்கள். அது நாட்டிற்கும் உங்களுக்கும் பேராபத்தைத் தரும்.

### அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகிறார்

# சட்டமா அதிபரின் மீது சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்படும்போதோ விடுதலை அளிக்கப்படும்போதோ சட்டமா அதிபர் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

நாட்டின் சட்ட ஒழுங்கு தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியமித்துள்ள குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எட்டு கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் அண்மையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தைக் கோரியிருந்ததாக சட்டத்தரணி லால் விஜேநாயக்க சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேபோல கடந்த காலங்களில் பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருந்த சந்தேக நபர்களை வழக்கு விசாரணைகளின்றி விடுதலை செய்வதற்கும் சட்டமா அதிபர் நடவடிக்கைகள் எடுத்திருந்தார் என்றும் எனினும் அதற்கான காரணங்களை அவர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறுகிறது.

சட்டமா அதிபரின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் நீதித்துறையின் சுதந்திரம் பெரும்பாதிப்பை எதிர்நோக்கியிருப்பதாகவும் அதனால் மக்கள் நீதிமன்றத்தின் மேல் வைத்திருந்த நம்பிக்கை தகர்க்கப்படுவதாகவும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

எனவே சந்தேக நபர் ஒருவருக்கு எதிரான வழக்கை வாபஸ்பெற வேண்டுமானால் சட்டமா அதிபர் அதற்கான காரணங்களைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நீதியமைச்சின் கீழ் இயங்கி வந்த இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டமை தொடர்பிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.


சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது விடுக்கப்படும் அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே தற்போதைய நிலைமை உள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதி லால் விஜேநாயக்க கூறினார்.

இதேவேளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதி லால் விஜேநாயக்க சுமத்தியுள்ள இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சட்டமா அதிபர் தரப்பின் கருத்துக்கள் உடனடியாக கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(எ–11)

### தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## அனைவருக்குந் தெய்வம் ஒன்றே



வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கங்–குரு
வேந்தன் தந்ததிரு வாக்கு

தினைத்துணைப் போதும்மற வாமல்– சிவத்
தியானத்தில் தினந்தினம் மூழ்கு

மனத்துயரை நீக்கநல்ல மருந்து– குரு
வாக்கியமொரு பொல்லாப்பு மில்லை

# தன்னையே வெல்ல முடியாதவன் பிறர் மீது ஆட்சி செலுத்த முடியாது

### பரமபிதா காட்டிய பாதை

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று கிறிஸ்து அரசர் பெருவிழா. இன்று நமக்கு தரப்படும் வேதாகமப் பகுதியில் கிறிஸ்துவை ஒரு அரசர் என்று நினைவுபடுத்துகின்றது அத்துடன் கிறிஸ்து அரசர் எவ்விதம் மற்ற அரசர்களிடம் இருந்து மாறுபடடவர், இந்த அரசருக்கே உரிய ஒரு முக்கிய பண்பு என்ன என்பதை எமது மனதிற்கு கொண்டுவருகின்றது.

கிறிஸ்து, அன்பினால் ஆளும் அரசர, இவர் தன்னை எவரிலும் திணிக்க மாட்டார். மாறாக, மனித சுதந்திரத்தை மதிப்பவர் கிறிஸ்துவின் அரசாட்சி, இவ்வுலகின் ஆட்சியாளர்கள் போன்றதல்ல, மாறாக, அது தீமையையும் மரணத்தையும் தோற்கடிக்கும் வல்லமையைக் கொண்டது. கடின மனங்களிலும்கூட நம்பிக்கையை எழுப்புவது. கிறிஸ்துவின் அரசவல்லமை, நித்திய வாழ்வை வழங்கும் இறைசக்தி. அது தீமையிலிருந்து விடுதலை தருகிறது, மரணத்தின் ஆட்சியை மேற்கொள்ளச் செய்கிறது.

கிறிஸ்துவைத் தேர்ந்து கொள்வது, இவ்வுலக போக்கின்படி வெற்றிக்கு உதவுவதும் அல்ல, ஆனால் அது, அவர் மட்டுமே தரவல்ல அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் உறுதியளிக்கின்றது.

ஒருமுறை படித்த சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது நல்லது: கலிங்கப் போர் முடிந்தும் அசோகச் சக்கரவர்த்தியின் சேனைகள் வெற்றிப் பெருமிதத்தோடு நாடு திரும்பின. மன்னன் மட்டும் தன் வெற்றியைக் கணிக்க போர்க்களத்தைப் சுற்றிபார்வையிட்டான். நாட்டுக்காக உயிர் துறந்த வீரர்களின் சிதைந்த உடல்கள், அங்கங்களையிழந்து துடிதுடித்த வீரர்கள், ஆறாய் பெருக்கெடுத்து ஓடிய இரத்த வெள்ளம் என காட்சிகள் நீண்டன.

இவையாவும் அணுகுண்டுகளாக அசோகரின் உள்ளத்தைத் துளைத்தன. கணவனையும், மகனையும் இழந்த தாய்க்குலத்தின் அழுகுரல் போர்க்களத்தைச் சுடுகாடாக மாற்றியது. வெற்றிவாகை சூடிய மன்னன் தலை குனிந்து நின்றான். எதிரியை வென்றுவிட்டாய் ஆனால் உன்னையே வெல்லத்தவறி விட்டாயே. என்று அவனுக்குள்ளிருந்தே ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. மண் ஆசைக்கு இத்தனை உயிர்கள் பலியாவதா? என்று ஒரு கணம் சிந்தித்த அரசன், இனி போர் புரிவதில்லை என்று முடிவு செய்தான்.

தன்னையே வெல்ல முடியாதவன் பிறர் மீது ஆட்சி செலுத்த முடியாது தன் அரசு நிலைக்கப் பிறர் உயிரை வாங்குபவன் உண்மைக் காவலனாகவும் இருக்க முடியாது. இன்று கிறிஸ்துவை அரசராகக் கொண்டாடுகிறோமே இது காலத்திற்கு ஏற்றதா? சமுதாயத்தில் சமநிலை ஏற்பட உழைக்கும்போது, வலிமையும், மகிமையும் பொருந்திய அரசராக இயேசுவைக் கொண்டாடுவது முறையா? என்ற கேள்விகள் எம் மனத்தில் எழும்போது இயேசு எப்படிப்பட்ட அரசர்? அவரது அரசாட்சி எதில் அடங்கியுள்ளது? என்று சிந்திக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

இயேசுவின் அரசாட்சி அதிகாரம், படைபலம், பண பலம் இவற்றில் அடங்கியதன்று.இவற்றில் எல்லாம் தன்னையே வென்றவர்தான் இயேசு அதனால் தான் அப்பத்தை உண்ட மக்கள் அவரை அரசாக்க முயன்ற போது அவரால் அதை உதறித் த ளள முடிந்தது.

இஸ்ராயேலின் அரசை மீட்டுத் தரும் மெசியாவாகத் தம்மை மக்கள் எதிர்பார்த்தும் இயேசு அரசன் என்ற வார்த்தையைத் தமக்குப் பயன்படுத்த வில்லை.



பிலாத்து இயேசுவிடம், அப்படியானால் நீ அரசன் தானோ? என்று கேட்டான். இயேசு, அரசன் என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மையை எடுத்துரைப்பதே என் பணி என்றார்.

ஆனால் இறைதந்தையின் அரசோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். இறைதந்தையின் அரசை நிலை நாட்டுவதில்தான் அவரது அரசுத் தன்மை வெளிப்படுகிறது. அவ்வரசை வார்த்தைகளல் போதித்த இயேசு செயல்களில செயல் வடிவம் பெறவும் செய்கிறார். அவரது அரசில் நமக்கும் பங்கு வேண்டுமா? அப்படியென்றால் பசியுற்றோர், சிறுமையுற்றோர், நோயுற்றோர், சிறையுற்றோர் இவர்களுடைய துன்பங்களில் நாமும் பங்கு பெற வேண்டும்.

வசதிகளைக் குறைத்துப் பிறருக்கு உதவ வேண்டும். இதுவே இயேசுவின் அரசில் குடியுரிமைபெற ஒரே நிபந்தனை. நம் வாழ்வு சிறக்கப் பிறரைப் பயன்படுத்துவது இயேசுவின் வழியன்று. மாறாக, பிறர்வாழ்வு உயர நம் வாழ்வைச் செலவிடுவதே அவர் காட்டும் வழி.


மக்கள் அனைவரையும் அரியணை ஏற்றி, அதன் விளைவாக, அம்மக்களின் மனம் எனும் அரியணையில் அமரும் இயேசு என்ற மன்னரின் அரசுத் தன்மையைக் கொண்டாடத்தான் இந்த கிறிஸ்து அரசர் திருநாள்.

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## விஞ்ஞானம்
## பகுதி -II

❖ பகுதி (A) இல் தரப்பட்டுள்ள நான்கு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் விடைகளை எழுதவும்
❖ பகுதி (B)
மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
❖ பகுதி (A) கட்டமைப்பு வினா
எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

அனல் மின்வலு நிலையமொன்றின் அமைப்பைக் கீழே காணலாம்.




1. A. அனல் மின் வலுநிலையமொன்றை பார்ப்பதற்குச் சென்ற மாணவர்கள் அது தொடர்பான குறிப்பொன்றைத் தயாரித்தனர்.

வலுநிலையத்தின் கனலியைச் சுற்றி நீர் கொண்ட செம்புக் குழாய்கள் நெருக்கமாக பொருத்தப் பட்டுள்ளன. தூளாக்கப்பட்ட நிலக்கரியும் சூடாக்கப்பட்ட வளியும் கனலியினுள் செலுத்தப்படு கின்றன. அதனால் ஏற்படுத்தப்படும் வெப்பத்தின் மூலம் குழாய்களினுள் காணப்படும் நீர் மிகை வெப்ப கொதிநீராவியாக மாற்றப்படும் இக்கொதி நீராவி மூலம் சுழலி வேகமாக சுழற்றபபடும்.

1. நன்றாக தூளாக்கப்பட்ட நிலக்கரியை சூடான வளியுடன் கனலியினுள் செலுத்து வதனால் கிடைக்கும் அனுகூல மொன்றைக் குறிப்பிடுக.

(01 புள்ளி)

2.நீரை வெப்பப்படுத்துவதற்கு செப்புக்குழாய் பயன்படுத்துவதால் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

3.மிகை வெப்பக் கொதிநீராவி $541^{O}C$ வெப்பநிலையையும் வளிமண்டல அமுக்கத்தைப் போல 173 மடங்கு அமுக்கத்தையும் கொண்டது. இக்கொதி நீராவி கொண்டுள்ள சக்தி வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

4. வலு நிலையத்தில் உற்பத்தி செசய்யப்படும் மின்னின் அழுத்த வேறுபாட்டை கிலோ வோல்ற்று 20இலிருந்து 220 வரை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்கு X என்னும் உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது.

a. X எனக் குறிக்கப்பட்ட உபகரணத்தைப் பெயரிடுக.

(01 புள்ளி)

b. மின் ஊடுகடத்தலில் மின் அழுத்த வேறுபாட்டை அதிகரிப்பதனால் கிடைக்கும் நன்மையொன்றை குறிப்பிடுக?

(01 புள்ளி)

B.அங்கிகளின் இறந்த படிவுகளில் இருந்து நிலக்கரி தோன்றுகின்றது.

1.இவ்வாறான எரிபொருட்களை அழைக்கும் விசேட பெயர் யாது?

( 01 புள்ளி)

2. நிலக்கரியில் கந்தக் கழிவுகள் காணப்படுகின்றன. இந்நிலக்கரி தகனமடைவதனால் வெளியேறும் வாயுக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

a.......................................................
b.......................................................

(02 புள்ளிகள்)

3. இவ்வாயுக்களினால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக.

a.......................................................
b.......................................................

(02 புள்ளிகள்)

C.வலுநிலையத்தில் உபகரணங்களைக் குளிரச் செய்வதற்குப் பயன்படுத்திய நீரின் வெப்பநிலை $90^{O}C$ வரை சூடாகின்றது. இப்பெருமளவான நீர் மீண்டும் கடலுடன் சேர்க்கப்பட முன்னர் சூழல் வெப்பநிலைக்கு அண்மித்த வெப்பநிலை கொண்ட நீராக மாற்றப்படுகின்றது.

1. இந்நீர் கடலுக்குள் சேர்வதனால் முதலில் பாதிப்புக்குள்ளாக்கும் உயிரினம் எது?

(01 புள்ளி)

2. இவ்வாறு இவ் உயிரினம் பாதிப்படைவதற்குக் காரணம் யாது?


(01 புள்ளிகள்)

3.மின்வலு நிலையத்தின் சுற்றுப்புறச் சூழலில் காணப்பட்ட தாவரங்களின் இலைகள் சிறியதாகவும் பளபளப்பாகவும் காணப்பட்டன. இத்தாவரம் எச் சூழல் தொகுதியில் வாழ்வதற்கான இசைவாக்கங்களைக் கொண்டுள்ளது.

(01 புள்ளி)

02. A.இளம் காசித்தும்பைத் தாவரத்தண்டின் குறுக்கு வெட்டு முகத்தின் நுணுக்குக் காட்டித் தோற்றத்தை கீழே காணலாம்.

காசித்தும்பைத் தண்டின் குறுக்கு வெட்டு முகம்




1.காசித்தும்பைத் தாவரம் அடங்கும் தாவரக் கூட்டம் எது?

(01 புள்ளி)

2.A இலுள்ள கலங்களின் கலச்சுவரைவிட B இல் உள்ள கலங்களின் கலச்சுவர்கள் தடிப்பானது. இதற்கான காரணம் யாது?

(01 புள்ளி)

3. இழையம் E ஐப் பெயரிடுக?

4. இழையம் E காசித்தும்பையின் வளர்ச்சியின் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது எனக் கூறுக.

(01 புள்ளி)

5.A,B இழையங்களினால் கொண்டு செல்லப்படும் பதார்த்தங்களைக் குறிப்பிடுக.


A.................................................. B ..................................................

(02 புள்ளி)

6. காசித்தும்பை தாவரத்தில் D என்னும் பகுதியில் காணப்படும் இழைய வகையைக் குறிப்பிடுக?

(01 புள்ளி)

B. விலங்கு மேலணி இழையமொன்றை நுணுக்குக் காட்டியினூடாக பார்த்த போது மாணவன் ஒருவன் அகலத்தை விட உயரமான கலங்களைக் கண்டான். அவன் அவதானித்த உருவைக் கீழே காணலாம்.




இந்த இழையத்தை பின்வரும் நியதிகளுக்கு அமைய இனங்காணுங்கள்

1. a கலத்தின் உயரம், அகலத்திற்கு அமைய

.......................................................................................................

(01 புள்ளி)

b. மேற்பரப்பின் தன்மைக்கு ஏற்ப

.......................................................................................................

(01 புள்ளி)

2. (i) மேலே (i) b குறிப்பிட்ட இழையம் சுவாசத் தொகுதியில் அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடுக?

(01 புள்ளி)

3.இவ்விழையம் அவ்விடங்களில் அமைந்திருப்பதால் கிடைக்கும் நன்மை ஒன்றைக் குறிப்பிடுக?

(01 புள்ளி)

C வாயுப்பரிமாற்றத்தை வினைத்திறனுடன் மேற்கொள்ள கட்டமைப்பு ரீதியாக சுவாசப்பை அடைந்துள்ள இரண்டு இசைவாக்கங்களைக் குறிப்பிடுக.

a..................................................
b..................................................


(02 புள்ளிகள்)

5. சுவாசப்கையில் உட்சுவாசவளி அடையும் மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

a..................................................
b..................................................

(02 புள்ளிகள்)

03. A




அசற்றலீன் வாயு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அமைப்பை மேலே காணலாம்.

1.இங்கு X எனக் குறிப்பிடப்பட்டுள்ள பதார்த்தத்தை இனங்காண்க.

(1 புள்ளி)

2. இங்கு நடைபெறும் தாக்கத்திற்குரிய பூரணமற்ற சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

$CaC_2 + X \rightarrow Y + C_2H_2$

இங்கு Y ஐ இனங்காண்க?

(1 புள்ளி)

3. அசற்றலீன், x,y ஆகிய பதார்த்தங்களின் பயன்பாடுகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அட்டவணையில் உள்ள இடைவெளிகளை இப்பதார்த்தங்களைக் கொண்டு நிரப்புக.

| | பதார்த்தம் | தொழில் |
|---|---|---|
| (a) | .............................. | கட்டடத் தொழிலில் சுண்ணாம்புச் சாந்து தயாரிப்பதற்குப் பயன்படும் |
| (b) | .............................. | முனைவுக் கரைப்பானாகப்பயன்படும் |
| (c) | .............................. | உலோங்களை ஒட்டி இணைக்க எரி பொருளாகப் பயன்படும் |

(3 புள்ளிகள்)

4. அசற்றலீனின் சார் அணுத்திணிவைக் கணிக்க (C-12,H-1)

(1 புள்ளி)

(தொடரும்)

# இராஜதந்திர அணுகுமுறை...

கடந்த வியாழக்கிழமை இந்தியா அறிவித்துள்ளது.

இவ்விரு நாடுகளும் தனியாகப் பிரிந்து செயற்பட விரும்பவில்லை எனவும், இருநாடுகளும்ஒன்றாகஇணைந்து பணியாற்ற வேண்டிய தேவை உள்ளதாகவும் இந்தியா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு அரசியலால் வெளிவிவகாரக் கொள்கை பாதிக்கப்படாத எந்தவொருநாடும்இல்லை என அது குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில இந்தியப் பிரதமர் பங்கேற்காததால், இந்தியா தனது செலவாக்கை இழந்து விட்டதாகக் கருத முடியாது எனக் குறிப்பிட்டுள்ள இந்திய மத்திய அரசின் உயர்மட்ட வட்டாரங்கள், தனதுகருத்தைவெளிப்படுத்தும் விதத்தில் இந்தியாவானது பிரித்தானியாவிலிருந்து வேறுபட்டு நிற்கிறது எனவும் தெரிவித்துள்ளன.

இலங்கையுடனான எமதுஉறவுகள்மேலும் தொடரும். கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாதமை இவ்விரு நாடுகளின் உறவுகளில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையலானஉறவுமேலும பலமானதாக இருக்கும் என இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நாங்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையுள்ளது. இவ்விரு நாடுகளும் தனித்துச் செயற்பட முடியாது.

இவ்விரு நாடுகளும் இணைந்து முகங்கொடுக்கவேணடிய பல்வேறு விவகாரங்கள் உள்ளன. இத்தகைய விவகாரங்களை இவ்விரு நாடுகளும் இணைந்து கையாளும் என இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளனஎனஅவ்வூடகம் தெரிவித்துள்ளது. (எ-11)

## வலி.வடக்...

இவ்வீடு உடைப்பு நிறுத்தப்பட்டிருந்ததோடு பொதுநலவாய மாநாடு முடிவடைநதகையோடு மீண்டும் வீடு உடைப்பு தொடர்ந்து விட்டதாக பலராலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (எ-4)

## பொலிஸா...

இத்தாக்குதல் சம்பவத்தினால் இராஜகிராமப் பகுதி நேற்று மாலை பெரும் பதற்றம் நிறைந்ததாக காணப்பட்டது.

இது தொடர்பாக குறித்த குடும்பத்தினரால் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-1)

# வலுவான நிலையில் ஆஸி

முதலாவதுஆஷஸ டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடந்து வருகிறது. முதல் இனனிங்ஸில் அவுஸ்திரேலியா 295 ரன்னும், இங்கிலாந்து 136ரன்னும்எடுத்தன.

159 ரன் முன்னிலையுடன் 2-வது இனனிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 2-ம் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 65 ரன் எடுத்து இருந் தது. நேற்று 3-ம் நாள் ஆட்டம் நடந்தது.

ரோஜர்ஸ் 16 ரன்னிலும் வோட்சன் 6 ரன்னிலும் ஆட்டமழுந்தனர். வோர்னர - கிளார்க் சிறப்பாக ஆடி சதம்அடித்தனர். வோர்னர் 124 ரன்னிலும் கிளார்க் 113 ரன்னிலும் வெளியேறினர்.

தேநீர் இடைவேளைக்கு பின் அவுஸ்திரேலிய அணி இரண்டா'வது இன்னிங்ஸில் 7 விக்கெடடுக்கு 401 ரன்கள் எடுத்து 560 ரன் முன்னிலை பெற்று டிக்ளேர் செய்தது. ஜோன்சன் 39 ரன்னுடனும். சிடில் 4 ரன்னுடனும் அவுட்டாகாமல் இருந்தனர்.

இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு கார்பெர்ரி (0), டிராட் 9 ரன்னில் விக்கெட்டை பறிகொடுத்தனர். 3-வது நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டை இழந்து 24 ரன்கள் சேர்த்தது. குக் 11 ரன்னுடனும், பீட்டரசன் 3 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

# பிரதமரை தலை...

முதல்வர் ஜெயலலதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று பிரதமர் மன்மோகன் சங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

தமிழக மீனவர்கள் 80 பேரும், அவர்களின் படகுகளும் இலங்கை வசம் உள்ளது என்றும், அவர்களை வடுவிக்க நடவடிக்கைஎடுக்கவேணடும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக மீனவர்களையும், படகுகளையும் மீட்க தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது என்றும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக மீனவர்களை தொடர்ந்து சிறை பிடிப்பதை இலங்கை நிறுத்திக் கொள்ள வேணடும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி எச்சரிக்கை விடுத்தார்.

சென்னைவிமான நிலையத்தல் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மனவர்கள் பிரச்சினை குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை அரசிடம் பேசியுள்ளார் என்று நாராயணசாமி கூறினார்.

மேலும், மீன வர்கள் பிரசசினைக்கு தர்வுகாண டிசம்பரில நடைபெறும் மீனவ சமுதாய கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

# மனித உரிமைப் பேரவை...

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் பிரித்தானிய மீண்டும் அங்கத்துவம்பெற்றுள்ள நிலையில், கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பஙகேற்கச்சென்றிருந்தார்.

தனதுபயணத்தின் நிறைவில் கொழும்பில்கடந்த 16ஆம்திகதி சனிக்கிழமை நடத்தியிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள்மற்றும்மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் சுயாதீனமான ஒரு விசாரணையை மேற்கொள்ள வேணடும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் . இலங்கை அரசாங்கம் அவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளாது விட்டால், அது தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளுமாறு ஐககிய நாடுகள் சபையிடம் பிரித்தானியா கோரிக்கை விடுக்கும் என அவர் இதன் போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனால் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தொடர் இலங்கை என்றும் எதிர்கொண்டிருக்காத நெருக்கடிகளை எதிர கொள்ளும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

47அங்கத்துவநாடுகளைக் கொண்ட ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் 14 அங்கத்துவ நாடுகளைத் தெரிவு செய்ய கடந்த 11ஆம் திகதி தேர்தல் இடம் பெற்றிருந்தது. இத் தேர்தலில் பிரித்தானியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், கியூபா, அல்ஜீரியா, வய்ட்நாம், சவூதி அரேபயா, மசிடோனியா, மாலைதீவு, மெக்சகோ, மொரோக்கோ, நமீபியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிக்க தெரிவு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மூன்று வருடங்களுக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் இந்நாடுகள் அங்கத்துவம் வகிக்கப் போகின்றன.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் இந்தியாவும் இலங்கைக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் எனவும் மேற்குறிப்பிட்ட இராஜதந்திர வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் அமெரிக்காவால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவு தெரிவித்திருந்தது.

இலங்கையின் மனிதவுரிமை மீறல் விவகாரங்கள் இந்தியாவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கத்துக்கு கடும அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இந் நிலையில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என மேற் குறிப்பிட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் இரண்டு முக்கிய நாடுகளான பிரித்தானியாவும், இந்தியாவும் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ளும்போது, இத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு ஐ.நா. மனிதவரிமைகள்ஆணைக் குழுவில் அங்கத்துவம்வகிக்கும்ஏனைய பொதுநலவாய நாடுகளுக்கும் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் என்றும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

2014 - 2016 ஆண்டு காலப்பகுதியில் ஐ.நா மனிதவரிமைகள்ஆணைக் குழுவில் பிரித்தானியா, இந்தியா, பாகிஸ்தான், நமீபியா, தென்னாபிரிக்கா, கென்யா மற்றும் மாலைதீவு உள்ளிட்ட ஏழு பொதுநலவாய நாடுகள் அங்கத்துவம் வகிக்கும்.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்மற்றும்மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பதிலளிக்க வைப்பதற்கான சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்எனஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பொதுநலவாய நாடுகள்ஊடாக அழுத்தங்களைஏற்படுத்தமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. (எ-11)


# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி வேலாயுதபிள்ளை



வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி வேலாயுதபிள்ளை அவர்கள் (23.11.2013) நேற்று சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மார்க்கண்டு வேலாயுதபிள்ளை (யா/வேம்படி மகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற சிற்றூழியர்) அவர்களின் அன்பு மனைவியும்,

உதயகுமார்,சசிக்குமார்(NEW STYLE PARK), நந்தினி, விஷ்ணுகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

கார்த்திகா,செல்வராசா (சுகிர்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கஜானன், தேனுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.11.2013 ஞாயிற்றுக்கிழமை (இன்று) 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் : NEW STYLE PARK
உரிமையாளரும், குடும்பத்தினரும்.

(C-5561)





# புலனாய்வாளரின் செயற்பாட்...

மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை என்பவருடைய வீட்டிற்கு சென்ற படைத் தரப்பின் புலனாய்வாளர்கள் அவருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இச்சம்பவம் மற்றும் காணாமல் போனோர் தொடர்பில் குரல் கொடுத்து வருவோருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களைக் கண்டித்து மன்னாரில் நேற்று முன்தினம் பேரணி ஒன்று இடம்பெற்றிருந்தது.

மன்னார் பிரஜைகள்குழு, தேசிய மீனவ ஒத்துழைப்புப்பேரவை மற்றும் மன்னார் மாவட்ட காணாமல் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின சங்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியில் மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் அடிகளாரும் கலந்து கொண்டார்.

மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகிய இப்பேரணி, மன்னார மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இதன்போது மன்னார் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும், இப்பேரணியில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது மன்னார் மாவட்டத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில் முன்னின்று செயற்படுபவர்களுக்கு புலனாய்வுத்துறை என்ற பெயரில் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொலிஸ் அதிக[illegible]களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப்பேரணி மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று, ஜனாதிபதிக்கு வழங்கும் முகமாக மனு ஒன்றை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தது. (எ-11)

## கவன...

வுப் பிரிவினராலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலைய[illegible] மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரிகனகராஜ் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் போனவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்த வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் காணாமல் போன உறவுகளைத் தேடும் உறவுகளில் ஒருவருமான திருமதி அனந்தி சசிதரன (எழிலன்) இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்ட பின்பு இனம் தெரியாத நபர்களினால் தொடர்ந்து தனக்கு அச்சுறு[illegible]தல் விடுக்கப்பட்டு வ[illegible]வதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-6)


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 25-11-2013 | 30-11-2013 | 02-12-2013 | 07-12-2013 |

(சி-5399)

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



**Jet D Express**

**Courier Service**

விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்



| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

(C-5553)

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

இல. 27, முதலாம் மாடி, நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place, Wellawatta, Colombo - 06. T.P : 0112363873, 0776509909.



**நிரந்தர தொழில்**

நிரந்தர தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம்/கோடியல்/தேயிலை/கோழி இறைச்சி/பெயின்ட்/தண்ணீர்ப் போத்தல்/டொபி/ஆடை/சவர்க்காரம்/Keels போன்ற தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர், லேபல், பொதியிடல், தரம்பிரித்தல் பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் தேவை. உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/- 25000/- 30000/- (நண்பர்கள்/குழுக்கள்/ தம்பதியினர் வருகை அன்றே வேலைவாய்ப்பு.

(C-5544) 0771116770 , 0777117661



**German Language Academy**

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் துறை சார்ந்த ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் புதிய வழிமுறைகளில் A1பரீட்சைக்கு ஏற்றவாறு Audio, Vedio மூலம் மிகவும் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது.

ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் மொழிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

அவதானிப்பு : 29.10.2013 செவ்வாய்க்கிழமை எமது German Language Academy நிறுவனம் பற்றி பத்திரிகையில் சிறப்புச் செய்தியில் பிரசுரமாகியது குறிப்பிடத்தக்கது.

GERMAN LANGUAGE ACADEMY
No. 23, Palaly Road, Jaffna.
T.P : 0779707322

N Soft Academy
Vairavar Kovil Road,
Vairavar Puliyang Kulam, Vavuniya.

(4528)

இந் நிறுவனத்தில் ஒரே ஒரு ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகிறது. தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்.



**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-5529)



**IELTS Special Class**

ஜனவரி 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்பு திங்கள் - வெள்ளி வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும்

ஆரம்பம் 25-11-2013

IELTS™



- INDIVIDUAL TRAINING
- UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்கு சமீபமாக)

Tel 0755435089 0778803887



**காணி விற்பனைக்கு**

320/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் உள்ள 2 பரப்பு 16 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 0729324438

(4569)



**உடனடியான வேலை**

அனுபவமுள்ள / அற்ற அனைவருக்கும் தொழில் கப்பல் புனர்நிர்மாணத்துறையில் வெல்டர் பெயின்டர் / தச்சு / சாதாரண ஊழியர் / விமான நிலையத்தில் (தனியார்) கிளீங் / காகோ / கேட்டரீஸ் / லொன்றி போன்ற பிரிவுகளுக்கு ஆண்-பெண் 18-45 வயது. சம்பளம் 18000 - 25000/- தொழில் அடிப்படையில் 'விசேடம்' சிங்களம் பேசக் கூடியவர்கள்.

தொடர்புகளுக்கு 0775561883, 0774312176

(C-5545)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.